பக்கங்கள்: 16 + XII
விலை:20 ரூபா


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.
**சன்சிகா நகைமாடம்**
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 01, வெள்ளிக்கிழமை 14.04.2017 | கதிர் 160

# தீர்வில் நம்பிக்கை இழக்கவில்லை

## புத்தாண்டு பிறக்கும் தருணத்தில் மனம் திறக்கின்றார் சம்பந்தன்



கொழும்பு, ஏப்ரல் 14

**"இலங்கையின் நீடித்த இனப்பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு காண்பதற்குப் பொன்னான சந்தர்ப்பம் கிட்டியிருக்கின்றது. அதனைப் பயன்படுத்துவதற்காக, அதில் நேர்மைத் திறனுடனும் முழு அர்ப்பணிப்புடனும், ஈடுபாட்டுடனும் தமிழர் தரப்பு பங்குபற்றுகிறது என்பதை உலகுக்குக் காட்டுவது முக்கியமாகும். தீர்வு முயற்சிகளில் நம்பிக்கை இழக்காமல் முழுப்பங்களிப்பு வழங்கி வருகின்றோம்."**

**-தமிழ், சிங்களப் புத்தாண்டு பிறக்கும் சமயத்தில் நேற்று முன்னிரவு 'காலைக்கதிர்' நாளிதழ் மூலம் தமிழ் மக்களுக்கு இப்படி மனம் திறந்து கூறினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.**

"தமிழ்மக்களின்பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய வகையில் அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்குப் பொன்னான ஒரு வாய்ப்பு – சந்தர்ப்பம் - ஏற்

பக்கம் 14 >>>

வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் அபிமானிகள் அனைவருக்கும்
'காலைக்கதிரின்'
ஏவிளம்பி தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



உள்ளே >>>

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை மே மாதத்திலும் கிடைக்காது?

ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து இலங்கை அரசாங்கம் மீண்டும்ஜி.எஸ்.பி.வரிச்சலுகையைப்பெறுவதற்குநிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகள் அதிகம் உள்ளன எனவும், மே மாதம் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச் சலுகை வழங்க அனுமதிக்கப் போவதில்லை எனவும் இலங்கைக்குப் பயணம் செய்துள்ள ஐரோப்பிய நிபுணர் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

பக்கம் 14 >>>

# தமிழகத்துக்குச் சட்ட விரோதமாகப் படகில் 3 பிள்ளைகளுடன் தப்பிச் சென்ற யுவதி!



கொழும்பு, ஏப். 14

மாமியார்கொடுமைகாரணமாக இலங்கையிலிருந்துதமிழ் பெண் ஒருவர் தன் குழந்தைகளுடன் படகு மூலம் தமிழகத்

பக்கம் 14 >>>

# வவுனியாப் போராட்டம் இன்று 50 ஆவது நாளில்!

## விரிவான நடவடிக்கைக்கு ஏற்பாடு

இன்று புத்தாண்டுத் தினத்தன்று வவுனியாவில் மாபெரும் போராட்டத்தை நடத்தத் தாங்கள் திட்டமிட்டுள்ளனர் எனத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வவுனியா

பக்கம் 14 >>>

அளப்பு அருணாசலம்



அப்ப... ஐயா என்ன சொல்லுறார்? தீர்வு வருமா? வராதா?

## வேலையற்ற பட்டதாரிகள் விடயம்:

# ஜனாதிபதியின் செயலாளர் நாளை யாழில் முக்கிய செய்தி வெளியிடுவார்!

யாழ்ப்பாணம், ஏப்.14

வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகள் குறித்து நாளை பிற்பகல் 3 மணிக்கு ஜனாதிபதியின் செயலாளரும், ஸ்ரீலங்கா சுதந்திரப் பட்டதாரிகள் சங்கச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனின்

பக்கம் 14 >>>

# இலங்கை 'அமைதிப்' படைகளின் ஹெய்டித் 'திருவிளையாடல்கள்'!

கொழும்பு, ஏப். 14

2004 இற்கும் 2007 இற்கும் இடையில் ஹெய்டியில் பணியாற்றச் சென்ற 900 இலங்கைப் படையினரில் 134 பேர் அந்த நாட்டின் சிறுவர், சிறுமியர்களை - 12 வயதுப் பரா

பக்கம் 14 >>>

## 'காலைக்கதிர்' நாளை மட்டும் வெளிவராது

புதுவருடப் பிறப்பான இன்று 'காலைக்கதிர்' ஊழியர்களுக்கு விடுமுறை. அதனால் நாளை சனிக்கிழமை மட்டும் 'காலைக்கதிர்' வெளிவராது. மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முதல் வழமை போல 'காலைக்கதிர்' உங்கள் கைகளுக்குக் கிடைக்கும்.

-நிர்வாகத்தினர்.

# புதுவருட நிகழ்வுகளைக் குழப்புவோர் உடனடியாகக் கைதுசெய்யப்படுவர்

## யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

சித்திரைப் புதுவருடப் பிறப்பைக் கொண்டாடும் யாழ்.குடாநாட்டுமக்களுக்குப்பொலிஸார் உரிய பாதுகாப்பு வழங்குவார்கள் எனத் தெரிவித்துள்ள யாழ். பிராந்தியசிரேஷ்டபொலிஸ்அத்

பக்கம் 14 >>>

# சர்வதேச நீதிமன்றுக்கு ஏன் செல்ல முடியாது?





**சுமந்திரனின் விளக்கம் நாளை**

இலங்கையில் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், அடிப்

பக்கம் 14 >>>

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப்புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
உங்கள் நாவிற்கு இனிய ஐஸ்கிறீம் வகைகளைச் சுவைத்து மகிழ நாடுங்கள்
**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7327
இல.526, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4945
இல.213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தெ.பே: 021 221 6660
No.6055 Steeles Ave E, Toronto, ONT, MIX OA7, Canada. T.P: 0014162925464

# சர்வஜன வாக்கெடுப்பை நடத்த இது சரியான தருணம் இல்லை

## இரகசியப் பேச்சில் தீர்மானித்த ஆளும், எதிர்க்கட்சிகள்

கொழும்பு, ஏப்.14

புதிய அரசமைப்புத் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த இது தருணம் இல்லை என்று அரசமைப்புத் தொடர்பான அரசு மற்றும் எதிர்க்கட்சி என்பன தீர்மானித்துள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க் கட்சி தலைவர் ஆர். சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன், அமைச்சர்களான மலிக் சமரவிக்கிரம, நிமால் சிறிபால டி சில்வா, அனுர பிரியதர்சன யாப்பா, ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், ரிஷாத் பதியுதீன் மற்றும் இராஜாங்க அமைச்சர் திலான் பெரேரா ஆகியோருக்கு இடையில் அண்மையில் சந்தித்து பேசியுள்ளனர்.

இவர்களின் இந்தச் சந்திப்பின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள் எது என்று அரச தகவல்கள் தெரிவிக் கின்றன. எனினும் இந்தச் சந்திப்பு இடம்பெற்ற திகதி எது என்று அரச பத்திரிகை வெளியிடவில்லை.

இதேவேளை, இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் மனந்திறந்து தமது கருத்துக்களை முன்வைத்ததாக எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசமைப்பு ஒன்றின் அவசியம் குறித்து அவர் இதன்போது வலியுறுத்தியபோதும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் அதற்கான தருணம் இதுவல்ல என்றும் முழுமைப்படுத்தப்பட்ட வரைபு ஒன்றை தயாரித்து அதனை நாடாளுமன்றத்தில் முன்வைக்கலாம் என்று ஜனாதிபதியும் பிரதமரும் இதன்போது வலியுறுத்தியுள்ளனர் என்று இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பரவலாக்கம் என்ற விடயத்துக்காக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைக் குறைந்தளவிலாவது வைத்துக்கொள்ளவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தமிழ் முற்போக்குக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா மக்கள் காங்கிரஸ் என்பன வலியுறுத்தின.

எனினும், நாட்டு மக்களுக்குத் தாம் வழங்கிய உறுதிமொழிக்கு ஏற்ப நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் அரசமைப்பு மீளமைப்பு வரைபை அரசமைப்பு பேரவையிடம் முன்வைப்பது என்று வழிநடத்தல் குழு தீர்மானித்துள்ளது.

எனினும் புதிய அரசமைப்பை உருவாக்க வேண்டுமா அல்லது அரசமைப்பு மீள்திருத்தமா அவசியம் என்பதை அரசமைப்புப் பேரவை பின்னர் தீர்மானிக்கும் என்று வழிநடத்தல் குழு தெரிவித் துள்ளது என்றும் தகவல் வெளியா கியுள்ளது. (ஐ)



## சரிந்து விழும் நிலையில் மின்கம்பம்

தென்மராட்சி, ஏப்.14

சாவகச்சேரி கச்சாய் வீதியில் மின்சார சபைக்கு மிக அண்மையில் சுமார் ஐம்பது மீற்றருக்கு உட்பட்ட தூரத்தில் மின் கம்பம் ஒன்று சரிந்த நிலையில் காணப்படுகிறது. இந்த மின்கம்பம் மரத்தால் ஆனதாகக் காணப்படுவதால் அடிப்பாகத்தில் ஏற்பட்ட சேதம் காரணமாகச் சாய்வடைந்திருக்க கூடும் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த மின்கம்பம் விழுந்தால் அதிகளவில் போக்குவரத்து இடம்பெறும் இந்த வீதியில் பெரும் ஆபத்து ஏற்படும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சேதங்கள் ஏற்பட முன்னர் மரத்தாலான இந்த மின் கம்பத்தை மாற்றி உதவுமாறு மக்கள் கேட்டுள்ளனர்.

மின்சார சபை அருகில் இருந்தும் இந்த மின் கம்பத்தின் நிலைமை இவ்வாறு இருப்பது குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.(ஐ-21)

# பலவீனமாக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

## குமுறுகிறார் மஹிந்தர்



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள மக்கள் செல்வாக்குள்ள பிரபலங்களை நீக்கிவிட்டு, பலவீனமானவர்களைத் தொகுதி அமைப்பாளர்களாக நியமித்துள்ளமை கட்சியைப் பலவீனப்படுத்துவதற்கான ஒரு முயற்சி என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புதிய தொகுதி அமைப்பாளர் நியமனம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாளுக்கு நாள் கட்சியின் நடவடிக்கைகள் வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. கட்சி மீது ஆதரவில்லாத, உணர்வற்றவர்களின் தேவையாக, கட்சியைப் பலவீனப்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகையவர்களுக்கு, மக்கள் யார் பக்கம் இருக்கின்றார்கள் என்பதை விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது. சந்தர்ப்பம் வரும் போது மக்கள் உரிய பாடத்தைப் புகட்டுவார்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## கடுவலையில் துப்பாக்கிச் சூடு: இரண்டு பேர் பலி

கொழும்பு, ஏப்.14

மாலபே கடுவலை பிரதான வீதி யின், கொத்தலாவல பிரதேசத்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இந்த இருவர் மீது, மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட் டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான பிரியந்த ஜயகொடி கூறினார்.

பாதாள உலகக் குழுக்களுக்கு இடையே நீண்ட நாள்களாகக் காணப்பட்டு வந்த மோதல் நிலை காரணமாக இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பன்மைத்துவம் பேணும் வகையில் இலங்கையில் அரசமைப்பு இல்லை

## இதனால் நாடு சீரழிகின்றது என்கிறார் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர்

மட்டக்களப்பு, ஏப்.14



இந்த நாட்டின் பன்மைத்துவத்தைப் பேணி, மக்கள் அனைவரும் அவர்களை அவர்களே கௌரவிக்கக் கூடிய விதத்திலான அரசமைப்பு இல்லாததன் காரணமாக இந்த நாடு மிகவும் சீரழிந்து இருக்கின்றது என்று கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான விசேட கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

எமது நாட்டில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. காலாகாலத்துக்கு வறுமையைச் சொல்லிக் கொண்டிருக்கும் நாடாகவே இலங்கை இருக்கின்றது.

இங்கிருக்கும் வளங்களை, வசதி வாய்ப்புகளை, இங்கிருக்கும் பிள்ளைகளை, சொத்துக்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு இன்னும் இலங்கை தயாராக இல்லை.

இந்த நாட்டினுடைய மக்களை தமிழர், சிங்களவர் மற்றும் முஸ்லிம் என்று பிரித்து அவரவருக்கு உரிய உரிமைகளை அவர்களுக்கு கொடுக்காமல் எப்போதும் ஒருவரை ஒருவர் தூற்றிக் கதைக்கும் தன்மை தான் எமது நாட்டில் தற்போதும் இருக்கின்றது.

ஆரோக்கியமான செய்திகள் நம்முடைய நாட்டில் இல்லை. அதற்கான காரணம் என்னவெனில் ஓர் ஒழுங்கான - உறுதிப்பாடான- அரசமைப்பு இங்கு இல்லை.

முப்பது வருட காலம் யுத்தம் இடம்பெற்ற வியட்நாம் நாடு பொது உடைமைக் கொள்கையால் இப்போது அந்த நாடு குறிப்பிட்ட காலத்துக்குள் பொருளாதாரத்தில் முன்னேறி இருக்கின்றது.

எமது இலங்கை சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகளை அண்மிக்கப் போகின்றது. ஆனால், இன்னும் எமது நாடு சொல்லிக் கொள்ளக் கூடிய வகையில் எந்தவித முன்னேற்றமும் அடையவில்லை.

இதற்கெல்லாம் காரணம் இங்கு ஒரு நிலையான அரசியல் கொள்கை இல்லை. இந்த நாட்டின் பன்மைத்துவத்தைப் பேணி இருக்கும் மக்கள் அனைவரும் அவர்களை அவர்களே கௌரவிக்கக்கூடிய விதத்திலான அரசமைப்பு இல்லாததன் காரணமாக இந்த நாடு மிகவும் சீரழிந்து இருக்கின்றது.-என்றார்.(ஐ)

## குடும்பஸ்தர் மீது மட்டு. நகரில் வேட்டு!

மட்டக்களப்பு, ஏப்.14

மட்டக்களப்பில் 34 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இடம் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் கன்னங்குடா, காங்சிரங்குடாவைச் சேர்ந்த க.புனிதநாதன் என்பவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போதே குடும்பஸ்தர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொக்கட்டிச்சோலை பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.(ஐ)

# வாள்கள், கத்திகளுடன் சென்ற குழு இளம் பெண்ணைக் கடத்திச்சென்றது

## மானிப்பாயில் நேற்றிரவு சினிமா பாணியில் சம்பவம்

மானிப்பாய், ஏப்.14

மானிப்பாயில் வாள்கள், கத்திகளுடன் சென்ற ஒரு குழுவினர் வீட்டுக்குள் புகுந்து இளம் பெண் ஒருவரைக் கடத்திச் சென்றுள்ளனர். 23 வயதான பெண் ஒருவரே கடத்தப்பட்டார்.

நேற்றிரவு 7.30 மணியளவில் சினிமா பாணியில் இடம்பெற்ற இச்சம்பவத்தால் அப்பகுதியில் பெரும் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டது.

கார் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் சென்ற 8 பேர் மானிப்பாய் மேற்கில் உள்ள வீடொன்றுக்குள் திடீரெனப் புகுந்து வாள்கள் மற்றும் கத்திகளைக் காட்டி அங்கிருந்தவர்களை அச்சுறுத்தினர். அக்குழுவில் இருந்த சிலர் 23 வயதான பெண்ணைக் கடத்த முயன்றனர்.

அப்பெண் அவர்களிடம் அகப்படாமல் வீட்டுக்குப் பின்புறமாக ஓடிச்செல்ல முற்பட்டார். ஆனாலும் துரத்திச் சென்ற அவர்கள் அவரைப் பலவந்தமாக இழுத்துக் காரில் ஏற்றிச் சென்றனர் எனக் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக மானிப் பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை, மேற்படிக் கடத்தல் காதல் விவகாரமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. பெண்ணைக் கடத்திச் சென்றவர்களில் ஒருவர் முன்னர் வாள்வெட்டுக் குழுவொன்றில் இருந்தவர் எனவும் நீதிமன்ற உத்தரவின் பேரில் சில தடவைகள் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர் எனவும் கூறப்படுகின்றது. (ம)




# விடுதலைப் புலிகளின் தயாரிப்பான வாகனத் தகர்ப்பு வெடிகுண்டு மீட்பு

## வவுனியாவில் உள்ள வீட்டுக் காணியொன்றில்



தமிழீழ விடுதலைப் புலிகளின் தயாரிப்பான வாகனத் தகர்ப்பு வெடிகுண்டு ஒன்று நேற்று வவுனியாவில் மீட்கப்பட்டுள்ளது. புதைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட அந்த வெடிகுண்டில், கப்டன் பவான் தகர்ப்பு வெடிமருந்து எனத் தமிழில் பெயர் விபரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

வவுனியா உக்கிளாங்குளம் 04 ஆம் ஒழுங்கையில் உள்ள வீட்டுக் காணியொன்று புதுவருடதினத்தை முன்னிட்டு நேற்றுதுப்புரவாக்கப்பட்டது. இதன்போது புதைக்கப்பட்ட நிலையில் இருந்த வெடிகுண்டு ஒன்றை வீட்டின் உரிமையாளர் அவதானித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் பண்டாரிக்குளம் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார். சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் அதைப் பார்வையிட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டனர். நீதிபதியின் அனுமதியைப் பெற்று குண்டை செயலிழக்கச் செய்வதற்கான நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி வெடிகுண்டு 15 கிலோகிராம் நிறையுடையது என அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. (ம-100)

# மருதடி விநாயகருக்கு இன்று இரதோற்சவம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த இரதோற்சவம் புதுவருட தினமான இன்று நடைபெறவுள்ளது. இன்று காலை 10.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை ஆரம்பமாகி நண்பகல் 12.00 மணிக்கு சுவாமி தேரில் ஏறி ஆரோகணிப்பார்.

இரதோற்சவத்திற்காக வருகை தரும் பக்தர்களின் வசதி கருதி யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆலயத்தில் பக்தர்களுக்குத் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, பக்தர்களின் பாதுகாப்புக்காக பொலிஸாரும் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய இரதோற்சவம்

நல்லூர், ஏப்.14

நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திர சேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசைகள் ஆரம்பமாகி 9 மணிக்கு சுவாமி தேரில் ஏறிப் பக்தர்களுக்கு அருள் பாலிப்பார்.

நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தோற்சவம் இடம்பெறும்.


# பட்டதாரிகள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குமான அவசர கலந்துரையாடல்





இடம்: அங்கஜன் இராமநாதன் பிரதான அலுவலகம்
80A கோவில் வீதி, நல்லூர்.
காலம்: 15.04.2017 சனிக்கிழமை
நேரம்: 3.00 மணி (பிற்பகல்)
விடயம்: **நியமனப் பிரச்சினைகள் தொடர்பானது**

கலந்துரையாடுவோர்: ஜனாதிபதியின் செயலாளர்
சிறிலங்கா சுதந்திர
பட்டதாரிகள் சங்கச் செயலாளர்
ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பாளர்.

**அனைத்துப் பட்டதாரிகள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் வருகை தந்து பயன்பெற அழைக்கின்றோம்.**

அங்கஜன் இராமநாதன்
நாடாளுமன்ற உறுப்பினர்

(R/059)



எமது வாடிக்கையாளர்கள் அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.







யாழ் நகரில் மக்கள் போற்றும் மகத்தான
ஜவுளிகளின் மனங்கவர் மாளிகை

**சென்னை பெஷன் வேல்ட்**
இல.63, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
021-221-5464

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**
இல.41, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
021-222-2063

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## புத்தாண்டுச் சிந்தனை

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள்.

அவர்களின் தமிழ்ப் புத்தாண்டும் இயற்கையோடு இயைந்து உருவானதே.

உலக இயக்கத்தின் முழுமுதல் காரணன் சூரியன். அவனே சூரியக் குடும்பத்தின் தலைமைக் கோள். அவனை வைத்தே காலங்களைக் கணிப்பிட்டனர் தமிழர்கள்.

தமிழரின் கால வகுத்தல் சூரியனை மையமாகக் கொண்டு கணிக்கப்படுவது. அதனால், தமிழ் மாதங்களை சூரியமாதம் என்று அழைப்பதும் வழமை.

தமிழரின் காலப் பிரிப்பின் அடிப்படை, நாளில் இருந்து ஆரம்பிக்கின்றது. ஒரு நாளை ஆறு சிறு பொழுதுகளாகவும், ஒரு வருடத்தை ஆறு பெரும் பொழுதுகளாகவும் அவர்கள் வகுத்தனர்.

ஒரு நாளை வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, சாமம் என ஆறாகப் பிரித்தனர்.

ஒரு வருடத்தை இளவேனில் (சித்திரை, வைகாசி), முதுவேனில் (ஆனி, ஆடி), கார் (ஆவணி, புரட்டாதி), உதிர் (ஐப்பசி, கார்த்திகை), முன்பனி (மார்கழி, தை), பின்பனி (மாசி, பங்குனி) என ஆறு பெரும் பொழுதுகளாகவும் அவர்கள் வகுத்தனர்.

ஒரு தினத்தை 60 நாழிகை கொண்டதாகக் கணக்கிட்டனர். ஒரு நாழிகைக்கு 24 நிமிடங்கள். இது 24 மணிநேரம் கொண்ட ஒரு தினத்துக்குக் கனகச்சிதமாகப் பொருந்துவதும் கவனிக்கத்தக்கது.

தமிழ்க் காலக்கணக்கில் 60 வருட ஒழுங்குமுறை உள்ளது. ஒவ்வொரு வருடத்துக்கும் ஒவ்வொரு பெயர். அந்த வரிசையில் இன்று பிறப்பது 'ஏவிளம்பி'. அறுபது வருடங்களைக் கொண்ட வரிசையிலே இது 31 ஆவது வருடம்.

இவ்வாறு வருடங்களை அறுபது வருடங்களாக்கித் தமிழர்கள் வகுத்தமைக்கும் ஒரு விஞ்ஞான ரீதியான காரணம் உண்டு. அதுவும் கோள்களின் நகர்வின் அடிப்படையில் அமைந்ததே.

இந்த அறுபது வருடச் சுற்று என்பது எண்கணிதத்தின் நூற்றாண்டு என்பதற்குச் சற்று ஒப்பானது.

சூரியனில் இருந்து பூமியின் நகர்வை ஒட்டிக் காலத்தை வகுத்த தமிழர்கள், சூரியனை ஒட்டி ஏனைய கிரகங்களின் நகர்வை ஒப்பிட்டு அறுபது சுற்றுச் சட்டத்தை ஒழுங்குபடுத்தினர்.

நமது சூரியக் குடும்பக் கோள்களில் முக்கியமானவை வியாழனும் சனியும். சூரியனை ஒரு முறை சுற்றுவதற்கு 30 வருடங்களை எடுத்துக் கொள்ளும் சனியும், அதேபோல 12 வருடங்களை எடுத்துக் கொள்ளும் வியாழனும், மீளவும் ஒரு குறிப்பிட்ட நிலையில் ஒருங்கிணைவதற்கு அறுபது வருடங்கள் செல்லும். அதனையே வருடச் சுற்றுக்கான அடிப்படையாக்கினர் தமிழர்கள்.

இதே கால வகுமானத்தின் அடிப்படையில், தமிழர்களுடைய ஆண்டுப் பிறப்பை இளவேனி பின் சித்திரையில் - மேஷ ராசியில் சூரியன் பிரவேசிக்கும் காலத்தில் - கொள்ளாமல், தைத் திங்கள் பிறப்பில் - தைப்பொங்கல் தினத்தில் - கொண்டாட வேண்டும் என்ற ஒரு வலிமையான கருத்தும் நம் மத்தியில் இல்லாமல் இல்லை.

இத்தகைய தமிழ்ப் புத்தாண்டு எப்போது என்ற இழுபறி தமிழகத்தில் தொடர்ந்து இருந்தாலும்கூட அது இலங்கையில் பெரும்பாலும் ஒரு பெரிய சர்ச்சைக்குரிய விடயமாக இல்லை.

அதற்கு ஒரு காரணம், தமிழர்கள் சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடி வரும் அதே நாளில்தான், இந்த நாட்டின் பெரும்பான்மையினரும் தமது புதுவருடப் பிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். அதனால், இலங்கையில் சித்திரையில் வரும் புத்தாண்டுப் பிறப்பு, தமிழ் - சிங்களப் புத்தாண்டுப் பிறப்பாகக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு இன ஐக்கியத்தை வெளிப்படுத்தி நிற்கும் புத்தாண்டை ஒரே தினத்தில் அனுஷ்டிக்காமல், மாறாக தமிழர் மட்டும் தனித்துவத் தைப் பொங்கல் தினத்தைப் புத்தாண்டாகக் கொள்ளவேண்டும் என்ற கருத்து இலங்கையில் இதுவரை அதிகம் வலிமை பெறவில்லை.

இந்த நாட்டின் இரு பெரும் தேசிய இனங்களும் புத்தாண்டை ஒன்றிணைந்து கொண்டாடுவது போன்று, அரசாட்சியையும் ஒன்றிணைந்து பகிர்ந்து முன்னெடுக்க வாய்ப்புக் கிட்டுமாயின் அதுவே சிறப்பு.

பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனத்தின் அடிப்படையான - நீதியான - நியாயமான - தார்மீக உரித்துடைய - அதிகாரங்களை அதற்கு வழங்காமல், அதனை அடக்கி வைத்து, அந்த இனத்தின் மீது ஒரு வலோற்கார ஆட்சியைத் திணித்து வைத்துக் கொண்டு, தன்னுடைய மேலாதிக்க மேன்மையை அழுத்தமாகப் பிரயோகித்தபடி புதுவருடத்தை ஒன்றாக - இணைந்து - தேசியக் கொண்டாட்டமாகக் கொண்டாடுகிறோம் என்று சொல்வதில் அர்த்தமில்லை.

நாங்கள் புதுவருடத்தையும் பெரும்பான்மையினமான சிங்களவர்களுடன் இணைந்து கொண்டாடுகிறோம் என்ற நிலைமை வரவேண்டுமென்றால் - அதற்கான நிலைமையை உருவாக்கும் சமிக்ஞை இன்று அரசிடமிருந்துதான் தமிழர்களுக்கு வந்திருக்க வேண்டும். அது இன்னும் வரவேயில்லை என்பதுதான் மன வருத்தத்துக்குரிய உண்மை.

மனுக்குலத்துக்காகத் தன்னுயிரையே அர்ப்பணித்த சமாதான தூதன் இயேசுபிரான் உயிர்த்தெழுந்த ஈஸ்டர் ஞாயிறும் கூட இந்தப் புத்தாண்டை ஒட்டித்தான் வருகின்றது.

மரித்துப் போனவர் என்ற இயேசு பாலன் உயிர்த்தெழுந்த அதிசயம் கண்டோம். அது போலவே, இந்த இலங்கைத் தீவில் மரித்துப் போய் மறைந்துவிட்டதாகக் கருதப்பட்ட சமாதானம் - அமைதி - நல்லிணக்கம் - இன சௌஜன்யம் - புரிந்துணர்வு - மீண்டும் உயிர்த்தெழ இந்தப் புத்தாண்டு - ஈஸ்டர் இணைவு உதவுமா?

# எனது தனிப்பட்ட அனுமதியின்றி முக்கிய தீர்மானங்கள் எடுக்கத் தடை!

## அதிகாரிகளைப் பணித்தார் கல்வி அமைச்சர்



கொழும்பு, ஏப்.14

எனது அனுமதியின்றி கல்வி அமைச்சின் சில முக்கிய தீர்மானங்களை எடுக்கக் கூடாது என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அரச தேசியப் பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல் உட்பட அந்தப் பாடசாலைகளுடன் தொடர்புடைய 10 நடவடிக்கைகளை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கல்வி அமைச்சர் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் எடுத்துள்ளார்.

கல்வி அமைச்சின் அனைத்துச் செயலாளர்கள் மற்றும் மேலதிக செயலாளர்களுக்கும் எழுத்து மூலம் அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

அவரது பணிப்புரையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஊடகங்களுக்கு அறிவித்தல்களை விடுத்தல், சுற்றறிக்கைகளை வெளியிடுதல், பாடசாலைக் கட்டடங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கல்வி உபகரணங்களை வழங்குதல் என்பவற்றுக்கு கல்வி அமைச்சரின் நேரடி அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

தகவல் தொழில்நுட்ப பீடம் அமைத்தல், அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள், கல்வியுடன் தொடர்புடைய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுதல் போன்றவற்றுக்கும் கல்வி அமைச்சரின் அனுமதி அவசியம்.

அமைச்சின் கொள்கைகளுக்கு மாறாகச் செயற்படுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவல்கள் உறுதி செய்யப்பட்டதன் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.-என்றுள்ளது.

(எ)

# புதிய அரசியல் மாற்றத்துக்காக அணிதிரளும் நிலையில் மக்கள்

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கூறுகிறார்

கிளிநொச்சி, ஏப்.14

மக்கள் ஒரு புதிய அரசியல் மாற்றத்துக்காக அணிதிரளும் நிலைக்குள்ளாகியுள்ளனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி, உதயநகர் கிழக்கு பிரதேசத்தில் சமத்துவம், சமூகநீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்களின் உணர்வுகளையும், வலிகளையும் புரிந்துகொள்கின்ற அரசியல் தலைவர்கள் தற்போது இல்லை. இதனால், தமிழ் மக்களுடைய அடிப்படை பிரச்சினைகள் முதல் அரசியல் பிரச்சினைகள் வரை தீர்க்கப்படாது நீண்டு கொண்டிருக்கின்றன. காணிப் பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை என எல்லாப் பிரச்சினைகளும் தீர்வின்றித் தொடர்கின்றன.

இதற்காக மக்கள் வீதியில் இறங்கிப் போராடுகின்றார்கள். தற்போது இருக்கின்ற அரசியல் தலைவர்கள் மீது நம்பிக்கை அற்றதன் விளைவே மக்கள் தங்களின் பிரச்சினைகளுக்காகத் தாங்களே போராடுகின்ற நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான விரக்தியும் விளைவும் காரணமாகவே தமிழ் மக்கள் புதிய அரசியல் மாற்றத்துக்காக அணி திரண்டுள்ளனர்.

மக்கள் தமக்கான அரசியலைக் கையிலெடுக்க வேண்டும். அதனைப் பேசவேண்டும். விவாதிக்க வேண்டும் அப்போதே ஆரோக்கியமான-மக்கள் நலனில் அக்கறையுள்ள நல்ல அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்த முடியும்.- என்றார்.

# ஐ.நா.தீர்மானத்தை நிறைவேற்ற அரசு எவ்வித முயற்சியும் இல்லை

## குற்றஞ்சாட்டுகிறார் நல்லிணக்க கலந்தாலோசனைச் செயலாளர்

ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான எவ்வித முயற்சிகளையும் அரசு முன்னெடுத்து வருவதாக இல்லை என்று நல்லிணக்க கலந்தாலோசனைச் செயலணியின் செயலாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பான அரசின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.




இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு, அரசமைப்பு உருவாக்கப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வருகின்ற நிலையில், ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அக்கறை இன்றி அசமந்தப் போக்குடன் செயற்படுகிறது.

தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரும் சரி, பின்னரும்சரி அரசு, அவ்விடயத்தில் அசமந்தப் போக்குடனேயே செயற்படுகிறது. எனவே, அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் சிவில் அமைப்புகள் தொடர்ந்தும் செயற்படும். -என்றார்.

(எ)



வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்!

உங்கள் வாகனத்தில் செல்லும் பிரயாணிகளின் பாதுகாப்பு எப்போதும் உங்கள் கையிலேயே உள்ளது. அதற்கு நீங்களே பொறுப்பு.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை/ மாநகரசபை, யாழ்ப்பாணம்.

### நாளை

15.04.2017
சனிக்கிழமை

நட்சத்திரம்: அனுஷம் பி.ப. 12.34 வரை
திதி: சதுர்த்தி மா. 6.38 வரை

சுபநேரம் : 3.04 – 4.34 வரை
இராகு காலம் : 9.04 – 10.34 வரை

## சுகாதார அமைச்சை உடனடியாக ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப்.14

சுகாதார அமைச்சை ஜனாதிபதி உடனடியாக பொறுப்பேற்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே சங்கத்தின் உதவிச் செயலாளர் ஹரித அளுத்கே இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாடு முழுவதும் தற்போது பரவிவரும் இன்புளுவன்சா எச்.1.என்.1 வைரஸ் தாக்கத்துக்குப் பயன்படுத்தும் 'டெம்புல்' மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

அதனைத் தெரியப்படுத்தினால், தாங்கள் அரசைக் கவிழ்க்க முனைகின்றோம் என்று சுகாதார அமைச்சர் கூறுகிறார்.

நாட்டில் இன்று சுகாதார நிலைமைகள் சீர்கெட்டுள்ளன.

இதனைக் கருத்தில் கொண்டு, சுகாதார அமைச்சை ஜனாதிபதி உடனடியாகப் பொறுப்பேற்க வேண்டும். - என்றார். (எ)

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை சில தீர்மானங்களை எடுப்பதற்கு அவசியம்

### அமைச்சர் ராஜித கருத்து



கொழும்பு, ஏப்.14

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நாட்டில் தொடர்ந்தும் இருப்பது நல்லது போன்றே தோன்றுகின்றது. சில சந்தர்ப்பங்களில் சில தீர்மானங்களை எடுப்பதற்கு அது உதவியாக இருக்கும் என்று தெரிவித்தார் சுகாதாரம் மற்றும் போசணை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தெல்தெனிய வைத்தியசாலைக்கான புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1978 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை கொண்டுவரப்பட்ட காலம் முதல் அதற்கு எதிராக நான் குரல் எழுப்பி வந்துள்ளேன். எனினும், சில நேரங்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது.

அமைச்சரவையில் ஏதாவது, ஒரு யோசனை கொண்டுவரப்படும் போது பல்வேறு கருத்துகள் அந்த யோசனை மீது முன்வைக்கப்படுகின்றன. அந்த யோசனையின் நன்மை, தீமை தொடர்பில் ஜனாதிபதியின் சட்டப் பிரிவு ஆராய்ந்து இறுதித் தீர்மானம் எடுக்கின்றது. அவ்வாறான தருணங்களில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியம். எனவே நிறைவேற்று ஜனாதிபதி முறைமை இருந்தால் நல்லது என்று எனக்குத் தோன்றுகின்றது. - என்றார். (எ)

## பாவனைக்குதவாத உணவு தயாரித்த 2,716 நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களில் மனித நுகர்வுக்குத் தகுதியற்ற உணவு வகைகளைத் தயாரித்த 2 ஆயிரத்து 716 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுஎன்று இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பில் 19 ஆயிரத்து 730 உணவு தயாரிப்பு நிறுவனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதேவேளை அதிகளவான சுற்றிவளைப்பு மேல் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைக்காக நாடு முழுவதும் 2 ஆயிரம் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். -என்றார்.

## இனி வரும் சகல தேர்தல்கள் தொகுதிவாரி முறையிலேயே!

### மஹிந்த அமரவீர தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.14

எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் சகல தேர்தல்களும் தொகுதிவாரி முறைமையில் முன்னெடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர், அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

வலஸ்முல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்கள் விகிதாசாரத் தேர்தல் முறைமையை அன்றி தொகுதி ரீதியான தேர்தலையே எதிர் பார்க்கிறார்கள். இதற்கமைய எதிர்வரும் அனைத்துத் தேர்தல்களும் தொகுதி அடிப்படையில் இடம்பெற இருக்கின்றன.

தமது தொகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினரையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். விகிதாசார தேர்தல் முறையால் ஒருவரை ஒருவர் கொலை செய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்த விகிதாசார தேர்தல் முறையின் கீழ் தேர்தல்களுக்கென பெருந்தொகை நிதி செலவிடப்பட்டுள்ளது. இவ்வாண்டில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களும் மூன்று மாகாணசபைகளுக்கான தேர்தல்களும் இடம்பெற இருக்கின்றன.

அனைத்துத் தேர்தல்களும் தொகுதிவாரி முறையின்கீழ் நடத்த அரசு தீர்மானித்துள்ளது. - என்றார்.

## அந்நியச்செலாவணி கட்டுப்பாட்டு பிரேரணையை எதிர்த்து மனு!

அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டு வரைவுப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கூட்டு எதிர்க்கட்சியினர் உயர் நீதிமன்றில் மனு ஒன்றை நேற்று தாக்கல் செய்துள்ளனர்.

இந்தநிலையில், அந்தப் பிரேரணை இலங்கையின் அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன நீதிமன்ற வளாகத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் புதிய வரைவு பிரேரணை நடைமுறைப்படுத்தப்படும் என்றால் தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டம் ரத்தாகும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, அந்த வரைவுப் பிரேரணைக்கு எதிராக சட்டத்தரணி தர்ஷன வீரதுவ மனு ஒன்றை உயர் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அந்நியச் செலாவணி சட்டமூலம்: குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை

### நிதி அமைச்சர் கூறுகிறார்

உத்தேச அந்நியச் செலாவணி சட்டமூலம் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரிப்பதாக நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை நிதியமைச்சில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உத்தேச அந்நியச் செலாவணி சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சி கூறிவருகின்றது.

அந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் தற்போது நடைமுறையில் உள்ள அந்நியச் செலாவணி சட்டமூலம் ரத்து செய்யப்படும். -என்றார்.

## ரயில் கடவைக் காப்பாளர்கள் தொடர்பில் அரசு என்ன திட்டத்தை முன்வைத்துள்ளது?

### கேள்வி எழுப்புகின்றார் ரயில் கடவைக் காப்பாளர் ஒன்றியத் தலைவர்

வடக்கு, கிழக்கில் கடந்த 10 ஆம் திகதி தொடக்கம் முழுமையான பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வரும் ரயில் கடவைக் காப்பாளர் தொடர்பில் அரசு என்ன திட்டத்தை முன் வைத்துள்ளது என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று வடக்கு, கிழக்கு ரயில் கடவைக் காப்பாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ். ஜே. றொகான் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அகில இலங்கை ரீதியில் 3 ஆயிரத்து 628 ஊழியர்கள் ரயில் கடவை ஊழியர்களாகக் கடமையாற்றி வருகின்றார்கள். எதிர் காலத்தில் இவர்கள் அரச ஊழியர்களாக உள்வாங்கப்படுவார்களா? இல்லையா? என்பதை இந்த அரசு தெளிவாக திட்டவட்டமாகக் கூற வேண்டும். அத்துடன் எங்கள் எதிர்காலம் சுபீட்சமான சக வாழ்வு சமாதானமான ஒரு சூழலை ஏற்படுத்த இந்தப் புது வருட காலத்தில் அரசு எங்களுக்கான ஒரு தீர்வை பெற்றுத்தர வேண்டும்.

எதிர்வரும் நாள்கள் பண்டிகைக் காலமாக இருப்பதால் ரயில் கடவையைக் கடக்கும் மக்கள் அவதானமாக இருங்கள். கடந்த மூன்று வருடங்களும் 9 மாதங்களும் கடந்துவிட்ட நிலையில் எந்தவிதமான தீர்வும் எட்டப்படாத நிலையிலேயே நாங்கள் எமது தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். ரயில் திணைக்கள ஊழியர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும், அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையில் உள்ள வெற்றிடங்களுக்கு எங்களுடைய ஊழியர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கைகளாக இருக்கின்றன.

அத்துடன் அனைத்து ஊழியர்களுக்கும் வழங்கக் கூடிய பண்டிகைக் கால கொடுப்பனவு எங்களுக்கும் வழங்கப்பட வேண்டும். நாம் எதிர் காலத்தில் எங்களுடைய பிள்ளைகளுக்கு இது ஒரு பண்டிகை என்பதை அவர்களுக்கு நினைவு கூறும் விதத்தில் நாங்கள் கொண்டாட வேண்டும். நாம் எங்கள் குடும்பத்துடன் எந்த விதமான பண்டிகைகளையும் கொண்டாடுவதில்லை.

இதற்குக் காரணம் 7 ஆயிரத்து 500 ரூபா சம்பளத்தில் எங்கள் குடும்பத்தைக் கூட கொண்டு நடத்த முடிவதில்லை. ஆகவே பண்டிகைக் காலத்தில் எவ்வாறு மகிழ்ச்சியாக இருக்க முடியும். -என்றுள்ளது. (எ-100)

### பாலியல் தொழிலாளி எனக் கட்டுரை:

# 'டெய்லி மெயில்' வழங்கியது ட்ரம்பின் மனைவிக்கு நஷ்டஈடு!



அமெரிக்காவின் முதல் பெண்மணியின் மொடலிங் வாழ்க்கையைப் பற்றி கட்டுரையில் 'மெலனியா டிரம்ப் முன்பு பாலியல் தொழிலாளியாகப் பணியாற்றினார்' என்று எழுதியதற்காக ஐக்கிய ராஜ்ஜியத்தின் 'டெய்லி மெயில்' நாளிதழ் மெலனியா வுக்கு நஷ்டஈடு வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற அதிபர் தேர்தல் பிரசாரத்தின் போது மேற்படி கட்டுரை வெளியானது. ஆனால், அந்தச் செய்தியை நாளிதழ் பின்னர் திரும்பப் பெற்றுக் கொண்டது.

கடந்த பெப்ரவரி மாதம் மெலனியா டிரம்ப், குறிப்பிட்ட அந்தச் செய்தி காரணமாக தனக்கு ஏற்பட்ட களங்கத்துக்காக சுமார் 150 மில்லியன் டொலர்கள் நஷ்டஈடு கேட்டு வழக்குத் தொடர்ந்திருந்தார்.

கட்டுரையால் ஏற்பட்ட மன உளைச்சலுக்காக நஷ்டஈடு வழங்க பிரஸ்தாப நாளிதழ் ஒப்புக் கொண்டுள்ளது.

இதனை அடுத்து,லண்டன் உயர் நீதிமன்றத்தில் மெலனியா ட்ரம்ப், செய்தி நிறுவனம் வழங்கிய மன்னிப்பையும் ஏற்றுக்கொண்டார். (ச)

# சிரியா மீதான ஐ.நா. வரைவுத் தீர்மானத்தை வீட்டோ அதிகாரத்தால் நிராகரித்தது ரஷ்யா!



நியூயோர்க்,ஏப்.14

சிரியாவில்நடைபெற்ற இரசாயனத் தாக்குதலைப் பற்றி விசாரிக்க ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட வரைவுத் தீர்மானத்தை தனது வீட்டோ அதிகாரம் மூலம் ரஷ்யா நிராகரித்தது.

மேற்படி தாக்குதலை அதிபர் பஷார் அல் ஆஸாத்தின் இராணுவம் செய்திருக்கக்கூடும் என்று மேலை நாடுகள் குற்றஞ்சாட்டுகின்றன. இதனால் சிரிய அரசு விசாரணைக்கு ஒப்புக் கொள்ள வேண்டும் என்று அவை கருதுகின்றன. ஆனால் ரஷ்யா தனது நட்பு நாடான சிரியாவை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீர்மானம் சிரிய அரசை இரசாயனத் தாக்குதல் பற்றிய விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி கோருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வளைகுடாவில்சிரியா - ஈராக் பிரதேசத்தில் போர் தொடங்கியதிலிருந்து, இதுவரை எட்டு முறை சிரியாவுக்கு எதிராக ஐ.நா. தீர்மானங்களை கொண்டு வந்துள்ளது. ஒவ்வொரு முறையும் ரஷ்யா தனது நட்பு நாட்டுக்கு ஆதரவாக வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பிரேஸில் சிறையில் கைதிகள் மோதல்!

### ஐவர் உயிரிழப்பு

பிரேஸில்,ஏப்.14

பிரேஸில் சிறையில் இரு கும்பல்களிடையே கடும் மோதல் ஏற்பட்டது. அப்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் 4 கைதிகள் உயிரிழந்தனர். இதைக் கண்ட மற்றொரு கைதி மாரடைப்பால் உயிரிழந்தார். 17 கைதிகள் படுகாயம் அடைந்தனர். காயமடைந்தவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து அந்தச் சிறையில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. இரு தரப்பினரும் பயன்படுத்திய 2 துப்பாக்கிகளைப் பொலிஸார் கைப்பற்றினர். அங்கு அமைதியை நிலைநாட்ட சிறைத் துறை அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரேஸில் நாட்டில் உள்ள சிறைகளில் அளவுக்கு அதிகமாகக் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அவர்களிடையே அடிக்கடி மோதல்கள் நடைபெற்று வருகின்றன. இந்த மோதல்கள் காரணமாக உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகின்றன. இந்த வருடத்தில் கைதிகள் இடையே நடந்த மோதல்களில் பல கைதிகள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ரஷ்யாவுக்கு எதிராக தடைகள் விதிக்கப்படலாம்!

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின்போது ரஷ்யாவின் தலையீடு காணப்பட்டது எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை சாதாரண விடயமாகக் கொள்ள முடியாது. ரஷ்யாவுக்கு எதிராகத் தடைகள் விதிக்கப்படலாம்.

-இவ்வாறு அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ரெக்ஸ் டில்லர்சன் தெரிவித்துள்ளார்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கூட்டுச் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் கருத்துத் தெரிவித்த ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லவ்ரோவ் ரஷ்யா மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் உண்மை இல்லை என்பதை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பான ஆதாரங்களை காட்டுமாறு நாம் தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றோம். ஆனால் அதனை அமெரிக்கா சிறிதும் பொருட்படுத்தவில்லை.-என்றார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை வெற்றியடையச் செய்யும் வகையில் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கணினி வலைப்பின்னல் அமைப்பை ரஷ்யா ஊடுருவியது எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அது குறித்து அமெரிக்க புலனாய்வு சேவை விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இந்தியாவுடனான பகைமை நீடிக்காது!

### பாக்.பாதுகாப்பு ஆலோசகர் நம்பிக்கை

இந்தியா - பாகிஸ்தான் இடையே பகைமை நீடிக்காது. அனைத்துப் பிரச்சினைகளும் நிச்சயம் ஒரு நாள் முடிவுக்கு வரும். - இவ்வாறு பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாசர் ஜன்ஜூவா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"காஷ்மீர் பிரச்சினையில் இருதரப்பு கொள்கையை இந்தியா தோல்வி அடைய வைத்து விட்டது. இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இரு நாடுகளும் பரஸ்பரம் பேச்சு நடத்துவது அவசியம். இந்தியா மீதுள்ள சொந்த விருப்பங்கள் காரணமாகச் சர்வதேச சமூகம் காஷ்மீர் பிரச்சினையைக் கண்டுகொள்ளாமல் உள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# திருச்செந்தூர் முருகன் கோயிலுக்கு 86 லட்சம் ரூபாவில் தங்க வேல்கள்!



திருச்செந்தூர், ஏப்.14

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு சென்னையைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் 86.45 லட்சம் ரூபா மதிப்பிலான தங்க வேல்களைக் காணிக்கையாக செலுத்தியுள்ளார்.

சென்னை பாடியில் அமைந்துள்ள நியூ சரவணா ஸ்ரோர்ஸ் நிறுவனத் தலைவர் எஸ்.எஸ். சரவணா நேற்றுமுன்தினம் புதன்கிழமை திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு சென்று தங்கத்தால் செய்யப்பட்ட கொழுசாயுதம், 2 வேல்கள், ஒரு சேவல் கொடி ஆகியவற்றைக் காணிக்கையாக செலுத்தினார்.

இவற்றின் மொத்த எடை 3 கிலோ 50 கிராம். இதில், கொழுசாயுதம் சுவாமி மூலவர் சுப்பிரமணிய சுவாமிக்கும், ஒரு வேல் சுவாமி ஜெயந்திநாதருக்கும், ஒரு வேல் மற்றும் சேவல் கொடி சுவாமி சண்முகருக்கும் சாத்தப்பட்டு, சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# உலகெங்கும் உள்ள அணு உலைகளுக்கு பயங்கரவாதிகள் தாக்குதல் எச்சரிக்கை!

### நாடாளுமன்றில் மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங்

உலகம்முழுவதும்நிர்மாணிக்கப்பட்டுள்ள அணு உலைகளுக்குப் பயங்கரவாதத் தாக்குதல் அச்சம் ஏற்பட்டுள்ளது என சர்வதேச அணுசக்தி முகமை கவலை வெளியிட்டுள்ளது.

-இவ்வாறு மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அணுசக்தி முகமை கவலை வெளியிட்டுள்ள தகவல் உண்மையா என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் உள்ள அணுசக்தி நிலையங்கள் பாதுகாப்புப் பற்றிய ஆழமான கொள்கையின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது . சர்வதேச அணுசக்தி முகமை இதற்காக குறிப்பிட்ட ஆதாரங்கள் எதையும் கூறவில்லை, ஆனால் பொதுப்படையாக ஓர் எச்சரிக்கையை வெளியிட்டது.

இத்தகையஎச்சரிக்கைகளை அரசு பொறுப்புணர்வுடன் அணுகுகிறது. எனவே இந்த சூழ்நிலையை எதிர்கொள்ள அரசு தயாராகவே உள்ளது.

மேலும் இந்திய அணு உலை அமைப்புகளின் முக்கியமான உள்கட்டமைப்புகள் இணையத்தளபகுதியில்இருந்து தனித்து பிரிக்கப்பட்டுள்ளது. மிகவும் நெருக்கமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், கணினி மற்றும் தகவல் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவும், கட்டுப்பாட்டு பாதுகாப்புப் பணிக்குழுவும் அணுமின் நிலையங்கள் பாதுகாப்புப்பணியில்ஈடுபட்டுள்ளன.-என்றார். (ச)

# மக்களைக் கழிப்பறை கட்ட வலியுறுத்தி காலில் விழுந்தார் நகராட்சி ஆணையர்!


உழவர்கரை,ஏப்.14

தூய்மை இந்தியாத் திட்டத்தின் கீழ், மானியம் பெற்றும் கழிப்பறை கட்டாத மக்களின் காலில் விழுந்து கழிப்பறை கட்ட வலியுறுத்தி, உழவர்கரை நகராட்சி ஆணையர் ரமேஷ் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நூதனப் பிரசாரம் மேற்கொண்டுள்ளார்.

தூய்மை இந்தியாத் திட்டத்தின் கீழ், கழிப்பறை இல்லாத வீடுகளில் கழிப்பறை கட்டுவதற்காக உழவர்கரை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 952 பயனாளிகள் கண்டறியப்பட்டு, கழிப்பறை கட்டிக்கொள்ள முதல் தவணையாக 10 ஆயிரம் ரூபா அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டது.

இவர்களில் இதுவரை 234 பயனாளிகள் மட்டுமே நிதியுதவியை முறையாகப் பயன்படுத்தி கழிப்பறை கட்டி பயன்படுத்தி வருகின்றனர். இதனை அடுத்து அவர்களுக்கான இறுதித் தவணையான 10 ஆயிரம் ரூபா அவரவர் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுவிட்டது. இந்நிலையில், அவர்களை எப்படி யாவது கழிப்பறையை கட்ட வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் உழவர்கரைநகராட்சிநூதன விழிப்புணர்வை மேற்கொண்டது.

கவுண்டன்பாளையம், லாஸ்பேட்டை வார்ட் பகுதிகளில் உள்ளபயனாளிகளின் வீடுகளுக்கு உழவர்கரை நகராட்சி ஆணையர் ரமேஷ் உட்பட அலுவலர்கள் சென்று



அவர்களின் கால்களில் விழுந்து கழிப்பறை கட்டும்படியும், அதன் முக்கியத்துவத்தையும் உணர்த்தியுள்ளனர். (ச)

# இலங்கையில் தேசிய அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஜப்பான் அரசு முழு ஒத்துழைப்பு!

## பிரதமர் ரணிலுடனான சந்திப்பில் ஜப்பான் பிரதமர் தெரிவிப்பு





கொழும்பு, ஏப்: 14

இலங்கையில் தேசிய அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான முழு ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு ஜப்பான் அரசு முன்வந்துள்ளது.

ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேவுக்கும் . பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சின்போது ஜப்பான் பிரதமர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் முன்னெடுக்கப்படும் தேசிய நல்லிணக்கத்திற்கு அடிப்படையான புதிய அரசமைப்புக்குத் தமது நாட்டு அரசாங்கம் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

இரு நாடுகளுக்கு இடையில் நிலவி வரும் வரலாற்று சிறப்புமிக்க தொடர்புகளை மேலும் வலுவூட்டுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த விஜயம் பெரிதும் உதவியுள்ளது.

இலங்கையின் துறைமுகம், போக்குவரத்து, அடிப்படை வசதிகள் மற்றும் ஏனைய தேசிய தரத்திலான அபிவிருத்தி செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் ஜப்பான் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.

தீவு நாடுகளான ஜப்பானுக்கும் இலங்கைக்குமான சமுத்திர பாதுகாப்பு மற்றும் சுதந்திர கப்பல் போக்குவரத்து ஆகியன முக்கியமானவையாகும்.

இதற்காக இரு நாடுகளுக்கு இடையிலான புரிந்துணர்வு முக்கியமான ஒன்றாகும் 'என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தினருக்கும் ஜப்பானின் இயற்கை பாதுகாப்பு படையினருக்கும் இடையிலான தொடர்புகளை வலுப்படுத்துவது தொடர்பில் இரு நாட்டு தலைவர்களுக்கு இடையிலான கருத்துக்களும் இதன்போது பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தவை வருமாறு:-

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் வர்த்தக மற்றும் முதலீட்டு விடயங்களை விரிவுபடுத்துவதற்கான விடயத்தில் தனியார் துறையினரின் பங்களிப்பும் இடம்பெற வேண்டும்.

திருகோணமலை துறைமுகமுகாமைத்துவத்தை முறையாக முன்னெடுக்க ஜப்பான் ஒரு பில்லியன் யென்களை நிதியுதவியாக வழங்க முன்வந்தமையையிட்டு ஜப்பான் அரசாங்கத்திற்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.- என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் அபிவிருத்திச் செயற்பாடுகளைஒருங்கிணைப்பதற்கான சிறப்பு பிரதிநிதி ஒருவரை ஜப்பான் நியமிக்கவுள்ளது.

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், ஜப்பானிய அமைச்சரவைச் செயலர் யொஷிஹிடே சுகா இதனைத் தெரிவித்துள்ளார்.

ரோக்கியோவில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இலங்கைப் பிரதமருக்கும், ஜப்பானிய அமைச்சரவைச் செயலர் யொஷிஹிடே சுகாவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இதன் போதே,ஜப்பானிய பிரதமருக்கான ஆலோசகர் கலாநிதி ஹிரடோ இசுமியை, இலங்கைக்கான சிறப்புப் பிரதிநிதியாக ஜப்பான் நியமிக்கவுள்ளது என்று யொஷிஹிடே சுகா தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இந்தியப் பெருங்கடல் கப்பல் பாதை மற்றும் இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பு ஆகிய விவகாரங்கள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, பிராந்தியத்தின் கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இருக்கிறது என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியப் பெருங்கடல் மாநாடு ஒன்றை நடத்த இலங்கை திட்டமிட்டுள்ளது என்றும், இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பான பொதுவான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைத் தாம் பரிந்துரைத்துள்ளதாகவும் பிரதமர் ரணில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தொலைக்காட்சிகளை டிஜிட்டல் மயப்படுத்துவது குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஏற்கனவே, 2002ஆம் ஆண்டு இலங்கை அரசு நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கான சிறப்புப் பிரதிநிதியாக யசூஷி அகாஷியை நியமித்திருந்தது.

அவர் இலங்கையில் போர் நிறுத்த காலத்திலும், போர்க் காலத்திலும், போருக்குப் பிந்திய காலகட்டத்திலும், 20 இற்கும் அதிகமான பயணங்களை இலங்கைக்கு மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ரூ.6,300 கோடியை இலங்கைக்கு வழங்குகிறது ஜப்பான் அரசு!

கொழும்பு, ஏப். 14

மூன்று அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆறாயிரத்து 300 கோடி ரூபாவை( 45 பில்லியன் யென்) இலங்கைக்கு ஜப்பான் நிதியுதவியாக வழங்கவுள்ளது. ரோக்கியோவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை - ஜப்பானிய உச்சி மாநாட்டில் இந்த நிதியுதவிக்கு இணக்கம் காணப்பட்டது.

இலங்கை- ஜப்பானிய பிரதமர்களின் முன்னிலையில், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவரும், ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவரும் இது தொடர்பான உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளனர்.

ஜப்பான் வழங்கவுள்ள ஆறாயிரத்து 300 கோடி ரூபா நிதி, இரண்டு கடன் உதவித் திட்டங்களாகும். ஒன்று கொடைத் திட்டமாகும்.

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்துக்காக ஜப்பான் 12.957 பில்லியன் யென்னைகடனாகவழங்கவுள்ளது. களுகங்கை நீர் விநியோக விரிவாக்கத் திட்டத்துக்கு 31.81 பில்லியன் யென் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

மேலும் பொருளாதார சமூக அபிவிருத்தித் திட்டத்துக்கு 1 பில்லியன் யென் கொடையாக வழங்கப்படவுள்ளது.

இதில், கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்துக்காக வழங்கப்படும் நிதி உதவி, வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களில், உள்ளூர் வீதிகள், சிறிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறியளவிலான நீர் விநியோகத் திட்டங்கள்,மேற்படி மாகாணங்களின் வாழ்வாதார மற்றும் உற்பத்தியுடன் நேரடித் தொடர்புடைய திட்டங்களுக்காக பயன்படுத்தப்படும்.

பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக வழங்கப்படும் 1பில்லியன் யென் நிதி, திருகோணமலைத்துறைமுகத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும்.

ஜப்பான் வழங்கியுள்ள கடன்கள் இரண்டுக்கும் ஆண்டுக்கு 1.4 வீதப்படி வட்டியைச் செலுத்த வேண்டும் என்பதுடன், 25 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனக்குடா எண்ணெய்க் குதங்களை இந்தியாவுடன் பகிர்கிறது இலங்கை!



கொழும்பு, ஏப். 14

திருகோணமலை- சீனக்குடாவில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியாவும் இலங்கையும் இணைந்து, கூட்டாக இயக்கவுள்ளன என்று பெற்றோலியத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனக்குடாவில் உள்ள மொத்தம் 99 எண்ணெய்க் குதங்களில், குறைந்தது 73 எண்ணெய்க் குதங்கள் இந்தக் கூட்டு முயற்சித் திட்டத்தின் கீழ் இயக்கப்படவுள்ளன.

ஏனைய 10 எண்ணெய்க் குதங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பயன்படுத்திக் கொள்ளவுள்ளது.

எஞ்சிய 14 எண்ணெய்க் குதங்களும் இந்தியாவுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன. இது தொடர்பான பேச்சுக்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

2003 ஆம் ஆண்டில் இந்த எண்ணெய்க் குதங்கள் மீது இந்தியா ஆர்வம் காட்டியிருந்தது. அப்போது ஓர் உடன்பாட்டின் மூலம் 99 எண்ணெய்க் குதங்களும் இந்தியன் எண்ணெய் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டன.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி மைத்திரி அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று குற்றச்சாட்டு!

கொழும்பு, ஏப். 14

ஜனாதிபதி மைத்திரி அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதத்திற்குள் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரி தெரிவித்திருந்தார். எனினும், கடந்த வாரம் வழங்கிய வாக்குறுதியை ஜனாதிபதி நிறைவேற்றவில்லை எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இந்த வருடம் நிறைவடைவத்ற்கு முன்னர் உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி மீண்டும் வாக்கு அளித்திருந்தார் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்பின் கண்காணிப்பாளர் ரோஹன ஹெட்டிஆராச்சி தெரிவித்துள்ளார். ஆனால், இந்த வருடம் நிறைவடைவதற்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கான வாய்ப்புகள் குறைவென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் நிறைவடைவதற்கு முன்னர் சட்டமூலத்தில் உள்ள தொழில்நுட்பத்தின் குறைபாடுகளை சரிப்படுத்த வேண்டும் எனவும், அந்த நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மெல்போர்னில் நாட்டுப்பற்றாளர் நினைவுநாள்!

இந்திய தேசத்திடம் இரண்டு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து மட்டுநகரில் மாமாங்கேஸ்வரர் ஆலய முன்றிலில் 19-03-1988 முதல் 19-04-1988 வரையான முப்பது நாள்கள் உண்ணா நோன்பிருந்து ஈகச் சாவைத் தழுவிக் கொண்ட தியாகத்தாய் அன்னை பூபதியின் 29 ஆவது ஆண்டு நினைவு நாளும் தாயக விடுதலைப் போராட்டத்தில் பின்புலமாக உழைத்து சாவைத் தழுவிக் கொண்ட நாட்டுப் பற்றாளர்களையும் நினைவு கூருகின்ற நாட்டுப் பற்றாளர் நினைவுநாள் இவ்வாண்டும் விக்ரோறியா மாநிலத்தில் மெல்பேர்னில் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை விக்ரோறியா மாநில தமிழர் ஒருங்கிணைப்புக் குழு முன்னெடுத்து வருகிறது.

குடும்ப வாழ்வியலில் ஈடுபட்டிருந்தபோதும் இடர்மிகுந்த நெடிய தமிழீழ விடுதலைப் போராட்டப் பயணத்தில் உறுதுணையாக உழைத்து உயிர் நீத்த நாட்டுப் பற்றாளர்களை நினைவுகூருவது ஒவ்வொரு ஈழத்தமிழனதும் தலையாய கடமையாகும்.

ஆஸ்திரேலியாவில் தமிழ்த் தேசிய விடுதலைப் பயணத்தில் முன்னோடிகளாகத் திகழ்ந்து உயிர் நீத்து தமிழீழத் தேசியத் தலைவரால் அதிஉயர்விருதான மாமனிதர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மாமனிதர்களான தில்லை ஜெயக்குமார் மற்றும் பேராசிரியர் எலியேசர், நாட்டுப்பற்றாளர் மகேஸ்வரன் ஆகியோரையும் இந்த நாளில் நினைவு கூருகின்றனர்.

284, Gower Street, Preston Town Hall, Preston, VIC 3072 என்னும் முகவரியில் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ஐ)











# தமிழ்ச் சோலை தலைமைப் பணியகம் பிரான்ஸில் நடத்திய ஆற்றுகை


பிரான்ஸில் வாழும் தமிழ்க்கலைக் குழந்தைகளுக்கு தமிழ்ச்சோலை தலைமைப் பணியகம் ஆண்டுதோறும் ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்வு என்ற செயற்பாட்டை அனைத்துலக தமிழ்க்கலை நிறுவனத்தின் ஆதரவுடன் செய்து வருகின்றது. 2017 ஆம் ஆண்டு ஆற்றுகைத் தரத்துக்குத் தெரிவாகியுள்ள மாணவ, மாணவிகளுக்கான தேர்வு கடந்த சனிக்கிழமை பாரிஸின் புறநகர் பகுதியில் ஒன்றான சார்சல் என்னும் பிரதேசத்தில் நடைபெற்றது.

மங்கல விளக்கை தமிழர் ஒருங்கிணைப்புக் குழுப் பொறுப்பாளர் மகேஸ், தமிழ்ச்சோலை தலைமைப் பணியகப் பொறுப்பாளர் ஜெயக்குமாரன், தமிழ்ச்சோலை தலைமைப் பணியகக் கலைப்பிரிவுப் பொறுப்பாளர் காணிக்கை நாதன் இவர்களுடன் அன்றைய கலைத் தேர்வில் நடுவர்களாகக் கடமையாற்ற வந்திருந்த நடன ஆசிரியர் திருமதி. கௌசல்யா ஆனந்தராசா, குரலிசை ஆசிரியர் ஜெயசோதி, மிருதங்க வித்துவான் பிரணவநாதன், இவர்களுடன் நடுவர்கள் திருமதி அமலி சுரேஸ்குமார், திருமதி சுபாசினி ஆனந்தவதனன், திருமதி சாமினி சந்திரகுமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர். (ஐ)



# தமிழீழ தேசியத் தலைவரை காவல் தெய்வமாக்கி லண்டனில் பரத நாட்டிய அரங்கேற்றம்

தமிழீழத் தேசியத் தலைவரைக் காவல் தெய்வமாக முன்னிறுத்தியும், தலைவருக்குப் பிரபஞ்ச நாயகனுக்கான வாழ்த்துப்பா இசைத்தும், மாவீரர்களுக்கு முதல் நடனத்தை சமர்ப்பித்தும் லண்டனில் பத்மலிங்கம் சகி என்ற ஈழத்தமிழ்ச் சிறுமியின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. (ஐ)



”

ஈழத் தமிழர்கள் இன்றும் மரணப் போராட்டத்தில் நிற்கின்றனர் என்பதனை டென்மார்க் மக்களுக்கு இந்தக்கண் காட்சி எடுத்துக் காட்டுகிறது.


# 'இனப் படுகொலையும் ஆக்கிரமிப்பும்' டென்மார்க்கில் நடைபெறும் கண்காட்சி

இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட இனப் படுகொலைகளையும் ஆக்கிரமிப்புகளையும் தாங்கி நிற்கும் கண்காட்சி டென்மார்க நகரில் நடைபெற்று வருகின்றது.

ஈழத் தமிழர்கள் இன்றும் மரணப் போராட்டத்தில் நிற்கின்றனர் என்பதனை டென்மார்க் மக்களுக்கு இந்தக் கண்காட்சி எடுத்துக்காட்டுகிறது.

இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகளையும் ஆக்கிரமிப்புகளையும் தாங்கி நிற்கும் இக்கண்காட்சியை டெனிஸ் மக்கள் ஆர்வத்தோடு பார்வையிட்டு வருவதோடு மட்டும் இல்லாமல் டெனிஸ் ஊடகங்களிலும் இந்தக் கண்காட்சி பற்றிய செய்திகளும் வெளிவந்துள்ளன. சனல் 4 இல் வெளிவந்த 'கொலைக்களம் தொகுப்பு' அடங்கிய இறுவெட்டுகளும் இங்கு விநியோகிக்கப்பட்டன. (ஐ)

# கல்விக் கண் திறக்கும் கணேஸ்வரன்



**சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குனர் கணேஸ்வரன் வேலாயுதம். மாற்றுத் திறனாளிகளுக்கான சிகிச்சை நிலையம், மனிதாபிமானச் சேவைகள் எனப் பலதரப்பட்ட தொண்டுகளை செய்து வரும் இவர் வடபுலத்தில் மாணவர்களின் கல்வி நலன் மீதான அக்கறை செலுத்தி மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான வகுப்புகளை நடத்தி வருகின்றார். இவர் மாணவர்கள் மீது அதிக அக்கறை காட்டி தமது சொந்தச் செலவில் ஏராளமான கல்வி பணிகளைச் செய்து வகின்றவர். புத்தாண்டை முன்னிட்டு காலைக்கதிர், பத்திரிகைக்கு அவர் வழங்கிய செவ்வி இது.**

**கே :** சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் ஊடாக சமூக நலம், கல்வி மற்றும் அரசியல் மேம்பாட்டுக்காக சேவையாற்றி வருகின்றீர்கள். அதிலும் விசேடமாக மெல்லக் கல்வி கற்றல் விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி வடபுலத்தில் பரந்துபட்ட ரீதியாக பொறுப்புணர்வுடன் செயலாற்றி வருகின்றீர்கள். அதிலே நீங்கள் கூடுதல் கவனம் செலுத்தக் காரணம் என்ன ?

**ப :** ஒரு காலத்தில் கல்வி மூலம் எமது முழு நாட்டினுடைய சமூகப் பொருளாதார அந்தஸ்தைத் தீர்மானிக்கும் உரிமையாளராக யாழ் மண்ணைச் சேர்ந்தவர்களே இருந்தார்கள். யுத்தம் காரணமாக அவர்கள் இடம்பெயர்ந்து சென்றாலும் அங்கு சென்று அவர்கள் வளர்த்துக் கொண்ட அறிவைப் பயன்படுத்தி இடம்பெயர் உலகினிலே சிறப்புமிகு வல்லமையுடைவராகத் திகழ்ந்தார்கள். இது கல்வியால் மட்டும் தான் அடைய முடியும். ஒரு சமூகம் உச்ச நிலையை எட்டிப் பிடிப்பதற்கு கல்வி அவசியமாகும்.

### யுத்தத்தில் உச்சம் இப்போது வீழ்ச்சி

யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியிலும் வடக்கு மாணவர்களின் கல்வி நிலை தமக்கே உரித்தான அடைவு மட்டங்களை கொண்டிருந்தன. ஆனால் 2012 ஆண்டிற்குப் பிற்பாடு கல்வி நிலை முக்கிய இடத்தைப் பெறவில்லை. வடக்கு மாகாணம் ஒன்பதாம் இடத்திற்குப் பின்தள்ளப்பட்டுள்ளது. இது பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டிய தேவைப்பாடு எமது எல்லோருக்கும் இருக்கிறது. தமிழ் மாணவர் சமூகத்திற்கு நேர்ந்துள்ள கல்வி வீழ்ச்சி தொடர்பாக போதுமான, தெளிவான ஆதாரங்களை ஆராய்த பிற்பாடு தான் மெல்லக் கற்கும் மாணவர் வியடத்தில் நான் கூடுதல் கவனம் செலுத்துவதற்கு முன்வந்தேன்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கமும் தமது கவலையைச் சுட்டிக்காட்டி கருத்து வெளியிட்டிருந்தது.

**கே : மெல்லக் கல்வி கற்றல் விடயம் தொடர்பாக தீவிரமாக கவனம் செலுத்தி இலவசமாக வகுப்புக்களை நடத்திவருகின்றீர்கள். அதில் உங்களுடைய முன்னெடுப்புக்கள் பற்றிக் கூறுவீர்களா?**

**ப :** வடபுலத்தில் சுமார் 20 விகிதமான தமிழ் மாணவர்கள் தம் தாய் மொழி தமிழ் கல்வி அறிவை இல்லாத மாணவர்களாக இருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எமது மண்ணின் மதிப்பீடுகள் இந்தளவில் இருக்கிறன? இந்தக் கணிப்பீடுகள் எவற்றை உணர்த்துகின்றன? இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார் ? எமது கல்வித் துறையை வீழ்த்த திரைமறைவில் என்ன சதி நடக்கிறது. குறிப்பாக சில விடயங்களை வெளிப்படையாகக் கூட கூற வேண்டிய நிலை இருக்கிறது.

### கல்வி உதவி

மலையகப் பிரதேசத்தை விட எமது வடபுல பகுதி பின்னடைவைக் கொண்ட இருக்கிறது எனில் எந்தளவுக்கு நாங்கள் மிகவும் கேவலமான நிலைக்கு பின்னதள்ளப்பட்டிருக்கின்றோம்? எனவே எமது இந்த பெறுபேறுகள் தலைசிறந்த கல்வியியல் சமுதாயத்தை உருவாக்குதவற்கு சிறந்த செயற்பாடாக இருக்க முடியாது.

அதனால்தான் நாங்கள் வடபுலத்தில் 12 இடங்களில் சுமார் 1500 மாணவர்களுக்கு மெல்லக் கற்கும் கல்வி நிலையங்களை நடத்தி வருகின்றோம்.

பின்தங்கிய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களைத் தெரிவு செய்து ஒரு பாடசாலையில் அல்லது சன சமூக நிலையத்தில் அல்லது ஒரு வசதியான இடத்தில் இம்மாணவர்களுக்கு இலவசமாக பிரத்தியேக மெல்லக் கற்கும் வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் 6 வகுப்பு தொடக்கம் 11 ஆம் வரையிலான மாணவர்கள் கல்வி பயிலுகின்றார்கள்.

மன்னார் மடுவிலும் மற்றும் பெரிய மடுவிலும் மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். இதில் கூடுதலாக முஸ்லிம் மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். ஈச்சிளவக்கை, எழுவைதீவு, தீவகம், வடமராட்சி கொட்டாவத்தை அச்செழு, வலிகாமம், விக்டோரியா, சுழிபுரம், கிளிநொச்சி பூநகரி, நல்லூர், பெரியமடு உள்ளிட்ட பகுதிகளில் இந்த மெல்லக் கற்றல் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

எங்களுடைய குறுகிய கால கட்டத்தில் தவணைப் பரீட்சைகளுக்குத் தோற்றிய இம்மாணவர்களுடைய பெறுபேறுகளை மதிப்பீடு செய்த போது பாரியளவு மாற்றங்களைக் காணக் கூடியதாக உள்ளது. எங்களுடைய இந்த முயற்சிகளுக்கு கணிசமாளவு அதிபர்கள் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்கி வருகின்றார்கள். இது என்னுடைய மனதிற்கு மன ஆறுதலைத் தருகின்றது.

### தமிழ்க் கல்வி

தமிழ் மொழியில் மட்டுமே இயல் இசை நாடகம் என்ற பிரிவுகள் உள்ளடக்கப்பட்டு முத்தமிழ் என்று பெருமைப்பட அழைக்கின்றோம். இத்தகைய சிறப்பு எமது மொழியில் தான் இருக்கின்றது. கற்கைத் துறையில் தம் தாய் மொழியில் எழுதல், வாசிக்கக் கற்றல் என்பன கல்வியின் நிலைபேறான வளர்ச்சியில் நம்பகத் தன்மையை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனாலும் எமது மண்ணில் 20 விகிதமான மாணவர்கள் தமிழ் மொழிக் கல்வியில் எழுத வாசிக்கத் தெரியாமல் இருப்பது கவலை தரும் விடயமாகும். மொழி அறிவு இருந்தால் கல்வியும் அறிவும் வளர்ச்சியடையும். எனவே மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் மெல்லக் கற்றல் விடயம் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தி பின்தங்கிய மாணவர்களுக்கு புத்துயிரழித்து அவர்களுடைய எழுச்சிக்கு வழிவகுக்க வேண்டியதும் எமது கடமையாகும்.

நகரப்புறப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் பாதிக்கப்படுவதில்லை. இதில் விசேடமாக கிராமப் புறத்தில் பின்தங்கிய பாடசாலையில் கல்வி பயிலும் ஏழை மாணவர்களே இந்த அவல நிலைக்கு உள்ளாகின்றனர்.

இத்தகைய கல்வி வீழ்ச்சிக்கு காரண கார்த்தாக்களாக இருப்பவர்கள் பற்றியும் நாம் உற்று நோக்குதல் வேண்டும். வடக்கில் மாகாண சபை அரசியல் தோற்றத்திற்குப் பிற்பாடுதான் அதிர்ச்சி தரும் கல்வி வீழ்ச்சி வடபுலத்தில் ஏற்பட்டுள்ளதாக சமூக ஆர்வலர்கள் விமர்சனம் தெரிவிக்கின்றனர்.

### ஆசிரியர் தவறு

இதே இவேளை இன்னும் ஒன்றையும் நடுநிலையோடு சொல்லியாக வேண்டும். ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் விடும் தவறின் காரணமாகத் தான் கணிசமாளவு மாணவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். நல்ல முறையில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் இல்லாமலும் இல்லை. ஆனாலும் மாதாந்த சம்பளத்தை மட்டும் குறியாகக் கொண்டு இயங்குகின்ற ஆசிரியர்களே அதிகமாகவுள்ளனர்.

**கே : கல்வி நடவடிக்கையில் வடபுலத்தில் சீர்திருத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் உங்களது கருத்துக்கள் எவை?**

**ப:** எவையானாலும் எல்லோரும் பொறுப்புணர்ந்து செயற்பட்டால் எந்தச் சீர்திருத்தமும் கொண்டு வரத் அவசியம் ஏற்படாது. பொறுப்புணர்வின்றி ஏனோ தானோ என்று தமது தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்காக ஆசிரியர் கடமையைச் செய்தால் எமது மாணவர் சமுதாயத்தையே கட்டி எழுப்ப முடியாது. கல்வித் தகைமையில்லாமல் தொழில் வாய்ப்பின்றி எதிர்காலத்தில் கஷ்டப்படும் எமது தமிழ் இளைஞர்களை உருவாக்குகின்ற செயற்பாடுகளையே நாங்கள் தற்போது செய்து கொண்டிருக்கின்றோம்.

### ஆசிரியர் போக்கு

ஒரு பாடசாலையில் ஆசிரியர் ஒருவர் கற்பிக்கின்றார். அவர் கற்பிப்பது வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு விளங்குவதில்லை என்று சொல்லுகின்றார்கள். அந்த ஆசிரியர் பிரத்தியேகத் தனியார் வகுப்பில் கற்பிக்கின்றார். ஆனால் அவர் அங்கு கற்பிக்கின்ற போது அரைவாசி விளங்கும் என மாணவர்கள் தெரிவிக்கின்றனர். அதிலும் விசேடமாக அவ்வாசிரியரது இல்லத்திற்கு சென்று கல்வி பயிலும் மாணவர்களுக்கு முழுமையாக விளங்குவதாகத் தெரிவிக்கின்றனர். இது கற்பனை அல்ல. உண்மைக் கதையாகும். கல்விச் சீர்திருத்திற்கு மிகவும் பெரிய சவாலாகவும் தடையாகவும அமைந்திருப்பது டியூசன் கல்வி முறையாகும்.

வடபுலத்தில் பின் தங்கிய பாடசாலைகளில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் நவீன தொழில் நுட்பமும் உபகரணங்களும் பயன்படுத்தப்படுவதில்லை. அதேவேளை திட்டமிட்ட அடிப்படையில் பொருத்தமான கற்றல் செற்பாடுகள் சீரின்றி காணப்படுகின்றன. மீத்திறன் மாணவர்கள், சாராசரி மாணவர்கள் ,குறைவான மாணவர்கள் தொடர்பாக சரியான ஒழுங்குகளைப் பின்பற்றி மேலதிக வகுப்புக்களை நடத்தவதற்கு யாரும் தயார் இல்லாத நிலையியே உள்ளனர்.

### ஆசிரியர்களுக்கு மனநோய்

இவை தவிர வட புலத்தில் 250 இற்கும் மேற்பட்ட மனநோயால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களை அதிபர்கள் மனிதாபிமான அடிப்படையில் பாடசாலையில் வைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். இவர்களால் மாணவர்களுக்கு எந்தக் கல்விச் சேவையும் வழங்க முடியாது. இவர்களால் மாணவர்களின் நலன் பேணக் கூடிய சாத்தியப்பாடான அம்சங்கள் எவையும் இருப்பதாகப் புலப்படவில்லை. மாறாக இழப்புக்களே அதிமாக காணப்படுகின்றன. இந்நிலையில் மனிதாபிமான நோக்கில் அவர்களை வைத்துக் கொண்டிருப்பதில் எவ்விதத்திலும் அர்த்தமில்லை. வழிதவறிய கல்விச் செயற்பாடுகள் தான் உள்ளன.

இவ்வாறான ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது நல்லது என்பதே என்னுடைய அபிப்பிராயமாகும்.

அதபோன்று குறித்த ஆசிரியை ஒருவர் 8.30 மணி அளவில் தினசரி பாடசாலைக்கு சமுகமளித்து வருகின்றார். அவரைப் பார்த்து அதிபர் ஏன் தாமதத்துடன் வருகின்றீர்கள் எனக் கேட்டால் முடிந்தால் நடவடிக்கை எடுத்துப் பாருங்களேன் என்று சவால் இடக் கூடியவராக அந்த ஆசிரியை இருக்கிறார். இது பற்றி ஒரு அதிபர் மன ஆதங்கப்பட்டு கவலையோடு என்னுடன் தெரிவித்தார். அவர் அந்தளவுக்கு தைரியமாகப் பேசுவதற்குக் காரணம் அந்த அசிரியருக்குப் பின்னால் அரசியல் பின்புலம் இருக்கிறது. இது கூட அதிபர் என்னிடம் கூறிய உண்மைச் சம்பவமாகும். இவைற்றை நான் கூறுவது முக்கிய நோக்கம் குறைகூறுவதற்காக அல்ல. எமது கல்வி நிலை எந்தளவு வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறது என்பதை தொட்டுக் காட்டுவதற்காவே இவற்றை குறிப்பிடுகின்றேன்.

எமது கல்விச் செயற்பாட்டில் சீர்திருத்தம் இடம்பெறும் போது இவ்வாறான அம்சங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே சொல்ல வேண்டியிருக்கிறது.

இன்னுமொரு விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். ஆசிரியர் பற்றாக் குறையாகும். இம்முறைவெளியான க. பொ. த. சாதரணப் பரீட்சையில் ஒரு பின்தங்கிய பாடசாலையில் மாணவி ஒருவரும் 8 ஏ ஒரு பாடம் சித்தியடையவில்லை. அப்பாடசாலையில் ஆங்கிலப் பாடத்திற்கான ஆசிரியர் இல்லாமையினாலேயே அம்மாணவி குறித்த ஆங்கிலப் பாடத்தில் சித்தியடையாமைக்கான முக்கிய காரணம். அந்தப் பாடசாலையில் மிக நீண்ட காலமாக ஆங்கில ஆசிரியர் நிலையே நீடிக்கிறது. குறிப்பாக அந்தப் பிள்ளை ஆங்கிலப் பாடத்தில் தான் சித்தியடையவில்லை. இப்படி இந்தப் பாடசாலையில் மிக முக்கியமான பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத துரதிருஷ்டமான நிலை இருக்கிறது. ஆனால் நகரப்புறப் பகுதிகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர். சம நிலையான ஆசிரியர் வளப்பங்கீடுகள் இடம்பெறுவதில்லை என்பது மனவருத்திற்குரிய செயலாகும்.

இவை போன்று கணிசமாளவு பாடசாலைகளில் முக்கியமான பாடங்களுக்கு ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்ற விடயத்தை கல்வி வட்டாரங்கள் நன்கு அறியும்.

குற்றமிழைத்த ஆசிரியர்கள்
(15ஆம் பக்கம் பார்க்க)




வான்.வேணு கிருஷ்ணா

மக்கள் போராட்டத்தை ஒடுக்கியும், பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகளின் நுழைவைத் தடுத்தும், 19 ஆம் நூற்றாண்டின் இறுதி வரை தென்னமரிக்காவின் பல பகுதிகளை ஆக்கிரமித்தே வைத்திருந்தது ஸ்பெயின். அது ஸ்பெயினின் வீழ்ச்சியும், அமெரிக்க ஆதிக்கத்தின் ஆரம்பமும் ஒரு சேர நடைபெற்ற காலகட்டம். கியூபாவில் எப்படியும் கியூப மக்கள் ஸ்பெயினை வென்றுவிடுவார்கள் என்கிற சூழல் வந்தபோது, இடையில் புகுந்து கியூபாவிற்கு ஆதரவு தெரிவிப்பது போன்று ஸ்பெயினுடனான போரை ஆரம்பித்தது அமெரிக்கா. அருகருகே அமைந்திருக்கிற கியூபாவும் போர்டோரிகோவும் வேறு வழியின்றி இதனை ஆதரித்தன. போரின் இறுதியில் தென்னமரிக்கப் பிராந்தியத்தை விட்டே வெளியேற சம்மதித்தது ஸ்பெயின். பேய் வெளியேறியதும் பிசாசு வந்த கதையாக, ஸ்பெயின் நடையைக் கட்டியதும் அமெரிக்கா காலடி எடுத்து வைத்தது. கியூபாவிற்கு சுதந்திரம் வழங்கப்பட்டாலும் பொருளாதார மற்றும் அரசியல் அதிகாரத்தை அமெரிக்கா தன் வசம் வைத்துக்கொண்டது. போர்டோரிகோ, குவாம் மற்றும் பிலிப்பைன்ஸை தன்னுடைய காலனி நாடுகளாகவே எடுத்துக் கொண்டது அமெரிக்கா. 1959 இல் கியூபாவில் மக்கள் புரட்சி ஏற்படும் வரை, அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருந்தது கியூபா. இரண்டாம் உலகப்போருக்குப் பின்னால் ஏற்பட்ட சர்வதேச அழுத்தத்தால் 1946இல் பிலிப்பைன்ஸுக்கு விடுதலை வழங்கப்பட்டது. ஆனால், இன்று வரை 115 ஆண்டுகளாக போர்டோரிகோவை தனது காலனியாகவே வைத்திருக்கிறது அமெரிக்கா .



### போர்டோரிகோவிற்குள் அமெரிக்கா நுழைந்த கதை:

1898 ஜூலை 25 இல், ஆயிரக்கணக்கான அமெரிக்கப் படைகள் போர்டோரிகோ தெற்கு கடற்கரை வழியாக ஊடுருவின. குவான்கா என்கிற சிறிய நகரத்திற்குள்ளும் பின்னர் பொன்சே என்கிற பெரிய நகரத்திற்குள்ளும் நுழைந்தன. ஜெனரல் நெல்சன் தலைமையில் 16 ஆயிரம் பேர் கொண்ட அமெரிக்கப் படை, போர்டோரிகோவை ஆக்கிரமிக்கும் நோக்கில் அடியெடுத்து வைத்தன. அதற்கு 30 ஆண்டுகளுக்கு முன்னரே, ஸ்பெயினை எதிர்த்து மிகப்பெரிய ஆயுதப் போராட்டத்தை போர்டோரிகோவின் மக்கள் நடத்தியிருந்தனர். அதனைத் தொடர்ந்து அந்த மக்களது எதிர்ப்புணர்வும் போராட்ட குணமும் உச்சத்தில் இருந்தது. அதனாலேயே போர்டோரிகாவின் பல பகுதிகளில், அமெரிக்கப் படைகளின் வருகையை அம்மக்கள் ஆதரித்தனர். 400 கால ஸ்பெயின் காலனிய ஆதிக்கத்திலிருந்து அமெரிக்கா தமக்கு விடுதலை வாங்கித் தரும் என்று நம்பினார்கள் போர்டோரிகோ மக்கள்.

அமெரிக்கா ஒருபுறம் ஸ்பெயினுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்க போர்டோரிகோ மக்களும் மறுபுறம் சியலஸ், அட்சுண்டஸ், யாவ்கோ, மயாகுவாஸ், பகுதிகளில் ஸ்பெயினை எதிர்த்து கெரில்லாப் போர் நடத்திக் கொண்டிருந்தனர். இறுதியாக அமெரிக்காவுடன் ஓர் உடன்பாட்டிற்கு வர சம்மதித்தது ஸ்பெயின். 1898 ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி பிரான்ஸின் பாரிஸ் நகரில், இரு நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன்படி, போர்டோரிகோ, குவாம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது. இது குறித்து, போர்டோரிகோவில் போராடிக் கொண்டிருந்த அந்நாட்டு மக்களிடமோ, போராட்டக் குழுக்களிடமோ எவ்வித பேச்சும் கருத்துக் கணிப்பும் நடத்தப்படவில்லை.




ஸ்பெயின் கொடி இறக்கப்பட்டு அமெரிக்கக் கொடி ஏற்றப்பட்டது. புதிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் போர்டோரிகோ மக்களின் ஆயுதப் போராட்டம் தொடர்ந்தது. ஆனால், நான்கு ஆண்டுகளுக்கு மேல் நீடிக்க முடியாமல் அமெரிக்காவால் அப்போராட்டங்கள் நிர்மூலமாக்கப்பட்டன.

"நூற்றாண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த உங்களுடன் போர் புரிவதற்கு வரவில்லை நாங்கள். மாறாக, உங்களையும், உங்களது செல்வங்களையும் பாதுகாத்து வளர்ச்சிக்கு உதவவே வந்திருக்கிறோம்" என்று போர்டோரிகோவை பிடித்ததும் அறிவித்தார் அமெரிக்க ஜெனரல் நெல்சன்".

ஸ்பெயினை விரட்டிய பின்னர், அவர்களை விட மிக மிக மோசமான ஆதிக்கத்தை ஆரம்பித்தது அமெரிக்கா போர்டோரிகோ முழுவதும் அமெரிக்காவின் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. போர்டோரிகோ மக்கள் நாகரிகமடையாமல் இருப்பதாகவும், ஆட்சி செய்யும் திறமை அவர்களுக்கு இல்லை எனவும் பிரசாரம் செய்தது அமெரிக்க ஆளும் அரசு. உலகின் எல்லா காலனிய ஆதிக்கத்திற்கும் இதைத்தானே காரணமாகச் சொல்லி வந்தன ஆதிக்க நாடுகள் .

### போராகர் சட்டம் :

போர்டோரிகோவை எவ்வாறு ஆள்வது என்பதை தீர்மானிக்க இயற்றப்பட்ட முதல் சட்டம் இது. இச்சட்டம் அமெரிக்க செனட் சபையில் நிறைவேற்றப்பட்டது .

1.அமெரிக்க அதிபரால் நியமிக்கப்படும் கவர்னரே போர்டோரிகோவை ஆட்சி செய்வார்.

2.அமெரிக்க சட்டத்தின் கீழ் உச்ச நீதிமன்றம் அமைக்கப்படும்.

3.கவர்னருக்கு அடுத்தபடியாக நியமன உறுப்பினர்களும் சிலர் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சியில் பங்கெடுப்பர். அவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்கர்களாக இருப்பர்.

4.ஸ்பானிஷ் -ஐ தாய்மொழியாகக் கொண்ட போர்டோரிகோவில், ஆங்கிலமே முதன்மை கல்வி மொழியாக மாற்றப்படும். ஸ்பானிஷ் -ஐ இரண்டாம் நிலை சிறப்புப்பாடமாகப் பயிற்றுவிக்கப்படும்.

இவ்வாறு சட்டமியற்றி போர்டோரிகோவின் ஒட்டுமொத்த ஆட்சியதிகாரத்தைத் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது அமெரிக்கா. ஹொண்டுரசை எப்படி வாழைப் பழ அடிமை தேசமாக மாற்றியதோ அதே போல் போர்டோரிகோவை சர்க்கரை அடிமை தேசமாக மாற்ற ஆரம்பித்தது அமெரிக்கா. போர்டோரிகோவில் ஏற்கனவே கரும்பு உற்பத்தி செய்து வந்த சிறு விவசாயிகளால், அமெரிக்கப் பெரு முதலாளிகளுடன் போட்டி போட முடியாமல், அவர்கள் தங்களது விவசாய நிலங்களை அமெரிக்காவிடம் ஒப்படைத்து விட்டு வெறும் கூலிகளாயினர். அமெரிக்காவின் சர்க்கரைத் தட்டுப்பாட்டைக் குறைந்த செலவில் நிவர்த்தி செய்கிற அடிமை நாடாக மாறியது போர்டோரிகோ. அமெரிக்க அரசால் நியமிக்கப்பட்ட போர்டோரிகோவின் முதல் கவர்னரான சார்லஸ் ஹெர்பெட் ஆலன் உலகின் மிகப்பெரிய சர்க்கரை சுத்திகரிப்பு நிறுவனமான "அமெரிக்கன் சுகர்ரிபைனிங்" கம்பனியின் அதிபரானார். பின்னாளில் அந்நிறுவனம் டொமினோ சுகர் என்று பெயர் மாற்றமடைந்தது. போர்டோரிகோவின் கவர்னர் பதவியைத் தனது நிறுவன வளர்ச்சிக்காகவே பயன்படுத்தினார் சார்லஸ்.

"ஒரு நாட்டின் கரையோரம் இருக்கும் தீவுகள் யாவும் அந்நாட்டிற்கே சொந்தம் என்பது எழுதப்படாத விதி" - அமெரிக்க அதிபர் தியோடர் ரூஸ்வெல்ட்

### ஜோன்ஸ் சட்டம்:

முதல் உலகப்போரின் போது அமெரிக்காவுக்காக போரில் சண்டையிட்டு உயிர்த்தியாகம் செய்ய போர்டோரிகோ மக்கள் பயன்படுத்தப்பட்டனர். போரில் அமெரிக்காவிற்கு உதவினால், தங்களின் நாடு விடுதலை அடையவாய்ப்புள்ளதாக நம்பினர் போர்டோரிகோ மக்கள். மேலும் அம்மக்களை ஆசை காட்டும் விதமாக 1916 இல் ஜோன்ஸ் சட்டத்தை அமுல்படுத்தியது அமெரிக்கா. அதன்படி,

1.போர்டோரிகோ மக்களுக்கு அமெரிக்கக் குடியுரிமை வழங்கப்படும்

2.ஆனால், அவர்கள் அமெரிக்கத் தேர்தலில் வாக்களிக்க முடியாது.

3.அமெரிக்க மாநிலப்பகுதியாக போர்டோரிகோ இருக்கும், ஆனால், மற்ற அமெரிக்க மாநிலங்களுக்கு உள்ள எவ்வித உரிமையும் போர்டோரிகோவிற்குக் கிடையாது.

4. போர்டோரிகோவின் ஆட்சியதிகாரம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது . 1-செயற்குழு, 2-உறுப்பினர்கள், 3-நீதிமன்றம்.

5.அதிக அதிகாரமுள்ள செயற்குழுவை அமெரிக்க அதிபரே தேர்ந்தெடுப்பார். மற்ற உறுப்பினர்கள் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

6.ஆங்கிலம் மட்டுமே போர்டோரிகோவின் ஆட்சிமொழியாக இருக்கும்.

7.இவ்வுரிமைகளை (!) வழங்கியதற்காக, 20 ஆயிரம் போர்டோரிகோ படை வீரர்கள், முதல் உலகப்போரில் அமெரிக்காவிற்காகச் சண்டையிட வேண்டும்.

படிப்படியாக போர்டோரிகோவின் ஆட்சியதிகாரம் அமெரிக்க ஆட்சியாளர்களின் கைகளில் தஞ்சம் அடைந்தது. அமெரிக்கப் பெருநிறுவனங்களால், போர்டோரிகோவின் விவசாய நிலங்களை எளிதாகக் கைப்பற்ற முடிந்தது. ஒரு டொலருக்கும் குறைவான ஊதியத் திற்கே வேலை பார்க்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகினர் அம்மக்கள். இதனால் வறுமையும், ஏழ்மையும் அவர்களைச் சூழ்ந்தது.


"போர்டோரிகோவின் வரலாற்றிலேயே மிகக்கொடுமையான வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் நிலவும் காலம் இப்போது தான் என அமெரிக்க அதிபரின் உள்துறை செயலரான ஹரோல்ட் கூட ஒப்புக் கொள்ளும் அளவிற்கு நிலைமை மோசமடைந்தது".

### அமெரிக்க காலனித்துவம் கண்ட 100 ஆண்டு வரலாறு

அமெரிக்க அரசு போர்டோரிகோவின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது. அமெரிக்க வால்ஸ்ட்ரீட் பெருநிறுவனங்கள் போர்டோரிகோவின் பொருளாதாரத்தைக் கைப்பற்றின. அமெரிக்கத் தொண்டு நிறுவனங்களும் மிஷனரிகளும் போர்டோரிகோவின் மொழியையும், கலாசாரத்தையும் ஊடுருவி அழித்தன. கல்வி ஆங்கிலமயமாக்கப்பட்டது. ஆசிரியர்கள் ஆங்கிலத்தையே கற்பிக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். போர்டோரிகோவின் நிலங்கள் யாவும் அமெரிக்காவின் தேவைக்கேற்ப விவசாயம் செய்யப்பட்டது. உள்நாட்டு மக்களின் உணவிற்கான விளை பொருள்கள் எவையும் உற்பத்தி செய்யப்படவில்லை. சர்க்கரை மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு மிகக்குறைந்த விலைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஏனைய உணவுப்பொருள்கள் யாவும் அதிக விலைக்கு இறக்குமதி செய்யப்பட்டுப் பஞ்சத்தில் வாழ வேண்டிய நிலைக்குத் அந்த மக்கள் தள்ளப்பட்டனர்.


(கேள்வி தொடரும்...)

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




116

## யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுகள்

### நான்காவது கட்டச் சுற்றுப் பேச்சு

1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாள் காலை, ஆறு பிரதிநிதிகளைக் கொண்ட அரச தூதுக்குழு யாழ்ப்பாணம் வருகை தந்தது. கொழும்பு திருச்சபையைச் சேர்ந்த வண.ஆயர் கெனத் பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலர் கே.பலப்பத்தபெண்டி, கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி ஜெயதேவ உயாங்கொட, இனங்களிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் தலைவர் சார்ள்ஸ் அபயசேகர, பிரிகேடியர் பீரிஸ் (இராணுவம்), கப்டன் ராஜரத்ன (கடற்படை) ஆகியோரே அரச சார்புப் பிரதிநிதிகளாவர்.

நான்காம் கட்டச் சுற்றுப் பேச்சைத் தொடக்கி வைத்துப் பேசிய தமிழ்ச்செல்வன், அரசு எடுத்த ஆக்கபூர்வமான முடிவுகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள் பற்றியும் மற்றும் வன்னி மாநிலத்துக்குத் தரைப் பாதை திறத்தல், கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிப் போராளிகளின் சுதந்திர நடமாட்டம் பற்றியுமே பேச்சுகள் அமையப்பெற வேண்டுமென வலியுறுத்தினார். அத்தியாவசியப் பொருள்கள் மீதான தடையைத் தளர்த்தி, காலத்துக்குக் காலம் அரசு வெளியிட்டு வந்த வர்த்தமானி அறிவிப்புகளை ஒரு கேலிக்கூத்தாக வர்ணித்த தமிழ்ச்செல்வன், தடை நீங்கிய பொருள்கள் தமிழ் மக்களை வந்தடைவதில்லை என்றார். கடந்த ஆறு மாதங்களாக விடுதலைப் புலிகள் எழுப்பிய பிரச்சினைகள் எவையும் தீர்த்து வைக்கப்படாததால் பேச்சுகள் முன்னேற்றம் காணாது முடங்கிப் போனதாகத் தெரிவித்த தமிழ்ச்செல்வன், இதன் காரணமாகவே விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுகளை இடைநிறுத்தும் காலக்கெடுவை விதிக்க நிர்ப்பந்திக்கப்பட்டது என்றார். அந்த வேளை குறுக்கிட்ட ஆயர் கெனத் பெர்னாண்டோ, காலக்கெடு என்பது அரசுக்கு விடப்பட்ட இறுதி எச்சரிக்கையாகக் கருத முடியுமா என வினவினார். காலக்கெடு என்ற பதத்தையே விடுதலைப் புலிகள் பாவிக்க விரும்புவதாகக் கூறிய தமிழ்ச்செல்வன், பேச்சுகளும் போர் நிறுத்த உடன்பாடும் முடிவுறும் கால வரம்பை இது குறிப்பதாகச் சுட்டிக்காட்டினார். இந்தக் கால வரம்பு ஏப்ரல் மாதம் 19 ஆம் நாள்வரை நீடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அவர், இந்தக் கால இடைவெளிக்குள் அரசு எடுத்த முடிவுகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுகளில் பங்குபற்றுவதை நிறுத்திக் கொள்ளும் என எச்சரித்தார்.

புதிதாகப் பேச்சுகளில் கலந்துகொண்ட அரச தரப்புப் பிரதிநிதிகளான ஆயர் பெர்னாண்டோ, கலாநிதி உயாங்கொட, அபயசேகர ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு மிகவும் நெருக்கமானவர்களாக இருந்த போதும் அவர்களிடம் முடிவுகள் எடுக்கும் அதிகாரம் இருக்கவில்லை. விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களைப் பொறுமையுடன் செவிசாய்த்த அவர்கள், நாம் தெரிவித்த விடயங்களை ஜனாதிபதி சந்திரிகாவிடம் எடுத்துக் கூறுவதாக மட்டும் உறுதியளித்தனர். முதல் நாள் பேச்சுகள் முடிந்ததும் பலப்பத்தபெண்டி, பிரிகேடியர் பீரிஸ், கப்டன் ராஜரத்ன ஆகியோர் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றனர். புதிய பிரதிநிதிகள் இரண்டாம் நாள் பேச்சில் கலந்து கொண்டனர். தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவதற்கு ஆயர் பெர்னாண்டோ விரும்பினார். அவ்வேளை பிரபாகரன் யாழ்ப்பாணத்தில் இருக்கவில்லை என்பதால் சந்திப்பை ஒழுங்கு செய்ய முடியவில்லை.

வழமை போல நான்காவது கட்டச் சுற்றுப் பேச்சுகளும் எவ்வித உருப்படியான தீர்மானங்களும் எடுக்கப்படாது முடிவுற்றன. பேச்சுகளில் பரிமாறப்பட்ட கருத்துகளை அரச தரப்புப் பிரதிநிதிகள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் எடுத்துக் கூறுவார்கள் என்பதும், அதற்கான பதிலுரையை அவர் கடிதம் வாயிலாக எமக்குத் தெரியப்படுத்துவார் என்பதும் நாம் அறிந்ததே.

### சந்திரிகாவின் வாக்குறுதிகள்

1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் நாள் ஜனாதிபதி சந்திரிகா நீண்ட கடிதம் ஒன்றைத் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பி வைத்தார். விடுதலைப் புலிகள் முன்வைத்த கோரிக்கைகளுக்குப் பதிலுரைப்பதாக அந்தக் கடிதம் அமையப்பெற்று இருந்தது. இந்த விடயங்கள் குறித்து, அரசின் நிலைப்பாட்டை விளங்கப்படுத்தி, எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்பதையும் சந்திரிகா தெளிவுபடுத்தினார். அவர் பிரபாகரனுக்கு எழுதிய கடிதம் வருமாறு:-

*12 ஏப்ரல் 1995*

*திரு.வே.பிரபாகரன்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*அன்பின் திரு.பிரபாகரன் அவர்கட்கு,*

*ஏப்ரல் மாதம் 6 ஆம் நாள் நீங்கள் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நாம் பரிசீலனைக்கு எடுத்தோம். யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் மாதம் 10, 11 ஆம் நாள்களில் நிகழ்ந்த பேச்சுகளின் போதும் இந்த விடயங்கள் குறித்தே கலந்துரையாடல் நடைபெற்றது. உங்களது கடிதத்தில் குறிப்பிடப்பட்ட காலக்கெடுவானது ஓர் இறுதி எச்சரிக்கை அல்ல என்றும், ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களை நிறைவு செய்வதற்கு விதிக்கப்பட்ட கால வரம்பு என்றும் திரு.தமிழ்ச்செல்வன் தனது ஆரம்ப உரையில் தெளிவுபடுத்தினார் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன்.*

*நீங்கள் குறிப்பிட்ட நான்கு பிரச்சினைகள் பற்றி இனி விவரமாகப் பார்ப்பதுடன், இவை குறித்து எமது நிலைப்பாட்டையும், நாம் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளையும் இங்கு விளக்கிக் கூற விரும்புகிறேன். இந்தப் பிரச்சினைகள் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை. இவற்றிலுள்ள சில பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஏற்கனவே கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. வடக்கில் வாழும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் வகையில் மேற்கொண்டும், ஆக்கபூர்வமான முடிவுகளை எடுக்கவும் நாம் தீர்மானித்திருக்கிறோம். சில பிரச்சினைகள் இராணுவ ரீதியான விளைவுகளை உண்டு பண்ணக் கூடியவை என்பதால், போருக்கு முடிவு கட்டும் அரசியல் பேச்சுகளின் முன்னேற்றத்துக்கு இசைவாக இவற்றுக்குத் தீர்வு காண வேண்டும்.*

*1. பொருளாதாரத் தடை*

*கீழ்க்கண்ட பொருள்கள் மட்டும் இப்பொழுது தடை விதிக்கப்பட்ட பட்டியலில் உள்ளன.*

*ஆயுதங்கள்/ரவைகள், வெடிமருந்துகள், தொலை இயக்கிகள், இரட்டைத் தொலைநோக்கிகள், தொலை நோக்கிகள், திசையறி கருவிகள், சீருடைத் துணிகள், சிறு மின்கலங்கள்.*

*இவற்றைத் தவிர ஏனைய பொருள்கள் அனைத்தும் தடையின்றி வடக்குக்குக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படும். ஏப்ரல் மாதம் 13 ஆம் நாள், இது குறித்து அரசின் பிரகடனம் வெளியிடப்படும். இதைத் தொடர்ந்து மேற்குறிப்பிட்ட எட்டுப் பொருள்களையும் தடை செய்யும் அரச வர்த்தமானியும் வெளியாகும்.*

*ஏற்கனவே தடை நீக்கம் செய்யப்பட்ட அறிவிப்புகள் நிறைவு செய்யப்படவில்லை என நீங்கள் குறிப்பிட்டமையை நாம் கவனத்தில் எடுத்தோம். சில இடையூறுகள் காரணமாகவே தடை நீங்கிய பொருள்களின் விநியோகம் சீராக இருக்கவில்லை. இந்தப் பொருள்கள் எவ்வித தடையுமின்றி வடக்கில் விநியோகம் செய்யப்படுவதற்குக் கண்டிப்பான நடவடிக்கைகளை நாம் ஏற்கனவே எடுத்துள்ளோம். இந்த முயற்சியின் ஓர் அங்கமாக வவுனியா காவல் சாவடிகளில் குடிமக்கள் குழுக்களை நியமிக்க இருக்கிறோம். தடைகள் பற்றிப் புகார்கள் செய்யவும், உடன் தீர்வு நடவடிக்கைகளை எடுக்கவும் இந்தக் குழுக்கள் உதவிபுரியும்.*

*2. மீன்பிடி மீதான தடைகள்*

*முன்பு ஒரு தடவை நான் எடுத்த நடவடிக்கை காரணமாக மீன்பிடி மீதான தடை கணிசமான அளவு தளர்த்தப்பட்டுள்ளது. எமது தூதுக் குழுவினருக்கு நீங்கள் தெரிவித்த யோசனைகளின் அடிப்படையில், மீன்பிடித் தடைகள் மேலும் தளர்த்தப்பட்டுள்ளன. கீழ்க்கண்ட விதிவிலக்குகளைத் தவிர, மற்றும்படி எல்லாநேரத்திலும் மீன்பிடித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

*i) தலைமன்னாரிலிருந்து பேய்முனை வரை கரையிலிருந்து ஐந்து மைல்தூரத்துக்கு மட்டுமே மீன்பிடிக்கு அனுமதியுண்டு.*

*ii) கரையோரமாக அமைந்திருக்கும் பாதுகாப்புப் படைகளின் முகாம்களிலிருந்து, பக்கவாட்டாக இருபுறமும் ஒரு மைல் தூரம் வரையும், கரையிலிருந்து கடலை நோக்கியதாக இரு கடல் மைல்கள் தூரம் வரையும் மீன்பிடிப்பதற்கு அனுமதியில்லை.*

*iii) கரையோரமாகவுள்ளதுறைமுகங்கள், குடாக்கள், கழிமுகங்களில் மீன்பிடிக்கு அனுமதியில்லை. இது குறித்துக் கிழக்கில் எழக்கூடிய பிரச்சினைகள் பற்றி உள்ளூர் மட்டத்தில் பேச்சுகள் நடத்தி இணக்கம் காணப்பட வேண்டும்.*

*தொண்டைமானாறிலிருந்து பேய்முனை வரையும் யாழ்ப்பாண நீரேரியிலும் வழமைபோல மீன்பிடிக்கு அனுமதியுண்டு. பேய்முனையிலிருந்து தலைமன்னார் வரை விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் மூன்று மாதத்துக்குள் மீள் பரிசீலனை செய்யப்படும். இந்தக் கால இடைவெளிக்குள் சிறிலங்காவின் பிரதேசக் கடல் எங்கும் மீன்பிடிக்க அனுமதிக்கும் உடன்பாடுகள் செய்து கொள்ள அரசு சகல முயற்சிகளையும் எடுக்கும்.*

*வடக்கில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் துன்பங்களை நீக்கி அவர்களது வாழ்வில் இயல்புநிலையை ஏற்படுத்தும் குறிக்கோளுடனேயே, பெற்றோல், டீசல் உட்பட மக்களின் பாவனைப் பொருள்கள் மீதான தடையையும் மீன்பிடி மீதான கட்டுப்பாடுகளையும் அகற்றியுள்ளோம். இதுவே, எமது ஆரம்பக் கூட்டு முயற்சியாக இருக்க வேண்டும் என்பதில் நாம் இணக்கப்பாடு கண்டிருக்கிறோம்.*

*இனி, மற்றைய இரு பிரச்சினைகள் பற்றிப் பார்ப்போம்.*

*3. பூநகரி முகாம்*

*சங்குப்பிட்டி வீதியைப் பொது மக்களின் போக்குவரத்துக்குத் திறந்து விடுவதானால் பூநகரி இராணுவ முகாம் அகற்றப்பட வேண்டும் என்பது உங்களது கோரிக்கை. இந்த இராணுவ முகாமின் வெளிப்புற எல்லையை 600 மீற்றர் வரை பின் நகர்த்தியுள்ளோம். வீதியில் சோதனைகள் நடைபெறாது என்றும், எவ்வித தடையுமின்றி குடிமக்கள் அந்த வீதியைப் பாவிக்கலாம் என்றும் நாம் உறுதியளித்திருக்கிறோம். நாம் இதனை நடைமுறைப்படுத்துவோம்.*

*எனினும், இந்த நேரத்தில், இந்த இராணுவ முகாமை அகற்றிவிடுவது பற்றி எம்மால் முடிவுகள் எவையும் எடுக்க முடியாது. இந்தப் படைமுகாம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது. அத்தோடு, பகைநிறுத்த உடன்பாட்டின் விதிகளின்படி, இராணுவச் சமநிலை பேணப்பட வேண்டும் என்பதும், இரு தரப்பினரில் ஒருவராவது மற்றவரின் இராணுவ வலுவைக் பாதிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதும் கடப்பாடாக உள்ளது. இருப்பினும், நாம் கட்டியெழுப்ப முயலும் அமைதியும் இயல்புநிலையும் ஈற்றில் இராணுவத்தின் இருத்தலைக் குறைக்க வேண்டும் என்பதால் உங்களது கோரிக்கை தொடர்ந்து எமது பரிசீலனையில் இருக்கும். மூன்று மாத காலத்துக்குள் அல்லது அரசியல் பேச்சுகள் தொடங்கிய பின்னர் இந்தப் பிரச்சினை பற்றி மீண்டும் பேசுவோம்.*

*4. கிழக்கில் ஆயுதம் தரித்த புலிப் போராளிகளின் நடமாட்டம்*

*பகை நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையிலேயே இந்தப் பிரச்சினை பேசித் தீர்க்கப்பட வேண்டும் என நாம் கருதுகிறோம். இந்தப் பிரச்சினை பற்றியும் மற்றும் இரு தரப்பும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும், சமாதானக் குழுக்களை இயக்குவது பற்றியும் நாம் பேச்சுகளை நடத்தி, இணக்கப்பாடு கண்டு, அதனை அமைதி உடன்பாட்டின் இணை ஆவணமாகச் சேர்த்து, செம்மையாக நடை முறைப்படுத்தத் தயாராக இருக்கிறோம்.*

*இந்த நான்கு விவகாரங்கள் குறித்து நாம் எடுத்துள்ள நடவடிக்கைகளும், எடுக்கப் போகும் நடவடிக்கைகளும் உங்களுக்குத் திருப்தியை ஏற்படுத்தும் என்று நாம் நம்புகிறோம். இதன் அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்வரை பேச்சுகளை நாம் தொடர்ந்து நடத்தலாம்.*

*அடுத்த கட்டப் பேச்சுகள் கீழ்க்கண்ட விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென யோசனை தெரிவித்தோம்.*

*i) பகை நிறுத்த உடன்பாட்டுக்கு ஓர் இணை ஆவணம் தயாரிப்பது குறித்துப் பேசுவது.*

*ii) புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் பற்றிக் கூட்டு அதிகார சபையை நிறுவுதல்.*

*iii) எதிர்காலப் பேச்சுக்களை வடிவமைத்தல்.*

*இது சம்பந்தமான பேச்சுக்களை, மே மாதம் 5 - 10 ஆம் திகதிகளுக்கு இடையிலான நாள்களில் நடத்தலாமென நாம் கருதினோம்.*

*உங்கள் நேர்மையுள்ள*
*சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா*

(தொடரும்...)

# புத்தாண்டு விழா

சாவகச்சேரி கல்வயல் வீரகத்தி விநாயர் ஆலய அறநெறிப் பாடசாலையினர் நடத்தும் சித்திரைப்புத்தாண்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஆலய திருமண மண்டபத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வைத்தியர் சு.சி. அருளானந்தமும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிர தேச செயலக இந்து கலாசார அலுவலர் திருமதி.வி.மகிந்தினி, கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய ஆசிரியர் மகிந்தன் ஆகியோரும் கலந்து கொள்வர். நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், நாடகம் போன்றவை இடம்பெறும். அத்துடன் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கோகுலம் இசைக் குழுவின் இசை நாடக வெளியீடும் இடம்பெறும். (ச)

## தினசரி ராசி பலன் 14.04.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் முதலாம் நாள் திருதியைத்திதி. மாலை 5.24 மணி வரை. பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம்: விசாகம் பகல் 10.46 மணி வரை. பின்னர் அனுசம். மரணயோகம் மாலை 5.24 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகு காலம்: பகல் 10.38 மணிமுதல் 12.10 மணி வரை. சுபநேரம்: மாலை 6.01 மணி முதல் 7.31 மணி வரை. இன்று சங்கடகர சதுர்த்தி. மேலும் ஏவிளம்பி புதுவருஷம் பிறக்கின்றது. பொருத்தமான நிறம் மஞ்சள். திதி இல்லை. பிறந்த நட்சத்திர வழிபாடு: அனுஷம். புதுவருஷம் பிறக்கும் நேரம்: பங்குனி 31ஆம் திகதி வியாழக்கிழமை பி.இ. 2.04 இல் ஏவிளம்பி என்னும் பெயருடைய புத்தாண்டு உதயமாகின்றது. புண்ணிய காலம்: பங்குனி 31 ஆம் திகதி இரவு 10.04 முதல் மறுநாள் (14-04-2017) காலை 6.04 வரை மேட சங்கிரமான புண்ணிய காலமாகும். கைவிசேட நேரம் 14-01-2017 வெள்ளி இரவு 8.10 முதல் 9.45 வரை 16-01-2017 ஞாயிறு இரவு 8.08 முதல் 9.30 வரை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** தீமையான நாள். குடும்ப உறவில் சச்சரவுகள் காணப்படும். தொழிலில் பல பிரச்சினைகள் உண்டாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும்.

**ரிஷபம்:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகளால் கடன்பளு அதிகரிக்கும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகத்தர்கள் விரும்பிய இடமாற்றம், பதவி உயர்வு கிட்டும். பெண்களுக்குத் திருமண வாய்ப்பும், சுபகாரியங்களும் நடக்கும்.

**கடகம் :** அனுகூலமான நாள். புதிய தொழில் வாய்ப்பு அமையும். நண்பர்களின் ஆதரவு நன்மையாக அமையும். விட்டுப்பிரிந்த உறவுகள் மீண்டும் சேர வாய்ப்புள்ளது.

**சிம்மம் :** சலனம் மிகுந்த நாள். வருமானம் குறையும். எதிர்பார்த்த காரியங்கள் ஏமாற்றத்தைத் தரும். குடும்பத்தில் உட்பூசல்கள் காணப்படும்.

**கன்னி:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். தேவையற்ற அலைச்சல்கள் உண்டாகும். உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தாமதமாகும்.

**துலாம்:** சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். தொழில் செய்யுமிடத்தில் பதவி உயர்வு, சம்பள உயர்வு உண்டாகும். சுபகாரியங்கள் நடக்க வாய்ப்பு அமையும்.

**விருச்சிகம்:** அதிஷ்டமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். தொழில் செய்யுமிடத்தில் நல்ல பலன்கள் கிடைக்கும். உத்தியோகத்தர்கள் இதுவரை பட்ட துன்பம் நீங்கி நன்மை அடைவார்கள்.

**தனுசு:** கவலையான நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்புகள் குறையும்.

**மகரம்:** மேன்மையான நாள். பொருள்வளம், தொழில்வளம் சிறப்பாக இருக்கும். விட்டுப்பிரிந்த உறவுகள் மீண்டும் சேர வாய்ப்புள்ளது. உத்தியோக மேன்மை உண்டாகும்.

**கும்பம்:** விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தி அடையும். வியாபாரத் தொழில் விருத்தியடையும். சுயதொழிலில் விருத்தியும், நிறைய ஆதாயமும் கிடைக்கும்.

**மீனம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். எண்ணியவை நிறைவேறும். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவார்கள்.

சந்திராட்டமநாள்: அசுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இந்நாளில் நற்கருமங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

# டெங்குத் தொற்றாளர்களுக்காக தனி அதி தீவிர சிகிச்சைப் பிரிவு

## சுகாதார அமைச்சு தீர்மானம்

கொழும்பு, ஏப்.14

டெங்கு தொற்றாளர்களின் சிகிச்சையின் நோக்கில், டெங்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் டெங்கு நோயாளர்களுக்காக தனியாகத் தங்கியிருந்து சிகிச்சை பெறும் அறை என்பன நிர்மாணிக்கப்படவுள்ளன.

சுகாதார அமைச்சு இதற்கான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் சுகாதார அதிகாரிகளுக்கும் இடையே நேற்றுமுன்தினம் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, மேல், தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பிரதான மருத்துவமனைகளில் இவ்வாறான விசேட பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.

மேல் மாகாணத்தில் கொழும்பு தேசிய மருத்துவ மனை, தெற்கு கொழும்பு போதனா மருத்துவ மனை, பாணந்துறை மற்றும் தெற்கு மாகாணத்தில் அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் கராப்பிட்டிய ஆகிய பிரதேசங்களிலுள்ள மருத்துவமனைகளிலும்-

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மருத்துவ மனைகளிலும் இந்தப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை நோயாளர்களின் மரபணுப் பரிசோதனையைச் சோதித்து, அதற்கமைய ஔடதங்களை நிர்ணயிக்கும் செயற்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சிறப்பு மருத்துவர்கள் சிலர் மேற்கொண்ட பரிசோதனைகளின் தரவுகளுக்கமைய இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய, முதலில் புற்று நோய்க்காக இந்த முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# 'சைட்டம்' கல்லூரியை மஹிந்த ஆட்சியின்போதே தடை செய்திருக்க வேண்டும்

## 'மக்கள் சக்தி' அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கூறுகிறார்



கொழும்பு, ஏப்.14

'சைட்டம்' கல்லூரி, கல்வியை வியாபாரம் செய்யப் போகின்றது என்று தெரிந்தும் மஹிந்த காலத்தில் அதனை நடத்துவதற்கு யோசனைகள் முன்மொழியப்பட்டன. எனவே அன்றே அந்தக் கல்லூரியை தடை செய்திருக்க வேண்டும் என்று புரவெசி பலய (மக்கள் சக்தி) அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

'சைட்டம்' கல்லூரிக்காக வைத்தியர்கள் சங்கம் தீர்க்கமான ஒரு முடிவை எடுத்திருக்க வேண்டும், அவர்கள் கலந்துரையாடி அன்றே தடை செய்திருக்க வேண்டும்.

அவ்வாறு செய்திருந்தால் பின்னாளில் இலங்கையில் ஊழல்கள் செய்யாத வைத்தியர்கள் உருவாகுவார்கள். அரசியலில் உள்ளவர்கள் தங்கள் இஷ்டத்தின்படியே ஆட்சி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

அதிலிருந்து வெளியே வர வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் மக்களின் பிரச்சினைகளை மட்டுமே ஆராய வேண்டும்.

மாறாக அவர்களின் பிரச்சினைகளை பற்றிப் பேசுவதற்கு நாம் ஆட்சிக்கு அழைத்து வரவில்லை. தேசத்தின் கட்டமைப்பையும், புரிந்துணர்வையும் மதிக்கத்தக்க சிறந்த கல்விமான்களே நாட்டுக்குத் தேவை. ஆனால் ஆட்சியாளர்களின் செயற்பாட்டால் கல்வியின் மதிப்பு சிதைவடைந்து கொண்டிருக்கின்றது.- என்றார் (எ)

# கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கையர்கள் நாடு திரும்பினர்

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டு மூன்று தினங்களாக பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த இலங்கையர்கள் 8 பேரும் நேற்றுமுன்தினம் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அந்த 8 பேரும் கட்டார் விமானச்சேவைக்குச் சொந்தமான ஏரிஎஸ் 654 என்ற விமானத்தின் மூலம் நேற்றுமுன்தினம் மாலை 5.12 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

கடத்தப்பட்ட எட்டு பேரையும் வரவேற்க அவர்களின் உறவினர்கள் பெருந்திரளானோர் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## புத்தாண்டு கயிறு இழுத்தல் போட்டியா?



பொலனறுவை - திம்புலாகல பிரதேசத்தில் சுமார் 9 அடி நீளமான இராட்சத மலைப்பாம்பு ஒன்றைக் கிராமவாசிகள் பிடித்துள்ளனர்.

திம்புலாகல கிராமத்தில் நேற்றுமுன்தினம் காலை வீடு ஒன்றுக்கு அருகில் அந்த மலைப்பாம்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பாம்மை கிராமவாசிகள் பிடித்ததுடன் அதை கைகளில் ஏந்தியவாறு புகைப் படங்களையும் எடுத்துள்ளார்கள். பின்னர் சேருவில வனத்தில் அந்தப் பாம்பு விடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

# வாகன விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மாலபே வெலிவிட்ட பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். டிப்பர் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.


19 மற்றும் 22 வயதான இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் டிப்பர் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (எ)

# பழைய மாணவர் சங்கக் கூட்டம்

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் எதிர் வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரி பொது ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறும். (ச)

# ஐதராபாத் அணியை வீழ்த்தி மும்பை இந்தியன்ஸ் வெற்றி!



ஐதராபாத் அணிக்கு எதிரான ஐ.பி.எல். லீக் போட்டியில் மும்பை அணி 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

இந்தியாவில் ஐ.பி.எல். தொடரின் பத்தாவது 'சீசன்' தற்போது இடம்பெற்று வருகிறது. மும்பை வான்கடே மைதானத்தில் இடம்பெற்ற லீக் போட்டியில் மும்பை, 'நடப்பு சம்பியன்' ஐதராபாத் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணியின் தலைவர் ரோகித் களத் தடுப்பைத் தேர்வுசெய்தார்.

ஹர்பஜன் சிங் தனது 100 ஆவது ஐ.பி.எல். போட்டியில் விளையாடினார். ஐதராபாத் அணியில் இடம் பெற்ற தமிழக அணியின் சகலதுறை வீரர் விஜய் ஷங்கர் தனது முதலாவது ஐ.பி.எல்., போட்டியில் களமிறங்கினார்.

ஐதராபாத் அணிக்கு தலைவர் வோர்னர், ஷிகர் தவான் ஜோடி ஆகியோர் நல்ல ஆரம்பத்தைக் கொடுத்தமை. ஹர்பஜன் சிங் ஓவரில் அடுத்தடுத்து பவுண்டரிகள் அடித்த வோர்னர், அடுத்து மலிங்க ஓவரிலும் இரு பவுண்டரிகள் விளாசினார். மெக்லீனகன் ஓவரில் ஷிகர் தவான், ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகள் அடித்தார்.

தொடர்ந்து மிரட்டிய வோர்னர், பாண்ட்யா மற்றும் ஹர்பஜன் பந்துகளை சிக்ஸருக்கு விரட்டினார். இவர் 49 ஓட்டங்களை எடுத்து (34 பந்துகள்) ஆட்டம் இழந்து, அரைச்சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

தீபக் ஹூடா (9 ஓட்டங்கள்) நீடிக்கவில்லை. மறுமுனையில் நிதானம் காட்டிய ஷிகர் தவான் (48 ஓட்டங்கள்), மெக்லீனகன் பந்தில் போல்டானார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட யுவராஜ் சிங், 5 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். மலிங்க ஓவரில் இரு பவுண்டரிகள் அடித்த பென் கட்டிங் (20 ஓட்டங்கள்), பும்ரா 'வேகத்தில்' போல்டாகி திரும்பினார்.

விஜய் ஷங்கர் (1 ஓட்டம்), நமன் ஓஜா (9 ஓட்டங்கள்) வந்த வேகத்தில் கிளம்பினர். ஐதராபாத் அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுகளுக்கு 158 ஓட்டங்களை எடுத்தது. புவனேஷ்வர் குமார் (4 ஓட்டங்கள்) ஆட்டம் இழக்காமல் இருந்தார். மும்பை சார்பில் பும்ரா 3, ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

எளிய இலக்கைத் துரத்திய மும்பை அணிக்கு பட்லர் (14 ஓட்டங்கள்) அதிர்ச்சி கொடுத்தார். ரோகித் சர்மா (4 ஓட்டங்கள்) மீண்டும் ஒற்றை இலக்க ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். ஐ.பி.எல்., அரங்கில் 2000 ஓட்டங்களைக் கடந்த பார்த்திவ் பட்டேல், 39 ஓட்டங்கள் (24 பந்துகள்) எடுத்தார்.

போலார்டு (11 ஓட்டங்கள்) மறுபடியும் அணியை கைவிட்டார். நெஹ்ரா ஓவரில், தலா ஒரு சிக்ஸர், பவுண்டரி என பாண்ட்யா விளாச, மும்பை அணியின் வெற்றி எளிதானது.

கடைசி நேரத்தில் பாண்ட்யா (37 ஓட்டங்கள், 20 பந்துகள்), ராணா (45 ஓட்டங்கள், 36 பந்துகள்) இருவரும் புவனேஷ்வர் குமாரிடம் சிக்கினர். இருப்பினும், மும்பை அணி 18.4 ஓவர்களில், 6 விக்கெட்டுக்கு 159 ஓட்டங்களை எடுத்து, 4 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஹர்திக் (2 ஓட்டங்கள்), ஹர்பஜன் (3 ஓட்டங்கள்) ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

# விக்கெட் காப்பாளரை பாதுகாக்க விதிமுறை மாற்றம் பரிந்துரை!



*2012 ஆம் ஆண்டு இங்கிலாந்து தொடரின் போது தென்னாபிரிக்க விக்கெட் காப்பாளர் மார்க் பவுச்சரின் இடது கண்ணை பெய்ல்ஸ் தாக்கிய காட்சி.*

லண்டன் , ஏப்.14

விக்கெட் காப்பாளரின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ஆட்ட விதிமுறையில் திருத்தம் கொண்டு வர பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கிரிக்கெட் விதிமுறைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்து வரும் இங்கிலாந்தில் உள்ள மெரில்போன் கிரிக்கெட் கிளப் (எம்.சி.சி) இந்த விதிமுறை திருத்தம் கொண்டு வர வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

அதாவது, கிரிக்கெட் போட்டியில் பந்து வீச்சாளர்கள் 'கிளீன் போல்ட்' செய்கையில் 'ஸ்டம்பில்' இருக்கும் பெய்ல்ஸ்கள் வேகமாக எகிறும். பந்தை சிரத்தையுடன் கவனிக்கும் விக்கெட் காப்பாளர் சில சமயங்களில் பெய்ல்ஸ்சின் எதிர்பாராத தாக்குதலுக்கு ஆளாகி பாதிப்பை சந்திக்கிறார்கள்.

2012 ஆம் ஆண்டில் இங்கிலாந்து சுற்றுப் பயணத்தில் பயிற்சி ஆட்டத்தின் போது பெய்ல்ஸ் தாக்கியதில் தென்னாபிரிக்க விக்கெட் காப்பாளர் மார்க் பவுச்சருக்கு இடது கண்ணில் காயம் ஏற்பட்டது. இதனால், அவரது கிரிக்கெட் வாழ்க்கை அஸ்தமனமானது.

இதை கவனத்தில் கொண்டுள்ள எம்.சி.சி, பந்து பட்டதும் பெய்ல்ஸ் குறிப்பிட்ட தூரத்துக்கு மேல் எகிறாத அளவுக்கு 'ஸ்டம்ப்-பெய்ல்ஸ்' இடையே லேசான இணைப்பு கொடுத்து கட்டுப்படுத்தலாம். அதற்காக கிரிக்கெட் விதிமுறையில் மாற்றம் கொண்டு வர வேண்டும் என்று கூறியுள்ளது.

தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்தைச் சேர்ந்த கம்பனிகள் புதிய ஸ்டம்ப் மற்றும் பெய்ல்ஸ்சை வடிவமைத்துள்ளன. இந்த விடயத்தில் சர்வதேச கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் குழு தான் இறுதி முடிவை எடுக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டு வந்து ரசிகர்களை குதூகலப்படுத்துவாரா டோனி?


தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல். போட்டிகளில் தடுமாறும் டோனி மிக விரைவாக இந்தத் தடுமாற்றத்திலிருந்து மீள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் 'ஹெலிகெப்டர் ஷொட்' மூலம் பந்துகளை வானில் பறக்க விட்டு, ஓட்ட மழை பொழிய வேண்டுமென ரசிகர்கள் பிரார்த்திக்கின்றனர்.

இந்திய அணியின் வெற்றித் தலைவர் டோனி (வயது 35). ஐ.பி.எல். தொடர்களில் சென்னை அணியின் தலைவராக இருந்து, 8 சீசனிலும் அணியை அடுத்த சுற்றுக்குக் கொண்டு சென்றார்.

இதில் 6 முறை இறுதிப் போட்டிக்குச் சென்ற சென்னை அணி, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் சம்பியன் கிண்ணம் வெல்லக் காரணமாகத் திகழ்ந்தார். இதுதவிர, 2010, 2014 ஆம் ஆண்டுகளில் சம்பியன்ஸ் லீக் தொடரில் கிண்ணத்தை வென்று தந்தார்.

இப்படி ஐ.பி.எல். தொடரில் வெற்றிகரமான தலைவரான இவர், சென்னை அணியின் தடை காரணமாக கடந்த ஆண்டு புனே அணிக்குத் தலைவர் ஆனார். இதில் 14 போட்டிகளில் 5 இல் மட்டும் வென்று 7 ஆவது இடம் பிடித்தமை.



இந்த ஆண்டு டோனியை நீக்கி விட்டு, ஆஸ்திரேலியாவின் ஸ்டீவ் ஸ்மித்தை தலைவராக்கினர். இதனால், டோனி மனதளவில் பாதிக்கப்பட்டார். தலைவர் பதவி என்ற நெருக்கடி இல்லாததால், இவரிடம் பழைய 'ஹெலி கெப்டர்' ஷொட்டுகளை எதிர்பார்த்த ரசிகர்கள் ஏமாந்தனர். இவரது 'பினி ஷிங்' திறனும் குறைந்து போனது. பந்துகளை எதிர்கொள்ளவே தடுமாறுகிறார்.

புனே அணிக்காக இந்த சீசனில் விளையாடிய 3 போட்டிகளில் 37 பந்துகளை எதிர்கொண்டு, மொத்தம் 28 ஓட்டங்கள் (தலா 1 சிக்ஸர், பவுண்டரி) எடுத்தார்.

இதற்குக் காரணம் டோனிக்கும் புனே அணி நிர்வாகத்திற்கும் சரியான புரிதல் இல்லாமையே ஆகும்.

டில்லி அணிக்கு எதிராக ஸ்மித் இல்லாத நிலையில், டோனி இருந்த போதும், ரகானேவுக்கு தலைவர் பொறுப்பு வழங்கினர். அத்துடன், துடுப்பாட்டத்தில் முன்னதாக களமிறங்க விரும்பும் டோனிக்கு, பின் வரிசை தான் கிடைக்கிறது.

35 வயதானதால் முன்பு போல துடிப்பாக விளையாட முடியவில்லை என்ற விமர்சனமும் வைக்கப்படுகிறது.

ஐ.பி.எல். தொடருக்குப் பின் இங்கிலாந்தில் சம்பியன்ஸ் டிராபி தொடர் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில் விமர்சனங்களைத் தவிடுபொடியாக்கி, பழைய டோனியாக மீண்டு வர வேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## ஜனாதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தில் முக்கிய செய்தி ஒன்றை வெளியிடவுள்ளனர் என்றும், அவர்களை வடக்குப் பட்டதாரிகள் நேரடியாகச் சந்தித்து உரையாடலாம் என்றும் கூறப்படுகின்றது.

அங்கஜன் இராமநாதன், எம்.பி. பட்டதாரிகளுக்காக நேற்று வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

"மலரும் புத்தாண்டு உண்மையில் எமது வடக்கு பட்டதாரிகளுக்கு ஒரு நல்ல புத்தாண்டாகத்தான் மலருகின்றது. பட்டதாரிகளின் விடயத்தில் என் கடுமையான முயற்சிகள் எவையும் வீண் போகவில்லை என நான் நம்புகிறேன். இது குறித்து நான் இந்த புத்தாண்டில் மகிழ்வுடன் இருக்கின்றேன்.

கடந்த சில மாதங்களாக எமது வடக்கைச் சேர்ந்த பட்டதாரிகள் தமக்கு நிரந்தர அரச நியமனம் கோரி ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகளில் உள்ள காத்திரமான தேவைத்தன்மையை இங்கிருந்து உடனிருந்து அனுபவித்தாலன்றி வேறு எவராலும் உடனடியாக உணர்ந்துகொள்வது கடினமானதே. வடக்கு இளைஞர்கள், யுவதிகள் பொருளாதார ரீதியில் வலுவடைய வேண்டும் என அதிகமாகவே நான் எதிர்பார்ப்பவன். பொருளாதார ரீதியில் வலுவடையாத எந்த ஓர் இனமும் அடுத்த கட்டத்தை நோக்கி நகரவே முடியாது. அதானால்தான் உரிமைகளுக்காகப் போராடும் இனங்களை வளர்முக நாடுகள் பொருளாதார அடிமைகளாக வைத்திருக்கின்றன .

முகப்புத்தகம் வாயிலாகவும் மின்னஞ்சல் வாயிலாகவும் நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும் என்னைத் தொடர்புகொள்ளும் பட்டதாரிகளாக இருக்கும் தம்பி, தங்கையர்கள் தமது இக்கட்டான சூழ்நிலையைத் தொடர்ச்சியாக எனக்குச் சொல்லி வந்தனர். நான் அவர்களின் உணர்வுகளை உணர்ந்தவன். அதனால் நானும் உடனுக்குடன் தொடர்ச்சியாக ஜனாதிபதியிடம் இது தொடர்பில் கதைத்து வந்தேன் .

ஆயினும் நான் யாழ்ப்பாணத்தில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த பட்டதாரிகளை நேர டியாகச் சென்று கூடச் சந்திக்கவில்லை. காரணம் அவர்களை நான் சந்திக்கும்போது என்னால் எந்தவிதமான தீர்க்கமான முடிவுகளையும் அவர்களிடம் சொல்ல முடியாது. இது தொடர்பில் ஒருமுடிவினை எடுத்துவிட்டு பின்னர் அவர்களைச் சந்தித்து அந்த நல்ல முடிவை அறிவிக்கவே நான் விரும்பினேன். எப்போதும் நான் எமது இளைஞர், யுவதிகளின் உணர்வுகளோடு விளையாட விரும்பாதவன் என்பதை அவர்களே நன்கு அறிவர்.

எமது வடக்கு பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க வேண்டும் என அவர்களின் காத்திரமான, அவசிய, அவசர தேவை நிலைகளை நான் நேரடியாகவே ஜனாதிபதியிடம் கூறியிருந்தேன். 31.03.2017 அன்று பட்டதாரிகள் சிலர் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாட வாய்ப்பையும் ஏற்படுத்திக்கொடுத்தேன் . அப்போது, அந்தச் சந்திப்பின் போது, இவ்வாறான விடயங்கள் தொடர்பில் உடனடியாக எந்த முடிவுகளையும் சொல்லவோ, எடுக்கவோ முடியாது. சித்திரை மாதம் அளவில் ஒரு நல்ல முடிவைத் தான் எடுப்பார் என ஜனாதிபதி உறுதியளித்திருந்தார் .

அதன் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளரும் சிறிலங்கா சுதந்திரப் பட்டதாரிகள் சங்க செயலாளரும் யாழ்ப்பாணத்தில் உள்ள எனது அலுவலகத்திற்கு 15.04.2017 சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வருகை தரவுள்ளனர் . நிச்சயமாக அவர்கள் வடக்கு பட்டதாரிகளுக்கு ஒரு நல்ல செய்தியைத் தான் சொல்லப் போகின்றனர் . அவர்களை வடக்குப் பட்டதாரிகள் நேரடியாக சந்தித்தும் உரையாடலாம் .

அது மாத்திரமல்லாமல், 2013 இல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் பெற்ற பட்டதாரிகள் தமது பிரச்சினைகளை நேரடியாக 15.04.2017 அன்று எனது பிரதான அலுவலகத்திற்கு வருகை தரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் ஜனாதிபதியின் செயலாளரிடமும் நேரடியாகத் தெரிவிக்கலாம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன் .

பட்டதாரிகளின் விடயத்தில் மட்டும் அல்ல, அபிவிருத்தி உத்தியோகத்தர் விடயத்தில் மட்டுமல்ல, என்னை நம்பி வாக்களித்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி தேர்தல் தொகுதி மக்களுக்கு அவர்களின் நம்பிக்கை மற்றும் வாக்கு வீண் போகா வண்ணம் நான் சேவையாற்றுவேன்; செயற்படுவேன் என்பதையும் கூட மலரும் புத்தாண்டு பட்டதாரிகளுக்கும் வடக்கு தமிழ் மக்களுக்கும் இன்பங்களையும் நிம்மதியையும் அதிகமாகவே தரவேண்டும் என இறைவனின் ஆசிகளையும் வேண்டிநிற்கின்றேன். -என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழகத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு வந்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொழும்பு இராஜகிரியப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே தனது மூன்று குழந்தைகளுடன் இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார் என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்ணின் கணவர் வெளிநாட்டில் தொழில் செய்து வரும் நிலையில், அந்தப் பெண்ணை அவரது மாமியார் கொடுமைப் படுத்தியுள்ளார். இதனால் மாமியார் கொடுமையிலிருந்து மீள்வதற்காகக் அந்தப் பெண் இராமேஸ்வரத்தைச் சென்றடைந்துள்ளார்.

தூத்துக்குடி அருகே உள்ள மணியாசசியில் வசித்துவரும் தன் பெற்றோருடன் சேர்ந்து வாழும் நோக்கில் நேற்றுமுன்தினம் இரவு படகு மூலம் அந்தப் பெண் தனுஷ்கோடியைச் சென்றடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

படகோட்டிகள் இவர்களை அரிச்சல் முனைப் பகுதியில் உள்ள மணல்திட்டில் நள்ளிரவில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் மணல்திட்டில் சிக்கித் தவித்த அந்தப் பெண்ணையும் அவரது குழந்தைகளையும் கடலோரப் பாதுகாப்புப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அவர்களிடம் தொடர் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## தீர்வில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது. நீண்ட காலமாகக் கிடைக்காத ஒரு சந்தர்ப்பம் இது.

அதனை ஆக்கபூர்வமாக முன்னெடுத்துச் செல்வதற்கு எமது பங்களிப்பை நேர்மைத் திறனுடன் நாம் வழங்க வேண்டும்; வழங்குகின்றோம்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதில் தமிழர் தரப்பு தவறிழைக்கவில்லை என்பதைச் சர்வதேசத்துக்குக் காட்ட வேண்டிய தேவை உண்டு.

அப்படி நேர்மைத் தன்மையோடு நாம் நடந்து கொண்டால் தான், இந்த முயற்சிகளில் தீர்வு கிட்டாமல் போனாலும், அதற்குப் பின்னரும் நீதி தேடும் எமது போராட்டத்துக்குச் சர்வதேசத்தின் ஆதரவுப் பலம் எமக்குத் தொடர்ந்து இருக்கும்.

தீர்வு முயற்சிகளில் முழு ஈடுபாட்டுடன் பங்களிக்கின்றோம் என்பதால் தரும் எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு வந்து விடுவோம் என்பதல்ல.

எமது மக்களினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய - நடைமுறைச் சாத்தியமான - ஒரு தீர்வு முன் வைக்கப்படவேண்டும்.

அப்படியான ஒரு தீர்வை எட்டுவதற்குப் பரிபூரணமான எமது ஒத்துழைப்பு உண்டு.

நாங்கள் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு ஜனநாயகக் கட்சி. அந்த வகையில் எமது மக்களுக்கு நீதி கிடைக்கும்வரை சளைக்காது முயற்சிப்போம்.

இன்று இந்த விவகாரம் உள்நாட்டுவிடயம் அல்ல. இலங்கையுடன் சம்பந்தப்பட்ட விவகாரம் மட்டுமல்ல. இது சர்வதேசமும் நேரடியாகச் சம்பந்தப்படும் அம்சம். அதை மனதில் வைத்துத் தான் நாம் காய்களை நகர்த்த வேண்டியுள்ளது.

உண்மையான - நீதியான -நியாயமான-தீர்வுகிட்டும்வரை நேர்மையுடன் அதில் ஈடுபடுகின்றோம்.

அதனால், தீர்வு கிட்டும் என்பதில் நம்பிக்கை இழந்துவிட்டோம் என்பதல்ல. அதற்காகக் கடைசி வரை கலந்துரையாடுவோம்.

தீர்வு எங்களுக்கு மட்டும் முக்கியமானதன்று. இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண வேண்டிய கட்டாயம் - அவசரம் - இன்று தென்னிலங்கைக்கும் உண்டு. அதனால் அவர்கள் சரியாகச் செயற்படுவார்கள் என்று நம்புவோம்.

தீர்வு வரலாம்; அல்லது வராமல் போகலாம். ஆனால், அந்த முயற்சியில் நாம் நீதியாகச் செயற்பட்டோம் என்பதை வெளிப்படுத்திக் காட்டுவது மிக முக்கியமாகும். - என்றார் சம்பந்தன். (உ)

## வவுனியாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் மேற்கொண்டு வரும் போராட்டம் இன்று 50 ஆவது நாளை எட்டுகின்ற நிலையிலேயே மாபெரும் போராட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இன்று நடத்தப்படவுள்ள போராட்டத்துக்கு வவுனியா மாவட்டத்திலுள்ள சகல பொது அமைப்புக்களையும் ஆதரவு தருமாறு காணாமல் போனோரின் உறவினர்கள் கோரியுள்ளனர்.

அதேவேளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மருதங்கேணி, திருகோணமலை ஆகிய இடங்களிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதுவருட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியட்சகர் கஸ்ரன் ஸ்டனிஸ்லஸ், பொதுமக்களின் நிகழ்வுகளுக்கு இடையூறு ஏற்படுத்துபவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் எச்சரித்துள்ளார்.

பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு வேறிடங்களில் இருந்து மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் பல நிகழ்வுகள், வழிபாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. யாழ்.குடாநாட்டு மக்கள் புதுவருடத்தை மகிழ்ச்சியாகக் கொண்டாட முடியும்.

பொதுமக்கள் ஆலய வழிபாடுகளில் ஈடுபடும்போதும் பொது நிகழ்வுகளில் ஈடுபடும் போதும் இடையூறுகளை ஏற்படுத்த எவருக்கும் இடமளிக்கப் படமாட்டாது. அவ்வாறு இடையூறு ஏற்படுத்துபவர்கள் தொடர்பாக பொதுமக்கள் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்க முடியும்.

சிவில் உடை அணிந்த பொலிஸாரும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வீதிகளில் தேவையற்ற விதத்தில் குழுவாக மோட்டார் சைக்கிள்களில் அலைபவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும். -எனவும் அவர் மேலும் கூறினார். (ம)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படை மனித உரிமை மீறல்கள் போன்றவற்றைச் சர்வதேச நீதிமன்றத்துக்குக்கொண்டுபோகும் வாய்ப்பைத் தமிழ்க் கூட்டமைப்பின் தலைமை தடுத்து விட்டது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்திவரும் நிலையில் -

இது தொடர்பில் இந்த விடயங்களை ஏன் சர்வதேச நீதிமன்றத்துக்குத் தற்போதைக்குக் கொண்டு போக முடியாமல் இருக்கின்றது என்பது பற்றிய விளக்கத்தைச் சுமந்திரன் எம்.பி. வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட எம்.பியுமான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் நேரடியாகப் பங்கு கொண்டு விவாதிக்கும் 'எதிரொலி' நிகழ்ச்சி 'சக்தி' தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகின்றது.

இந்த விவாதத்தில் முதலாவது அங்கம் கடந்த சனியன்று ஒளிபரப்பாகியது. இரண்டாவது பகுதி நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சக்தி ரி.வியில் ஒளிபரப்பாகவுள்ளது.

அதிலேயே மேற்படி விடயத்துக்கு சுமந்திரனின் விளக்கமான பதில் இடம்பெறுவதாக அறிய வந்தது. (உ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்தை ஒத்தோரை - பாலியல் துர்நடத்தைக்குப் பயன்படுத்தினர் என்ற அதிர்ச்சிச் செய்தி வெளியாகியிருக்கின்றது. அஸோஸியட் பிரஸ் இது பற்றிய விவரமான தகவல்களை வெளியிட்டிருக்கின்றது.

இலங்கைப் படையினருக்கும் ஹெய்டி சிறுவர்களுக்கும் இடையில் நிலவிய சந்தேகத்துக்குரிய ஊடாட்டங்கள் குறித்துத் தகவல் வெளியாகியமையை அடுத்து அது குறித்து ஐ.நா. அதிகாரிகளுக்கு முறைப்பாடு கிடைத்தது. பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகள் விசாரிக்கப் பட்டனர்.

16 வயதுப் பெண் ஒருத்தி, தான் இலங்கைத் தளபதி ஒருவருடன் பாலியல் உறவு வைத்திருந்தார் எனக் கூறினார். இன்னொரு 14 வயதுச் சிறுமி தான் பணத்துக்கும், உணவுக்குமாக இலங்கைச் சிப்பாய்களுடன் பாலியல் உறவு செய்தார் என்றாள். இன்னொரு சிறுவன் தான் இருபது அமைதிப் படையினருடன் பாலியல் தொடர்பு கொண்டான் எனக் குறிப்பிட்டான்.

பாதிக்கப்பட்ட மற்றொரு சிறுமி "எனக்கு அப்போது மார்பகங்கள் கூட இருக்கவில்லை. பன்னிரண்டு வயதில் இருந்து 15 வயது வரை அந்த மூன்று வருடங்கள் ஒரு தளபதி உட்பட 50 படையினர் என்னுடன் பாலியல் உறவு வைத்தனர். அந்தத் தளபதி எனக்கு 75 சதம் தந்தார்." - என்றாள். சில சமயங்களில் ஐ.நா. டிரக் வண்டியிலேயே தான் நித்திரை கொள்ள வேண்டியிருந்தது என்றும் அந்தச் சிறுமி குறிப்பிட்டார்.

இந்த விடயங்கள் வெளியானமையை அடுத்து 114 சிப்பாய்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். ஆனால், அவர்களில் எவரும் சிறைக்குச் செல்லவில்லை.

ஐ.நா. தரவுகளை மேற்கோள் காட்டி ஏ.பி. செய்தி நிறுவனம் வெளியிட்ட தகவல்களின் படி -

பங்களாதேஷ், பிரேஸில், நைஜீரியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களுடன் சம்பந்தப்பட்ட சுமார் இரண்டாயிரம் பாலியல் குற்றச் சாட்டுகள் உள்ளன. அவற்றில் சுமார் 150 இலங்கைப் படையினருக்கு எதிரானவையாகும். -என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஜி.எஸ்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்குப் பயணம் செய்த ஐரோப்பியத் தூதுக் குழுவினர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

மேலும் அவர்கள் தெரிவிக்கையில்--

ஐரோப்பிய ஒன்றியத் துக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகை வழங்குவதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவது நாம் நினைத்த வகையில் இடம்பெறவில்லை. ஆனால் நாம் பேரம் பேசுதலுக்கான உரிமை, கூட்டம் கூடுவதற்கான உரிமை மற்றும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்துவோம்.

அந்த வகையில் இன்னும் பல முன்னேற்றங்கள் அடைய முடியும் என நினைக்கின்றோம். ஐரோப்பிய மக்கள் கட்சியைச் சேர்ந்த சோசலிஸ மற்றும் ஜனநாயகவாதிகளும், பசுமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் உட்பட ஏனைய பலரும் கடிதங்களை எழுதியிருக்கின்றார்கள்.

இந்த சாசனங்கள் உண்மையில் நடைமுறைப்படுத்தப்படாவிடின் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீண்டும் வழங்குவது தொடர்பாக ஆர்வம் காண்பிக்கப் படவில்லை என்றே அர்த்தம் என அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டி ருக்கின்றனர். இந்த விடயத்தில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் உள்ள பல்வேறு தரப்பினருடனும் நாம் விரிவான பேச்சுக் களை நடத்தவேண்டும் . வர்த்தகமானது அனைவருக்கும் நன்மை பயப்பதை உறுதிப்படுத்துவதற்கான நல்ல யோசனையை நாம் முன்வைக்க வேண்டும். - எனத் தெரிவித்துள்ளனர்.

# பிரதேசவாதத்துக்கு உள்ளாக்கப்படும் வடக்கு மலையக மக்கள்

## கவலை வெளியிட்டார் அமைச்சர் மனோகணேசன்

வடக்கில் உள்ள மலையக மக்கள் பிரதேச வாதத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றமை தொடர்பில் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சர் மனோகணேசன் கவலை வெளியிட்டார்.

கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலகத்தால் வெளியிடப்பட்ட கட்டுரை ஒன்றில், கிளிநொச்சியில் உள்ள மலையகத்தவர்கள் குறித்து அவதூறான கருத்துக்கள் வெளியிடப்பட்டமை தொடர்பில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விடுதலைப் புலிகளால் அவர்களின் காலத்தில் மலையக மக்கள் அரவணைக்கப் பட்டார்கள். ஆனால் தற்போது போர் நிறை வடைந்ததாகக் கூறப்படுகின்ற நிலையில், கட்சி அரசியலின் கீழ் மலையக மக்கள் பிரதேசவாதத்துள் அழுத்தப்படுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது.

விடுதலைப் போராட்டத்தில் மலையக மக்களின் பங்களிப்பும் இருக்கிறது.

அவர்களை அரவணைக்க வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இருக்கிறது.-என்றார்.

# வாக்குறுதியை நிறைவேற்றாவிடில் அரசைக் கவிழ்க்க வேண்டியேற்படும்

## எச்சரிக்கிறார் உள்ளூராட்சி சம்மேளனத் தலைவர்

தேசிய ஒற்றுமை அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றாது போனால், அரசைக் கவிழ்க்க வேண்டி யேற்படும் என்று உள்ளூராட்சி சம்மேளனத் தின் தலைவர் உதேனி அத்துகோரளை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு இன்று கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் 2020ஆம் ஆண்டு தேர்தல் நடத்துவதை அரசு தாமதிக்கக்கூடும்.

தேசிய ஒற்றுமை அரசு மக்களுக்கு வழங்கிய வாக் குறுதியை இதன்மூலம் தகர்க் கக்கூடும்.

அண்மையில் அமைச்சர் மஹிந்த அமரவீர தேர்தல் பிற் போடப்படலாம் என்ற கருத்தை வெளியிட்டிருந்தார் என்பதை நினைவூட்டுகின்றேன்.

இந்தநிலையில் தேசிய ஒற்றுமை அரசு மக்களுக்கு வழங் கிய வாக்குறுதியை நிறை வேற்றாதுபோனால், அரசை கவிழ்க்க வேண்டிய நிலை ஏற்படும்.-என்றார்.

# வவுனியாவில் குடும்பப்பெண் சடலமாக மீட்பு

வவுனியா, ஏப்.14

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் உள்ள வீட்டுக் கிணற்றில் இருந்து குடும்பப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

கூமாங்குளம், வள்ளுவர் கோட்டம் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் மதியம் முதல் காணாமற் போயிருந்தார். அவரது உறவினர்கள் அவரைத் தேடிய நிலையில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் வீட்டு வளவில் உள்ள கிணற்றில் சடலமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதனையடுத்து பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப் பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான சிறி காந்தன் புஸ்பலதா (வயது 47) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப் பட்டவராவார்.

(எ-100)

# போதைப்பொருளுடன் பெண் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப்.14

கொழும்பு மட்டக்குளி சமித்புர பிரதேசத்தில் ஹெ ரோயின் போதைப் பொருளுடன் இளம் பெண் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கைது செய் யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண மோசடி தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து அந்தப் பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 90.1 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

மட்டக்குளியைச் சேர்ந்த 24 வயதான அந்தப் பெண்ணை மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாண மோசடி தடுப்புப் பிரிவினர் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

(எ)




# உயிர்க்கொடையால் உலகம் மீட்புப் பெற்றது!

உலகப் பெருள்கள் அனைத்திலும் இருந்து,பெற்றுக் கொள்ள முடியாத பெறுமதி வாய்ந்த, உயிராகும். உயிர் என்பது இறைவனாலே தரப்பட்டு மீண்டும் இறைவனிடமே சென்று சேரும் சக்தி வாய்ந்த ஒன்றாகும். சிறப்பாக, மனிதனுக்கு வாழ்வு என்பது உயிர்வாழும் காலத்தைக் குறிக்கின்றது. இக்காலத்திலே மனிதன் அன்பு, பாசம், கோபம், பகை என்று சென்று இறுதியாக மரணத்திலே மனித வாழ்வு முடிவுறுகின்றது.

கற்று, பெற்று, கொடுத்து, பகிர்ந்து அன்போடு வாழும் வாழ்வே சிறப்பான வாழ்வாகும். இவற்றுக்கு எதிர்மாறாக வாழும் போதே வன்முறை, பகை, பதற்றம், மூர்க்கத்தனம் நிறைந்த, அடுத்தவரை அடிமைப்படுத்தி, அழித்தொழித்து, இறுதியில் தாமும் மடிந்து விடுகின்ற வாழ்வாக இன்னுமொரு சாராரின் வாழ்வு இருக்கின்றது.

யூத சமுதாயத்திலும் சமயத் தலைவர்கள் என்று வாழ்ந்தவர்கள் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதில் கருத்துடையவர்களாகவும், காருண்யம், மனித நேயமற்றவர்களாகவும் வாழ்ந்து வந்தார்கள். இயேசுவும் யூத சமூகத்திலே பிறந்தவராக இருந்தும் மனிதனுக்கு விடுதலையை, மீட்பைக் கொண்டுவர முடியாத சட்டதிட்டங்களை அன்பு, இரக்கச் செயல்களை ஓய்வு நாளிலும் மக்களுக்குச் செய்து வந்தமையால் பாமர மக்கள் இயேசுவுக்குச் சீடர்களாகவும் அவருடைய போதனையைக் கேட்கத் தொடங்கியமையால், யூதத் தலைவர்கள் இயேசுவை அவருடைய சீடன் யூதாஸ் காரியோத்தை வைத்தே, தந்திரமாகக் கைப்பற்றினார்கள்.

யூத சட்டப்படியே யேசுவை மரண தண்டனைக்குரியவர் என்று பொய்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தி, உரோமை ஆளுநன், பிலாத்துவிடமிருந்து சிலுவையில் அறைந்து கொல்லும் அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டார்கள். இயேசுவுக்கு முள்முடி அணிவித்து, பாரமான சிலுவையைச் சுமக்கச் செய்து 'கொல்கொத்தா' எனப்படும் கல்வாரி மலையிலே இயேசுவை சிலுவையில் இரு கள்வர்கள் மத்தியிலே அடித்து நிறுத்தி னார்கள்.

ஆனால், இயேசு தாம் கடவுளின் மகன் என்பதைத் தம்முடைய உயிர் பிரியும் வேளையிலே எல்லோரும் காணச் செய்தார் பரம தந்தையாம் கடவுளின் கைகளிலே தமது உயிரைக் கையளிக்கின்றேன் என்றவுடனே வானம் இருண்டு, இடி இடித்து மின்னல் மின்னி, அனைவரும் பயந்து வீழ்ந்த போது இயேசுவின் உயிர் உலக மக்கள் எல்லோருக்காகவும், அவர்களின் பாவ அடிமைத்தனம் ஒழியவும், தானே தற் கொடையாக, தமது உயிர்க்கொடையை கடவுளிடம் ஒப்பு வித்தார்.

பகிரங்கமாக யாருமே பட்டிராத வேதனை, பாடுகள், மரணத்தை இயேசு அடைந்ததினாலே உலகத்திலே இயேசுவைப் பின்பற்றும் மக்கள் அவருடைய பாடுகள், மரணம், உயிர்ப்பை நினைவு கூர்ந்து தம்முடைய வாழ்வை மாற்றிக் கொள்ள 40 நாள்களையும் பரிசுத்த வாரத்தையும் மீட்பின் காலமாக அனுசரித்து இறைவனுடைய அருளையும் ஆசீரையும் பெற்று வாழ்வை வளம்படுத்தி வாழ இந்த பெரிய வெள்ளியைப் புனித நாளாகக் கடைப்பிடிக்கின்றார்கள்.

அன்ரனி பீற்றர் (ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்)

# காட்டுயானை தாக்கி மூவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப்.14

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி 3 பேர் உயிரிழந்தனர்.

தனமல்வில, மீகஸ்வெள, நிகவெள ஆகிய பிரதேசங்களிலேயே காட்டு யானை நேற்று முன்தினம் புகுந்து தாக்குதலை நடத்தியது.

அவர்கள் தனமல்வில வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டனர். அதில் 2 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

33 வயதான பெண் ஒருவரும் 47 வயதான ஆண் ஒருவருமே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, மஹாஓய டெம்பிட்டிய என்னும் இடத்தில் காட்டு யானைத் தாக்குதலுக்கு இலக்காகி 16 வயது சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

வீட்டின் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியே இவ்வாறு காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

# பழைய மாணவர்கள் வருடாந்த ஒன்றுகூடல்

வடமராட்சி ஏப்.14

பருத்தித்துறை, ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்று கூடல் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சங்கத் தலைவர் நா. கந்ததாசன் தலைமையில் இடம்பெறும்.

விளையாட்டுப் போட்டியுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வைத் தொடர்ந்து கல்லூரி மண்டபத்தில் ஒன்று கூடல் நடைபெறும்

# கல்விக் கண்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது அதிபர்கள் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக பின்தங்கிய பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுச் செல்லுகின்றனர். அவர்களுக்கு உரித்தான தண்டனைக்கு இடமாற்றம்தான். தண்டனை என வழங்குவது என்பது என்னைப் பொறுத்த வரையில் நியாயமற்றதாகவே பார்க்கின் றேன். குற்றமிழைத்தவர்கள் அவர் செல்லும் பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் அல்லர். குற்றமிழைத்தவரை பின்தங்கிய பாடசாலைக்கு இடமாற்றம் செய்வதன் மூலம் பாதிக்கப் படுவது அவர் செல்லும் பாடசாலை மாணவர்களே ஆவர். எது, எப்படியென்றாலும் குற்றமிழைத்த ஒருவர் ஒழுக்காற்றுத் தண்டனைக்காக இன்னுமொரு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு செல்வது என்பது மாணவர்களுடைய கற்பித்தலில் நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்துகின்ற செயலாகவே நான் பார்க்கின் றேன். இதற்கான மாற்று வழிகளை எதிர்காலத்தில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது என்னுடைய எதிர்பார்ப்பு.

### மாணவர் நிலை

வலிகாமம் ஒரு பாடசாலையில் புதிய மாணவர்கள் ஆறாம் ஆண்டுக்கு சேர்த்துக் கொள்ளும் நிகழ்வு இடம்பெற்றது. அதில் 30 விகிதமான மாணவர்களுக்குச் சரியான தமிழ் அறிவு இருக்க வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இது வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் ஏதோ பெரியளவில் குறைபாடொன்று நிலவுகிறது என்பதாகவே காணப்படுகிறது.

அனலைதீவு என்ற பாடசாலையில் 83 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். அதிபருடன் இரண்டு ஆசிரியர்கள் தான் உள்ளனர். இப்படி மிகவும் குறைந்தளவிலான ஆசிரியர்களை வைத்துக் கொண்டு முறையற்ற விதத்தில் கண்காணிப்பில்லாமல் பாடசாலைக் கல்விகள் முன்னெடுக்கப் படுகின்றன.

நாங்கள் இங்கு கல்வி பயிலும் மாணவர்களின் பரிதாப நிலை கருதி எமது சிவன் அறக்கட்டளை நிறுவனம் இப் பாடசாலைகளுக்குத் தொண்டர் ஆசிரியர்களை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

இத்தகைய விடயங்களை மாகாண கல்வி அமைச்சு கவனத்திற் கொள்ளாமையிருப்பது ஒரு துர்ப்பாக்கிய நிலையாகவே இருக்கிறது.

**கே: இன்று புத்தாண்டைக் கொண்டாடவுள்ள மக்களுக்கும் நீங்கள் கல்வி தொடர்பாக என்ன சொல்ல விரும்புகின் றீர்கள்?**

ப: மலரவுள்ள புத்தாண்டு வடபுல மாணவர்களின் எதிர்காலக் கல்வி நலனுக்கு வளம் உள்ளதாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

எமது சமூகத்தின் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதும் அவற்றைத் திருத்துவதும் எமது பொறுப்பாகும். உயர் தரத்தினர் மட்டும் கல்வி கற்க வேண்டும் என்று இல்லாமல் எல்லாப் பிள்ளைகளும் ஒரே சம அளவில் இலவசக் கல்வியைக் கற்க வேண்டும் என்பதே என்னுடைய புத்தாண்டு செய்தியாகும். பொதுவான பாதையில் கல்விப் பயணம் மேற் கொள்ளப்பட வேண்டும். இதற்கு சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

இக்பால் அலி



வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வாழ்விலே சுபீட்சம் மலரச்செய்யும்




இன் நன்நாளில்
நர்மதாவில் நகைகள் வாங்கும்
வாடிக்கையாளர்களில் அன்றே
குலுக்கல் முறையில் தெரிவு
செய்யப்படும் அதிர்ஷ்டசாலிகளுக்கு

28,29.04.2017

1ம் பரிசு
சலவை இயந்திரம்

2ம் பரிசு
தொலைக்காட்சிப் பெட்டி

3ம் பரிசு
நவீன மின்னடுப்பு

மேலும் 10 அதிஷ்டசாலிகளுக்கு பெறுமதிமிக்க
மின்னுபகரணங்கள் ஆறுதல் பரிசுகளாக
வழங்கப்படும்

குறிப்பு
1பவுணும் அதற்கு உட்பட்ட நகைகளைக் கொள்வனவு
செய்பவர்களுக்கு ஒரு வெற்றி வாய்ப்பும்,
1 பவுணுக்கு மேற்பட்ட நகைகளைக் கொள்வனவு
செய்பவர்களுக்கு கொள்வனவு செய்யும் நிறைக்கேற்ப
வெற்றி வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

வாடிக்கையாளர் அனைவருக்கும்
நர்மதாவின் அக்ஷய திருதியை ...
பரிசுகள் காத்திருக்கின்றன.

நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ள 15 நாட்களுக்கு முன்னதாக
ஓடர்களை பதிவு செய்து கொள்ளுங்கள்

## நர்மதா கோல்ட் சென்றர்

யாழ்ப்பாணம்
வெளிநாட்டு நாணய மாற்றுநர்
WESTERN UNION
தொ.பே: 021 222 1933
தொ.ந: 021 222 4779
E-mail: narmathagc187@gmail.com
187, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

கொழும்பு
தொ.பே: 011 239 92 22
தொ.ந: 011 239 95 41
E-mail: narmathagc187@gmail.com
91, செட்டியார் தெரு, கொழும்பு 11



எமது வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய ஏவிளம்பி தமிழ் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்!

# VSB TRADING COMPANY
(PRIVATE ) LIMITED

VSB

Agents For : Prima Ceylon Limited

Prima

Distributors For : Ramco Cement

RAMCO
SUPERGRADE
Engineered for Concrete

No : 140, Kasthuriyar Road, Jaffna, Srilanka.
021 222 7195, 021 222 7196 | 021 222 8968 | vshtc5@gmail.com



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் !

LITRO GAS

## லிற்றோ
தேசிய எரிவாயு
ஏக விநியோகஸ்தர்




தூய்மையானதும்
நீண்டகாலம் பாவிக்கக்
கூடியதுமான
இல்லத்தரசிகளின்
ஒரே தெரிவு



# S.V. முருகேசு

No. 154 Hospital Road, Jaffna.
T.P : 021 222 8899, 021 492 5831
No. 106 Hospital Road,Jaffna.
T.P : 021 492 5830,021 222 4341
Fax: 021 222 4341

காலைக்கதிர்
Kalaikkathir

# சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர்



## தூது நீ சொல்லி வாராய் ஏவிளம்பி

தோதாகத் தமிழர்க்கு இதுவரை தீர்வில்லை
தூதாக வாராய் ஏவிளம்பி - ஆதாரம்
ஐ.நாவில் ஏராளம் இருந்த போதும் நீ
அமைதியாக இருந்து விடாதே!

தீர்வுக்கான காலம் கனிந்துள்ள போதும்
தீராதிருக்கவே விரும்புகின்றனர் - நேர்மை
இனிமேலும் தோற்காதவாறு ஏவிளம்பி
இந்த மண்ணை மீட்டெடு!

– கே.எஸ்.சிவஞானராஜா –

அனைவருக்கும் இனிய சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# "முகம் மலர வரவேற்போம்!"

புத்தாண்டுகள்
பல பல கண்டோம்.
துர்முகிப் புத்தாண்டும்
வந்து சென்றது.
தமிழர் தம் துயரங்கள்
தீர்ந்தபாடில்லை
மலருகின்ற ஏவிளம்பி புத்தாண்டே!
புதிய நம்பிக்கையுடன்
உம்மை வரவேற்கின்றோம்
மலர்ந்து வா!
மக்கள் மனங்களிலும்
நல்லாட்சி தனிலும்
நல் மாற்றத்தைக் கொண்டு வருவாயா?
வந்திருக்கும் சித்திரைப் புத்தாண்டே!
உம்மை, மக்களெல்லாம் மகிழ்ச்சியோடு
முகம் மலர வரவேற்போம்.

*நயினை. விசு இராசநாயகம்,*
*நயினாதீவு.*

# சிந்தாகுலம் நீங்க சித்திரைப் பாவாய் இத்தரை பிறந்துவா!

தாய்மடி தவழும் தீராக் காதலுடன்
தமிழர் தம் தாய்ப் புத்தாண்டே மலர்க!
பூமுடியாக மலரும் பொன் மகளே
தமிழ்த்தாயர் சிந்தும் கண்ணீருக்கு சாட்சியமாகு
எய் கணையாய் பாய்வதறியாயோ
துடைத்துவிடு சோகம் தீரமுழுதா
"தாமதிக்கப்பட்ட நீதி இல்லாது போன
நீதி" என்பதை எடுத்துப் பேசப் பிறந்து வா!

யுத்தம் நடந்த தேசத்தில் மீறலும் இருக்கும்
யுத்த தர்மம் அப்படித்தான் சொல்லும்
அந்த தர்மம் வென்றவர்க்கும் தோற்றவர்க்கும்
சமமானதென பேச வா! சுற்றிவளைத்து
சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் அலறல்
சொந்த மண்ணில் இப்பொழுதும் ஒலிக்கும் துயரம்
கால அவகாசம் கொடுத்திருக்கிறோம் என்ன தகுதியில்!
பாதுகாப்பு வலய மாயைக்குள் மாய்த்தோருக்கு நீதி இல்லையா?

இனத் துரோகங்கள் வாழாதென பேசு புத்தாண்டே
இல்லையெனில் வரலாறு உன்னையும் கேவலமாக்கும்
கனத்த இதயத்தோடு கடந்து செல்லும் வருடத்துக்கும்
சொல்லிவை ஏமாந்த கதை நம் கதையென
'இம்மாம்' தமிழருக்கு இத்தனையோ புத்தி?
அம்மா நீ அடித்துப் பேசு; நாளைய உலகம்
நன்றியுடன் உனையாவது திரும்பிப் பார்க்கட்டும்!
கல்லறைகள் இல்லா தேசத்துக்கு கல்வெட்டாய் இரு.

அம்பாந்தோட்டையில் அடிபட்டுப் போகுதாம்
ஆயிரமாம் ஏக்கர் நிலம் சீன தேசத்துக்கு!
இழந்து போனதை இட்டுக்கட்ட எங்களது
தாயக காணிகளை அபகரிப்பதென்ன நீதி?
சிங்கள புத்தாண்டே சிங்கள சோதரருக்கும் நீ
சொல்லி வைத்துவிடு இது அரசியல் துரோகமென
என்னை உனக்கும், உன்னை எவனெவனுக்கெல்லாம்
விற்றுவிட்டு 'சல்லி' பண்ண... எதிர்காலம் என்னாகும்?

சித்திரைப் பெருநாளில் 'சில்' அனுஷ்டித்துவிட்டு
புத்தகயாவை சிந்தையில் இருத்தும் வேளையிலும்
பொட்டு வைத்து மாலை கட்டி, நெய் விளக்கேற்றி
அம்மன் கோவில் வீதியில் பொங்கலிடும்
காலை வேளையில்; கண்ணீரால் பொங்கலிட்டு
காதலால் கைகுவிக்கும் பெற்ற வயிறும்
"யுத்தமிங்கு நடக்கவில்லை நடக்கா இடத்தில் ஏது
யுத்த மீறல் என வாதாடுமரசியல் கேட்டு"
கொதித்துப் பொங்குதிங்கே வெஞ்சினத்தில் மனம்!!!




*மண்டைதீவு மகிழ்நன்*
*கை.பேரின்பநாயகம்.*


அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**yarl Pardy**
**யாழ் பாடி**

யாழ். மண்ணில் சுவையான பாரம்பரிய
ஒடியல் கூழை சுவைத்து மகிழுங்கள்.
சனி, ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில்
முற்பகல் 10 மணி தொடக்கம்.




No.49- 51, Amman Road, Nallur, Jaffna.
Email - tysunda@ gmail.com
House Keeper - 075 9875800
Tel:- 021 222 6868/ 075 934 0026/
077 7360353

(C-324)



அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

**த சசிகா லேணர்ஸ்**
**THE SASIKA LEARNERS**

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
DS NO -882
முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள
எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

தலைமைக் காரியாலயம்.
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE- 077 722 6247
021 2217678, 0776140361
sasika Learners
sasikadrivingSchool@gmail.com.
sasikalearners.com

கிளை நிறுவனங்கள்:

| வேலணை | கே.கே.எஸ். வீதி, | சங்கானை |
|---|---|---|
| வங்களாவடிச் சந்தி, வேலணை | மல்லாகம் | ஓடக்கரை வீதி, சங்கானை |
| 021 221 5472 | 021 224 3393 | 021 225 1664 |
| 0703013012 | 0703013014 | 0703013016 |

சாரத்திய அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்

★ தேசிய அடையாள அட்டை
★ பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதி
★ திருமண அத்தாட்சிப் பத்திரம் (மூலப் பிரதி- பெண்களுக்கு மட்டும்)
★ மருத்துவச் சான்றிதழ் (தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம்)
★ சாரதி அனுமதிப் பத்திரம் (வைத்திருந்தால்)

(C-318)

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும்.
(கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)

★ விண்ணப்பதாரி, கட்டணங்களை தவணை முறை அடிப்படையில் செலுத்த முடியும்.
★ எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடைபெறும்.
★ எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.
★ எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
★ விரைவில் எழுத்துப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

வாகன விபத்தை தவிர்ப்போம்! உயிர்களைக் காப்போம்!!



## புத்தாண்டு அருளாசிச் செய்தி

இன்று சித்திரைப் புத்தாண்டு பிறந்திருக்கின்றது. இந்தப் புதுவருடப் பிறப்பு நாள் முதலாக எமது ஈழ மணித் திருநாட்டில் நிம்மதியும் நல்ல நித்திரையும் சமாதானத்தோடு சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டும் என்று ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

இன்று பிறந்திருக்கும் சித்திரைப் புத்தாண்டுக்கு ''ஏவிளம்பி வருஷம்'' என்று பெயர். இந்த ஏவிளம்பி வருஷம் முதலாக வாவது ஈழமக்கள் அனைவரும் ஆனந்தம் நிறைந்த மங்கலகரமான சுபீட்சமான நல்லவாழ்விற் திளைக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

இற்றை நாள்வரை பட்ட துன்ப, துயரங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கப்பெற்று, புத்தாண்டு முதலாக புதிய நல்வாழ்க்கை அமையப் பெற்று, ஒருவருக்கொருவர் உறுதுணை நின்று உய்யும் வழியைத் தேடி நாடி உவந்திருக்க எல்லாம் வல்ல நல்லைக் கந்தனின் பொற்கமல பாதம் பணிந்து உளமாறப் பிரார்த்தித்து அருளாசிகள் வழங்கி மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

கதிரவனுடைய காலைக்கதிர் வீச்சில் இனிய நல்லொளி பிறந்து எல்லோருக்கும் நம்பிக்கைக் கீற்றின் மூலம் நல்வாழ்வு அமைத்து சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்றோம். அவனுடைய நல்லொளியால் நாட்டில் அமைதி மலர இறையருளை நாடி நல்லாசிகள் நல்கி உளம் மகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

*- ஆதீன குருமுதல்வர்*
*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்*



## வீணாகான குருபீடத்தின் புதுவருட நல்லாசிகள்

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் வீணாகான குருபீடம் பெருமையும் மகிழ்வும் அடைகின்றது. பிறந்திருக்கும் புத்தாண்டு அனைவரதும் நல்லெண்ணங்களையும் அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதாக அமைவுறட்டும்.

எமது பாரம்பரியங்கள் கட்டிக்காக்கப்படுவதற்கும் வரலாற்றுப் பொக்கிஷங்கள் அழிவுறாமல் இருப்பதற்கும் புதுவருடம் வழி தரட்டும். அன்பு, பக்தி, ஒழுக்கம், விட்டுக்கொடுப்பு, அகிம்சை, கீழ்ப்பணிவு, சகோதரத்துவம் முதலான நற்குணங்களால் அனைவரும் ஒன்றுபட்டு உயர்ந்த வாழ்வு பெறுவதற்கு வழிசமைக்கட்டும்.

காலத்துக்குக் காலம் ஏமாற்றப்படுகின்ற தமிழினம் புதுவருடத்தின் வருகையாலாவது அரசியல், பொருளாதார நீதிகளால் உயர்வும் சுதந்திரமும் கிடைக்கப் பெறட்டும். தமிழ் சிங்களப் புத்தாண்டு வெறுமனே வார்த்தைகளாலும் சொற்களாலும் கொண்டாட்டங்களாலும் ஒன்றுபட்டு இருக்காமல் காத்திரமான முறையில் அனைவருக்கும் சமத்துவமான உரிமைகளும் சுதந்திரமும், மகிழ்வும், அமைதியும் கிடைக்கப் புதுவருடம் வழிசமைக்கட்டும்.

புதுவருடம் அனைவருக்கும் எல்லா நலன்களையும் கொடுக்க குருமார் சந்நிதானம் ஆசீர்வதித்து வாழ்த்துகின்றது.

*சந்நிதாசாரியார்*
*சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள்*

## நல்லிணக்கம், சகவாழ்வு பேணும் நாடாக எழுச்சி பெறுவோம்!

### ஜனாதிபதி மைத்திரி வாழ்த்து



நல்லிணக்கம், சகவாழ்வு ஆகியவற்றைப் பேணும் நாடாக பலமாக எழுச்சி பெறுவோம் என மலர்ந்துள்ள இந்தப் புத்தாண்டில் உறுதி செய்வோம்!

- இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

புவியில் உயிரினங்கள் தோன்றிய காலம் முதல் மானிட சமுதாயம் இயற்கையோடு கொண்டிருக்கும் பௌதீக மற்றும் ஆன்மீக பந்தத்தை அடுத்த தலைமுறைக்கு கற்றுக் கொடுக்கும் படிப்பினைகளாகவே சூரியன் மீன ராசியிலிருந்து மேட ராசிக்கு சஞ்சரிக்கும் சங்கிராந்தியின் அடிப்படையில் அமைந்த சித்திரைப் புத்தாண்டின் பாரம்பரியங்கள் அமைந்துள்ளன.

கமத்தொழிலின் சம்பிரதாயங்கள் நவீன மயமாகியுள்ள இக்காலப்பகுதியிலும் சௌபாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட சித்திரைப் பிறப்பைப் கொண்டாடுவதானது எம்மனங்களில் காணப்படும் ஆன்மீக கலாசாரத்தின் தொன்மையை எடுத்துக்காட்டுகின்றது. மனிதனின் செய்நன்றி மறவாத குணத்திற்கும் நிதர்சனமாகவே புத்தாண்டுப் பாரம்பரியங்கள் அமைகின்றன.


அத்தோடு தனது வாழ்க்கைக்கு வலுவூட்டிய சுற்றாடலுக்கு மனிதர்களால் செலுத்தப்படும் நன்றிக் கடனைப் போலவே ஏனைய சமூகங்களுடன் ஏற்பட்டிருக்கும் நெருங்கிய தொடர்புகளை இற்றைப்படுத்தும் புத்தாண்டு சம்பிரதாயங்களினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. புத்தாண்டு பஞ்சாங்கம் மூலம் அதற்கான கால அட்டவணை வழங்கப்படுவதன் ஊடாக நேரமுகாமைத்துவத்திற்கும் புத்தாண்டுப் பாரம்பரியங்கள் முன்னுரிமை வழங்குவதாக அமைகின்றன. அத்துடன் குறிப்பிட்ட சுபவேளையில் மேற்கொள்ளப்படும் புத்தாண்டு கைவிசேடம் கொள்கைப் பிடிப்புடன் வாழும் பண்பை எதிரொலிக்கச் செய்யும் ஆழமான கட்டமைப்பாகவும் அமைகின்றது.

பிற்போக்குச் சிந்தனைகளிலிருந்தும், பழைமைவாதப் போக்கிலிருந்து விடுபட்டு புதிய மனிதனாக உருவாக வேண்டும் என்பதே சித்திரைப் புத்தாண்டு காலத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து சம்பிரதாயங்களினதும் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பாகும்.

அவ்வாறு புதிய சிந்தனைகளுடன் புதுப்பிக்கப்படுவதனாலேயே புத்தாண்டு எமது வாழ்வின் புதியதொரு ஆரம்பமாகக் கருதப்படுகின்றது.

ஆகையால் வென்றெடுத்த வெற்றியை மேலும் நிலை பெறச் செய்வதுடன் நல்லிணக்கம், சகவாழ்வு ஆகியவற்றை பேணும் நாடாக பலமாக எழுச்சி பெறுவோம் என மலர்ந்துள்ள இந்தப் புத்தாண்டில் உறுதி கொள்வோம்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் சகல இலங்கையர்களுக்கும், சௌபாக்கியம், சமாதானம் மற்றும் மகிழ்ச்சி நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக. - என்று அந்தச் செய்தியில் ஜனாதிபதி வாழ்த்தியுள்ளார். (இ)



## எம்மவர்களின் இன்னல்கள் தீரும் என்ற நம்பிக்கையுடன் புத்தாண்டை வரவேற்போம்!

எமக்கு பல நன்மைகளை பெற்றுத்தந்த துர்முகி வருடத்தை அன்புடன் வழிஅனுப்பி, புதிதாக பிறக்கவிருக்கும் ஏவிளம்பி வருடத்தை மகிழ்வுடன் வரவேற்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

வருடங்கள் பல வந்து போனாலும் தமிழ் மக்களின் நிலை என்றுமே கேள்விக்குறியாகவே எஞ்சி நிற்கின்றது. உறவுகளைத் தொலைத்தவர்களின் கண்ணீர்க் கதைகள், வீடுகள் நிலங்களை இழந்தவர்களின் சோகக் கதைகள், வேலையற்ற பட்டதாரிகளின் ஏக்கப் பெருமூச்சு என இன்னோரன்ன துன்பங்களுக்கு மத்தியில் பிறக்கவிருக்கும் இப்புத்தாண்டில் எமது துன்ப துயரங்கள் எம்மை விட்டு அகலவும் சிறையில் அடைக்கப்பட்ட எமது இளைஞர்கள் தமது உறவுகளுடன் இணைந்து கொள்ளவும் விவசாயிகளின்,மீனவர்களின், வணிகர்களின் தொழில் முயற்சிகள் மேம்படவும் இப்புத்தாண்டு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையில் இப் புத்தாண்டை வருக வருக என வரவேற்போமாக.

இப் புதிய ஆண்டில் எம்மிடையே காணப்படுகின்ற காழ்ப்புணர்வுகள், விரோதங்கள் அனைத்தும் அகல அரசியல் தலைமைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களுக்கான ஒரு புதிய யுகத்தை படைக்க பாடுபடவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

மக்களின் எதிர்பார்ப்புக்களை விஞ்சக்கூடிய வகையில் வடமாகாண சபையின் செயற்பாடுகள் அமைவதுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள் என அரசியல் பிரமுகர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டு வடமாகாணத்தை முன்னேற்றுகின்ற ஒரே சிந்தனையுடன் செயற்படுவதற்கு இப்புத்தாண்டு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையுடன் இப் புத்தாண்டு அனைவருக்கும் சுபீட்சத்தையும் சுக வாழ்வையும் மன அமைதியையும் வழங்க வேண்டும் என வாழ்த்தி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்,
முதலமைச்சர், வடமாகாணம்.

## இன நல்லிணக்கம் ஏற்பட புத்தாண்டு வழி சமைக்கட்டும்!



சிங்கள மக்களும் தமிழ் மக்களும் பொதுவான புத்தாண்டாக சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது. அதேபோன்று இந்நாட்டில் சகஜ நிலை தோன்றி இன நல்லிணக்கம் ஏற்பட இப்புத்தாண்டு வழிசமைக்கட்டும்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

சம்பந்தனின் வாழ்த்துச் செய்தியில் -

இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி, பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எம்தமிழ் உறவுகளுக்கும் எங்களுடன் சேர்ந்து புத்தாண்டை அனுஷ்டிக்கும் எமது சிங்கள சகோதரர்களுக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனம் மிக மகிழ்கின்றேன்.

எமது தமிழ் வருடங்கள் அறுபதாகும். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர் தாங்கியுள்ளதுடன், அவை மழை, காற்று,பயிர்வளம் போன்ற இயற்கையின் பலாபலன்களை மாற்றி அமைக்கும் தன்மையைக் கொண்டவையாகவும் விளங்குகின்றன. அந்தவருடங்களின் வரிசையில் 31ஆவது வருடமான ஏவிளம்பி வருடம் இவ்வருடம் சித்திரை மாதம் 14ஆம் திகதியாகிய இன்று பிறக்கின்றது.

புத்தாண்டு நன்னாளில் எம்மவர்கள் தமது பாவங்கள், தோஷங்கள் நீங்க வேண்டி, மருந்துவகை,மலர் வகை மற்றும் வாசனைத் திரவியங்கள் கொண்டு ஆலய அர்ச்சகர்களால் காய்ச்சப்படும் மருத்து நீரைத் தலையிலே தேய்த்து, ஸ்நானம் செய்து, புத்தாடை அணிந்து, உலகின் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் சூரியபகவானுக்கு இல்லங்களில் பொங்கலிட்டு பூசை செய்து, ஆலய வழிபாடுசெய்து, குரு, பெற்றோர்,பெரியோரிடம் ஆசிபெற்று, அறுசுவை உணவு உண்டு மகிழ்ந்திருப்பது பாரம்பரிய மரபாகும். அன்றைய நாளில் அவ்வாறு நடந்து கொள்வதனால் அந்தவருடம் முழுவதும் மக்களின் மனங்களில் மகிழ்ச்சி நிலவும் என்பது ஐதீகமாகும்.

புத்தாண்டு பிறக்கும்போது மக்கள் மனங்களில் எதிர்பார்ப்புக்கள் பல உண்டாவது இயல்பானதாகும். அவ் எதிர்பார்ப்புக்களில் பிரதானமாக இவ்வாண்டில் முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் புதிய அரசமைப்பு புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்கும் வகையில் அமைய வேண்டுமெனவும், அவ் அரசமைப்பு இலங்கை அரசியல் வரலாற்றில் ஒருபுதிய அத்தியாயத்தை ஏற்படுத்துவதாக அமைந்திட வேண்டும் எனவும், அது உண்மையான நல்லிணக்கத்திற்கு வழிகோல வேண்டுமெனவும் இப்புத்தாண்டு நன்னாளில் இறையருளை இறைஞ்சுவோம். அதுபோல தமிழ்மக்கள் தற்பொழுது அனுபவிக்கும் துன்பங்கள், ஏமாற்றங்கள், ஏக்கங்கள் மற்றும் ஒதுக்கல்களில் இருந்துமீண்டு அவர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வகையில் அரசு செயற்பட வேண்டும் என்ற எமது கோரிக்கையையும் இவ் வேளையில் வெளிப்படுத்துகின்றேன்.

இந்நாட்டின் பெரும்பான்மை இனத்தவரான சிங்கள மக்களுக்கும் சிறுபான்மை இனத்தவரான தமிழ்மக்களுக்கும் பொதுவான புத்தாண்டாக சித்திரைப் புத்தாண்டு கொண்டாடப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். இப்புத்தாண்டை ஈரினத்தவர்களும் பொதுவாக மகிழ்வுடன் கொண்டாடுவது போன்று சகல விடயங்களையும் நல்லுறவுடன் கையாளும் சகஜ நிலை இந்நாட்டில் தோன்றி இன நல்லிணக்கம் ஏற்பட இப்புத்தாண்டு வழிசமைக்கட்டும்.

அந்தவகையில் இனங்களுக்கிடையில் ஒற்றுமை, நல்லுறவு, புரிந்துணர்வு ஏற்பட்டு சாந்தி, சமாதானம் மேலோங்கி இந்நாடு அமைதிப் பூங்காவாக மிளிர்ந்திட, பிறக்கும் ஏவிளம்பி புத்தாண்டில் நல்லனவெல்லாம் நடந்தேறிட வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன்,அனைவருக்கும் எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

# சித்திரை நங்காய்! நிலத்தில் முத்திரை பதிக்க வருக!

இத்தரையில் பாதங்கள் பதிக்கின்ற,
சித்திரை நங்காய்!
எங்களோடு தோழமை கொள்ளவே,
புன்னகையும் பொன்னகையுமாய்,
எழுந்து வருகின்றாயா?
சிரங்கள் தாழ்த்தி வணக்கங்கள்.

ஏவிளம்பி புதுமை நாமத்தோடு,
எமை ஆச்சரியமுற வைத்து,
எழுந்து வருகின்ற நங்காய்
எத்திக்கும் மகிழ்வதற்காய் வருக.

ஏவிளம்பி நங்காய்!
ஏ ஒன்பது வீதிகளோடு,
சந்து பொந்தென்றே
சச்சரவுகளில் சிக்கி
அச்சங்களில் நிற்கிறதே.
அம்மா நீ வழிகள் சமைத்தே,
வளப்படுத்த என்றே வருக.

பள்ளி மாணவர்கள் சாதனையாளராய்,
மகிழ்வில் திளைத்து நிற்கையில்,
பாங்காய் எழுந்து வருபவளே,
எத்தரப்பினரையும் சாதனையாளராக்கி,
நீ நிலத்தில் முத்திரை பதிக்க,
அம்மா நீ வருக வருகவே.

மீசாலையூர் கமலா.


## புத்தாண்டே வா!

சித்திரை மகளே வா
சந்தோஷத்தைக் கொண்டு வர
கவலைகள் போக்கிட
அயலவரின் அன்பைப் பகிர
அநீதியை அழித்திட
தமிழர் இனத்தை ஒன்றாக்க
புத்தாடை அணிந்து
பொலிவுடனே நடக்க
புத்தாண்டே வா...

பி.நிரோஜினி, கொழும்புத்துறை

வாடிக்கையாளர்களுக்கு ஏவிளம்பி புத்தாண்டு வாழ்த்துக்கள்
Geethan Decoration
கீதன் அலங்கரிப்பு நிலையம்
சகல விதமான பந்தல், சகல விதமான மணவறைகள் மற்றும் பலூன் அலங்காரம், வாசல் அலங்காரம்,மண்டப அலங்காரம் மேடை அலங்காரம், மேசை, கதிரை, பாத்திரங்கள், வரவேற்பு விரிப்பு, பூமாலைகள்,திருமண கார், வான் சேவைகள், ஐசிங்கேக் வகைகள் மற்றும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு ஏற்ற அலங்காரப் பொருள்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.


(C/332)
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
077 5273660 geethankondavil
021 2053898 geethandecoration@yahoo.com

வாடிக்கையாளர்களுக்கு ஏவிளம்பி புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
TCT MULTI TRADE CENTRE
TCT MULTI TRADE CENTRE
வாடிக்கையாளர்களே!
தங்களுக்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் தரமானதாகவும், நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளவும், மங்கலகரமான நிகழ்வுகளைச் சிறப்பாக நடத்த சகல வசதிகளையும் உள்ளடக்கிய மண்டப வசதியைப் பெற நாடவேண்டிய ஒரே இடம் TCT MULTI TRADE CENTRE
நேர்த்தி, வாடிக்கையாளர் திருப்தி, சிறப்பு என்பனவற்றைத் தேடுபவர்களுக்கான எமது ஆரம்பப் புள்ளி இது.
" உங்கள் திருப்திகரமான பெருமிதப் பார்வையே எமது நோக்கம்".


TCT MULTI TRADE CENTRE
0212228025
527,நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்
(C335)

NEW TREND CERAMIC
Wall/
Floor Tiles, glass
Block Brand
Sanitary Ware
and
Barthroom Set.



(C323)
அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் எமது
இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Phone: 021 492 3757
Mobile: 077 458 4659
424,கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
Email: moorthysithra@gmail.com



நல்லெண்ண அரசு விரைந்து செயற்பட வேண்டும்

# அரசியல் இலாபம் கருதி காலத்தை இழுத்தடிக்காதீர்!

**தமிழ் - சிங்களப் புத்தாண்டு, ஈஸ்ரர் வாழ்த்துச் செய்தியில் யாழ்.ஆயர்**

அரசு ஏற்கனவே ஆற்றியுள்ள நல்ல செயல்களுக்குத் தமிழ் மக்கள் பெயரால் நன்றி தெரிவிக்கும் வேளை உண்மையை மூடிமறைக்கும் நோக்கிலோ அல்லது அரசியல் இலாபம் கருதியோ காலத்தை இன்னும் இழுத்தடிக்காமல் விரைவாக செயற்படுங்கள் என வேண்டுகிறோம்.

2017ஆம் ஆண்டிற்குரிய தமிழ் - சிங்கள புத்தாண்டைக் கொண்டாடும் அன்பர்கள் அனைவர்க்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை முதலில் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். புதிய ஆண்டில் நீங்கள் அனைவரும் இறை அருளை முழுமையாகப் பெற்று உங்கள் உள்ளத்து எண்ணங்கள் அனைத்தும் நிறையப் பெற்று நல்மனது கொண்ட மனிதர்களாக வாழுங்கள் என வாழ்த்துகிறோம்.

உலகெங்கும் பரந்து வாழும் கிறிஸ்தவ மக்கள் கொண்டாடும் விழாக்களிலே அதி உன்னதமான விழா ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழாவாகும். ஆண்டவர் இயேசுவின் பாடுகள் மரணம் ஆகிய நிலைகளைக் கடந்து அவரின் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடும் அனைவர்க்கும் இனிய உயிர்ப்பு விழா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

இயேசு இறந்த மூன்றாம் நாள் கல்லறைக்கு வந்து வெற்றுக் கல்லறையைக் காணும் வரை ''இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்து கொள்ளவில்லை'' என்கிறார் யோவான் நற்செய்தியாளர் (யோவான் 20:9) இயேசு இறந்து உயித்து விட்டார். அவர் இன்று எம்முடன் உயிர் வாழுகிறார் என்ற உண்மையை அனுபவரீதியாக நாம் புரிந்துகொள்ளவேண்டும். அந்த அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதுவே உயிர்ப்பு விழா தரும் செய்தியாகும்.

இலங்கையின் அப்போஸ்தலர் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் ஆண்டில் யாழ்.மறை மாவட்ட யாத்திரைத்தலத்தை அவருக்குப் புகலிடம் கொடுத்து பாதுகாத்து சரித்திரத்தில் இடம் பிடித்த சில்லாலைப் பங்கில் அமைக்கும் பணி ஒரு முக்கிய பணியாகும்.

புனித யோசவ்வாஸ் அடிகளார் தனது 59 வருட இவ்வுலக வாழ்வில் 35வருட குருத்துவப் பணியைப் புரிந்து அதில் 24 ஆண்டுகள் இலங்கை மண்ணில் பணியாற்றியுள்ளார். தனி மனிதனாக வசதிகளும் வாய்ப்புக்களும் இல்லாத ஒரு காலத்தில் கால்நடையாக இலங்கை முழுவதும் பயணித்து தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் பணி யாற்றியவர். இலங்கையின் கலாசார பண்பாட்டை மதித்து-பண்பாட்டு மயமாக்கலை மேற்கொண்டு - இன மொழி வேறுபாடுகளைக் கடந்து, இலங்கை மக்கள் சத்தியவேத விசுவாசத்தில் வளர வேண்டும் என்பதில் கவனம் கொண்டு பணியாற்றியவர். இலங்கையின் அப்போஸ்தலர் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் ஆண்டு யாழ். மறை மாவட்டத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட அனைவரும் உழைக்க வேண்டும்.

மூன்று தசாப்த கால போர் முடிந்து பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், நல்லெண்ண அரசு பல விடயங்களை இன்னும் மிக வேகமாக ஆற்றி, இயல்பு வாழ்வை விரைவிற் தோற்றுவிக்க வேண்டும் என்பதே தமிழ் மக்கள் அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

சொந்த நிலங்கள் விடுவிப்பு - இடம் பெயர்ந்தோரின் மீள் குடியேற்றம் - வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் - அரசியற் கைதிகள் விடுதலை - முன்னாள் போராளிகளின் முழுமையான விடுதலையும் புனர்வாழ்வும் - காணாமற் போனோர் விவகாரம் - நீதியான போர்க்குற்ற விசாரணை - அரசமைப்பு மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்கம் எனப் பல பிரச்சினைகளுக்கு வேகமாகவும் விவேகமாகவும் தீர்வு காணப்பட வேண்டி உள்ளது.

இவை தொடர்பான சுமுக நடவடிக்கைகள் நடைபெறாமையால் இன்று பல இடங்களிலும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப்போராட்டங்கள் நீண்ட நாள்கள் எடுத்து மக்களை இன்னும் வேதனைப்படுத்தாமலும் மக்கள் விரக்தியுற்று வேறு முடிவுகளுக்குப் போகாமலும் இருக்கத்தக்க விதமாக அரசு வேகமாகச் செயற்பட்டு முடிவுகளைக் காண வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். அரசு ஏற்கனவே ஆற்றியுள்ள நல்ல செயல்களுக்குத் தமிழ் மக்கள் பெயரால் நன்றி தெரிவிக்கும் அதேசமயம், உண்மையை மூடி மறைக்கும் நோக்கிலோ அல்லது அரசியல் இலாபம் கருதியோ காலத்தை இன்னும் இழுத்தடிக்காமல் விரைவாகச் செயற்படுங்கள் என வேண்டுகிறோம்.

இந்த மக்கள் தரமுடியாத எதையும் கேட்கவில்லை. வேறு யாருக்கோ உரிய எதை யும் கேட்கவில்லை. புதிதாக எதையும் கேட்கவில்லை. தமது சொந்த மண்ணைக் கேட்கிறார்கள். தமது சொந்த பாரம்பரியத்தைக் கேட்கிறார்கள். தமது மிக அடிப்படையான விடயங்களையே கேட்கிறார்கள். இதனைக்கூட போராடித் தான் பெற வேண்டும் என்ற ஒரு நிலையை அரசு உருவாக்குவது எந்த வகையில் நியாயம். 30 ஆண்டுகளாக ஒரு கொடிய போரின் பயங்கர அனுபவங்களில் வாழ்ந்தவர்கள் இந்த மக்கள். போர்முடிந்து எட்டு ஆண்டுகளாகியும் இன்னும் ஓர் ஆறுதலின் நம்பிக்கைப் பெருமூச்சை முழுமையாக விட முடியாமல் உள்ளனர்.

நல்லெண்ண அரசு இந்த அடிப்படை வசதிகளை மக்கள் கேட்காமலே நேரகாலத்தோடு செய்து கொடுத்திருக்க வேண்டும். தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி இரு இனங்களும் இனி இந்த நாட்டில் இணைந்தே வாழ வேண்டும் என்ற சமாதான சமிக்ஞையைக் காட்டி இருக்க வேண்டும். இவ்வளவு காலம் தாழ்த்தியும் மக்கள் இவ்வளவு போராட்டம் நடத்தியும் இனியும் வேகமாக செயற்பட்டு இயல்பு வாழ்வை ஏற்படுத்தாது இருப்பது மிகவும் வருத்தத்தற்குரியது.

மக்கள் இனியும் போராட்டம் என்ற பெயரில் துன்பத்தையும் வேதனையையும் அனுபவிக்க அனுமதிக்காதீர்கள்.

அரசமைப்பு ஒன்றை உருவாக்குமுன் உடனடியாக இயல்பு வாழ்வை முழுமையாகக் ஏற்படுத்துங்கள். மக்கள் குடியிருப்புக்களில் இருந்து இராணுவத்தை முழுமையாக அகற்றுங்கள். அவர்களுக்கு அரச காணிகள் நிறையவே உண்டு. போராட்டம் முடிந்தமையால் அவர்கள் தள்ளி இருப்பதே சிறந்தது.

காணாமற்போனோர் என்ற விடயத்திற்கு முழுமையான முடிவுகாணுங்கள். உண்மையை வெளிக்கொணர்ந்து மக்கள் ஏற்கும் விதமாக அறியப்படுத்துங்கள். தமிழ் மக்களின் ஒவ்வொரு வீட்டிலும் யாரோ ஒருவர் இறந்தே உள்ளார். அவர்கள் எந்த முடிவையும் தற்போது ஏற்கும் மனநிலையிலேயே உள்ளனர். இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாது அதே வேளை உயிரோடு இருப்பவர்களைக் காலம் காலமாக மறைத்தே வைத்திருக்க முடியாது. எல்லா பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவு உண்டு. மனித உயிர் சம்பந்தமான இப்பிரச்சினைக்கு இனியும் காலம் தாழ்த்தாது முடிவுகாணுங்கள்.

இருப்பவர்களை உடன் விடுவியுங்கள். இல்லாதவர்கள் பற்றிய பிரச்சினையை தெளிவுபடுத்தி சமயக் கடமைகளை நிறைவேற்றி, இறந்தவர்கள் இளைப்பாறவும், உறவுகள் தம் மனசுகளை ஆறுதற்படுத்தவும் வழி செய்யுங்கள். இறந்தவர்களுக்கான இறப்புச் சான்றிதழைப் பெறவும் இழப்பீடு பெறவும் வழி செய்யுங்கள். காணாமற் போனோரின் உறவு கள் அனுபவிக்கும் முடிவில்லாத சோகத்திற்கும் மன அங்கலாய்ப்பிற்கும் முடிவு கொண்டு வாருங்கள்.

எமக்கிடையே என்ன வேறுபாடுகள் இருந்தாலும் இலங்கை வாழ் மக்கள் என்ற நிலையில் இலங்கை மண்ணின் மைந்தர்கள் என்ற உறவு எம்மை எப்போதும் இணைத்துக் கொண்டே இருக்கவும் இனங்களையும் மதங்களையும் தாண்டி இலங்கை மண்ணின் மைந்தர்கள் என்ற பாலம் எம்மைப் பலப்படுத்திக் கொண்டே இருக்கவும் வழி செய்யுங்கள்.

இறையாசீர் என்றும் உங்களோடு இருந்து வழிநடத்துவதாக.!

மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை- யாழ் ஆயர்



## மகத்தான மனித வாழ்வை மாசற்ற வாழ்வாகத் தொடர்வோம்!

இறையருளைவேண்டியவண்ணம் புதிய ஆண்டை வரவேற்போம். புதிய ஆண்டில் நல்ல காரியங்கள் செய்ய வேண்டும் என எண்ணுவோம். மனித வாழ்வு எமக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பம். இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி நாமும் வாழ்ந்து பிறரையும் நல்ல வண்ணம் வாழ வைப்போம்.

காலம் மிகவும் பெறுமதி யானது. கடந்த காலங்களில் நாம் நிறைவேற்றிய நல்ல விடயங்கள் குறித்துத் திருப்தி அடைவோம். கடந்த காலங்களில் நாம் விட்ட தவறுகள் இப்புதிய ஆண்டிலும் ஏற்படாத வகையில் நல்ல வண்ணம் திட்டமிடுவோம். கடந்து செல்லும் ஆண்டில் நாம் விட்ட தவறுகளுக்காக கடவுளை மன்றாடுவோம்.

பகைமையை வளர்ப்பதால் பயன் இல்லை என்பதை உணர்வோம். இயன்றவரை கோபத்தை அடக்கப் பழகுவோம். அனைவரையும் அன்பால் அரவணைப்போம். ஆத்மீக பலத்திற்கு ஈடாக வேறொன்றும் இல்லை என்பதை உணர்வோம். 'தெய்வமே எமக்குத் துணை' என்ற உண்மையை நாமும் உணர்ந்து பிறருக்கும் எடுத்துரைப்போம்.

ஏவிளம்பி என்ற நாமத்தோடு பிறக்கும் புதுவருடமே ஏதிலிகளாக அலையும் மக்களுக்கு விடிவு கொடுப்பாயாக! படித்துப் பட்டம் பெற்றுவிட்டு வேலையின்றி அலையும் தலைமுறைக்கு விடிவு கொடுப்பாயாக! கால எல்லையின்றி கடும் சிறையில் வாடும் மக்களுக்கு விடிவு தருவாயாக! தினமும் அஞ்சி அஞ்சி அவல நோய்களால் துடிக்கும் அப்பாவிகளுக்கு ஆறுதல் தருவாயாக! ஏழ்மையால் வருந்தி ஏக்கத்தோடு வாழும் பாட்டாளிகளுக்கு விமோசனம் தருவாயாக! என அகம் திறந்து ஆண்டவரை அனைவரும் இந்நாளில் மன்றாடுவோமாக!

வருடம் பிறக்கும் வேளை நல்வாழ்வு கேட்டு அனைவரும் திருக்கோயில் வாசல்களுக்குச் செல்லுங்கள். தெய்வத் திருவருளால் நாம் நலமாக வாழவேண்டும் எனப் பிரார்த்தியுங்கள். வீட்டு முற்றத்தில் புதுவருட நாளில் பொங்கிப் படையுங்கள். வேளா வேளை உணவுதந்த தெய்வங்களைப் போற்றுங்கள்.

மூத்தோரை நாடிச் சென்று ஆசி பெறுங்கள். பிறருக்கு கைவிசேடம் கொடுத்து நட்புக் கரங்களைப் பற்றுங்கள். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற உண்மைத் தத்துவத்தை உணருங்கள். சாதிக்கப் பிறந்த நாம் சோம்பலில் உளராமல் புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று ஆயத்தம் செய்யுங்கள்.

மகத்தான மனிதவாழ்வை மாசற்ற வாழ்வாகத் தொடர இதயபூர்வமான புத்தாண்டு நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பித்து அமைகிறேன்.

கலாநிதி ஆறு. திருமுருகன்,
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தலைவர், சிவபூமி அறக்கட்டளை
உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்.

# சித்திரைப் புத்தாண்டு உங்களுக்கு எப்படி?






புத்தாண்டை வெற்றியோடு ஆரம்பிக்க வுள்ளீர்கள். 2017 ஆம் ஆண்டில் வரவு அதிகரிக்கும். வரவு இருந்தாலும் அவசர தேவைக்கு எடுத்து உபயோகிக்க இயலாது. கண்ணுக்குத் தெரியாத சேமிப்பாக உயருமே அன்றி, அன்றாட செலவுகளுக்கு உதவாது. இருப்பினும் மனோ தைரியம் கூடும். எதிலும் தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள்.

அதே நேரத்தில் எந்த ஒரு விடயத்திலும் உடனடி முடிவுகளை தவிர்க்கவும். எதையும் ஒரு முறைக்கு இரு முறை ஆராய்ந்து, குடும்பப் பெரியவர்களுடன் கலந்து ஆலோசித்து பின்னர் முடிவெடுத்தால் காரியத்தில் காலதாமதம் இருந்தாலும் வெற்றி உண்டு.

வாக்குறுதிகளை தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே ஒற்றுமையுணர்வை வளர்க்க பாடுபடுவீர்கள். உடன்பிறந்தோருடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். சொத்து, பாகப்பிரிவினை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் உங்களுக்கு சாதகமாக அமையும். தாயார் வழி உறவினர்களுக்கு உதவப்போய் தர்மசங்கடமான சூழலுக்கு ஆளாக நேரிடும். அதனால் வருத்தம், ஆதங்கம் அதிகரிக்கும். இருப்பினும் எதையும் திடமாக யோசித்து தீர்க்கமாக முடிவு எடுப்பீர்கள். திடீர் விருந்தினர்கள் வருகையால் வீடு களைகட்டும். அவர்களுடனான சந்திப்பு நிம்மதி தரும். புதிய வீடு கட்டும் முயற்சியில் உள்ளோருக்கு சாதகமான சூழல் இருக்கும்.


எதிர்பார்த்த கடனுதவி தடையின்றிக் கிட்டும். இதர கடன் பிரச்சினைகளை கட்டுக்குள் கொண்டு வருவீர்கள். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி புதிய சேமிப்பில் ஈடுபடுவீர்கள். திருமணத்துக்காகக் காத்திருப்போர் இல்லங்களில் கெட்டிமேளம் கொட்டும். ஆன்மிக, தர்ம காரியங்களில் ஈடுபடு வீர்கள். பயணத்தால் ஆதாயம் இருக்கும். ஆனால் பயணத்தில் கூடுதல் எச்சரிக்கை அவசியம். செவ்வாய்கிழமை தோறும் அருகில் உள்ள முருகன் ஆலயத்துக்குச் சென்று தரிசித்து வருவது நல்லது. வருடப் பிறப்பு தினமான இன்று அநாதைச் சிறுவர்களுக்கு இயன்ற உதவி செய்யவும்.




கண்டச் சனியின் காலம் தொடந்து கொண்டிருந்தாலும் பிறக்கப் போகும் 2017 புத்தாண்டு முழுவதும் உங்களது செயல்களில் சனியால் தடையேதும் உண்டாகாது என்பதால் அதை நினைத்து கவலை கொள்ளத் தேவையில்லை. எடுத்த வேலைகளில் செயல்திறன் அதிகரிக்கும். முழு முயற்சியுடன் செயல்களை முடித்து வெற்றியும் நிம்மதியும் காண்பீர்கள். முக்கியமாக தொழில்முறையில் சிறப்பான முன்னேற்றம் காண உள்ளீர்கள். நண்பர் ஒருவரோடு இணைந்து செய்யும் காரியங்கள் உங்களுடைய புகழை உயர்த்துவதோடு சிறப்பான லாபமும் பெற்றுத் தரும்.

சொந்த பந்தங்களுடனான உறவில் உள்ள விரிசலைக் களைய முற்படுவீர்கள். நிலுவையில் உள்ள உறவினர் வழிப் பிரச்சினைகள் சுமுகமான முடிவுக்கு வரும். உடன் பிறந்த சகோதரர்களுக்கு இடையே புதிய பிரச்சினைகள் துளிர்விடும் என்பதால் மிகவும் பொறுமையுடனும், பொறுப்புடனும் செயற்படுவது கட்டாயம். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடப்பதற்கான வாய்ப்பு உண்டு. கொடுக்கல் வாங்கலை முற்றிலும் தவிர்க்கவும். அடுத்தவர்களுக்கு உதவி செய்யும்போது எச்சரிக்கை தேவை. உங்களுக்கு மிகவும் நெருங்கிய நபர் நம்பிக்கைத் துரோகம் செய்யக்கூடும். வாகனங்களை மாற்றவும், புதிய வாகனங்கள் வாங்கவும் நேரம் கனிந்து வரும். வாழ்க்கைத் துணையின் உடல் மற்றும் மனநிலையில் கூடுதல் கவனம் அவசியம்.

மாதந்தோறும் கிருத்திகை விரதம் இருப்பது, கிருத்திகை நட்சத்திர நாளில் முருகன் சந்நதியில் விளக்கேற்றி வழிபடுவதும் நன்மை தரும்.




கண்டச் சனியின் காலம் தொடந்து கொண்டிருந்தாலும் பிறக்கப்போகும் 2017 புத்தாண்டு முழுவதும் உங்களது செயல்களில் சனியால் தடையேதும் உண்டாகாது என்பதால் அதை நினைத்து கவலை கொள்ளத் தேவையில்லை. எடுத்த வேலைகளில் செயல்திறன் அதிகரிக்கும். முழு முயற்சியுடன் செயல்களை முடித்து வெற்றியும் நிம்மதியும் காண்பீர்கள். முக்கியமாக தொழில் முறையில் சிறப்பான முன்னேற்றம் காண உள்ளீர்கள். நண்பர் ஒருவரோடு இணைந்து செய்யும் காரியங்கள் உங்களுடைய புகழை உயர்த்துவதோடு சிறப்பான லாபமும் பெற்றுத் தரும்.

உடன்பிறந்த சகோதரர்களுக்கு இடையே புதிய பிரச்சினைகள் துளிர்விடும் என்பதால் மிகவும் பொறுமையுடனும், பொறுப்புடனும் செயல்படுவது கட்டாயம். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடப்பதற்கான வாய்ப்பு உண்டு. கொடுக்கல் வாங்கலை முற்றிலும் தவிர்க்கவும். அடுத்தவர்களுக்கு உதவி செய்யும்போது எச்சரிக்கை தேவை. நீங்கள் மிகவும் நெருங்கிய நபர் நம்பிக்கை துரோகம் செய்யக்கூடும். வாகனங்களை மாற்றவும், புதிய வாகனங்கள் வாங்கவும் நேரம் கனிந்து வரும். வாழ்க்கைத் துணையின் உடல் மற்றும் மனநிலையில் கூடுதல் கவனம் அவசியம்.

பெண்கள் தெய்வ நம்பிக்கையோடு குடும்பப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். அக்கம்பக்கத்தினரிடம் எச்சரிக்கை அவசியம். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் உங்கள் பங்களிப்பு முக்கியத்துவம் பெறும்.




கால நேரம் தவறாது கடமையை செய்து வரும் உங்களுக்கு 2017 ஆம் ஆண்டு நிறைய அனுபவ பாடங்கள் கற்று தரும். கடந்த சில வருடங்களாக எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருந்த உங்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். பணிச்சுமை நாளுக்கு நாள் கூடும் என்பதால் அவ்வப் போதைய பணிகளைக் காலம் தாழ்த்தாது உடனுக்குடன் முடித்து விடுவது நல்லது. பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டால் சமாளிக்க இயலாத அளவுக்குக் கடுமையாகப் பணிச் சுமை கூடிவிடும். ஜூலை மாதம் 27 ஆம் திகதி முதல் ஜென்ம ராசியில் ராகுவும், ஏழில் கேதுவும் இடம் பெறவுள்ளதால் முயற்சிகளில் தடை, உற்றார் உறவினர்களை விட்டு பிரிதல், உடல் நலக்குறைவு, நற்பெயருக்கு களங்கம் போன்ற சிரமங்களை மனோ தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

புதிய சொத்து வாங்குதல், சேமிப்புகளில் ஈடுபடுதல் போன்றவற்றை வருட முற்பாதியிலேயே செய்து முடிப்பது நல்லது. குடும்பத்தினரை விட்டு பிரிந்திருக்க வேண்டிய வாய்ப்பு தோன்றலாம். எதிலும் வாழ்க்கைத்துணை உங்களுக்கு துணை இருப்பார். பூர்வீக சொத்து விவகாரங்களில் புதிய பிரச்சினைகள் தோன்றக்கூடும். உடன் பிறந்தோருடன் இணைந்து குடும்பப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள்.

உத்யோகஸ்தர்களுக்கு அலுவலகத்தில் ஞாபகமறதியால் அவதி இருக்கும். சிறுதொழில் செய்வோருக்கு கூடுதல் உழைப்பும் குறைந்த லாபமும் கிடைக்கும்.

வியாபாரிகள் புதிய நுணுக்கங்களை புகுத்தினால் வெற்றி காண்பார்கள். பொதுவாக சில சிரமங்கள் இருந்தாலும் விடாமுயற்சியும் மன உறுதியும் அதிகரித்து உங்களை ஊக்குவிக்கும்.




சனியின் தாக்கத்தோடு 2017 ஆம் ஆண்டை எதிர்கொள்ளப் போகும் சிம்ம இராசிக் காரர்களது கவலைகள் குருபகவான் அருளால் காணாமல் போகும். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாகவே அமையும். மற்றவர்களிடம் இருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக உணர்வீர்கள். உறவினர்கள் வழியில் பிரச்சினைகள் உருவாகும். நல்லது என்று நீங்கள் ஒன்று சொல்லப் போக அது அடுத்தவர்கள் கண்களுக்குத் தவறான வழிகாட்டுதல் அல்லது அறிவுரை என்று தோன்றும் என்பதால் முற்றிலும் அடுத்தவர்களக்கு அறிவுரை சொல்வதைத் தவிர்க்கவும். அதுமட்டுமின்றி அடுத்தவர் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கியிருப்பது அவசியம்.

நெருங்கிய நபர் ஒருவருக்கு இக்கட்டான சூழலில் உதவி செய்ய இயலாமல் தர்ம சங்கடமான சூழலை எதிர்கொள்ள நேரும். ஏப்ரல், மே மாதங்களில் தொழிலில் இடமாற்றம் இருக்கும். பொருளாதார நிலையில் இழப்பு ஏதும் நிகழாத வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டியிருக்கும். வருமானத்தை அசையா சொத்துகளாக மாற்றிக் கொள்வது நல்லது. சொத்துகளை வாங்கும் பொருட்டு கடன்பட நேர்ந்தாலும் கவலைப்படாதீர்கள். வீடு, வாகனம், மனை வாங்கும் வாய்ப்புகள் உருவாகும்.

உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். வீண் குழப்பத்தால் உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்க்கவும். நெருக்கமான நபர் ஒருவரால் ஏமாற்றப்படும் வாய்ப்பு உண்டு.

பெண்கள் கூடுதல் கவனத்துடன் குடும்ப சூழ்நிலையை சமாளிக்க வேண்டியது கட்டாயம். குடும்ப விவகாரங்களை கணவர் துணையுடன் அணுகுவது நலம். சொத்து விவகாரங்களில் இணைந்து செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். முன்பின் தெரியாதவர்களிடம் அதிக எச்சரிக்கை அவசியம்.




ஜென்ம ராசியில் குருபகவான் சஞ்சார நிலையோடு 2017 புத்தாண்டை ஆரம்பிக்கவுள்ள உங்களுக்கு வாழ்க்கையில் மறக்க முடியாத ஆண்டாக அமையும் என்பதில் ஐயமில்லை. வலிமையான ஜாதக அமைப்பு கொண்டவர்கள் இந்த வருடம் நிச்சயம் பிரபல யோகம் அடைவார்கள். இந்தப் புத்தாண்டு பரவலாக நன்மை தந்து வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும். வாழ்க்கையில் இதுநாள்வரை கண்டுணர்ந்த அனுபவத்தால் செய்யும் செயல்களில் நிதானமும், பக்குவமும் கூடுதலாக வெளிப்படும். சுய உழைப்பால் உயர்வு பெறுவீர்கள். தொழிலில் புதிய யுக்திகளை கையாண்டு வெற்றி பெறுவீர்கள்.

உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கும். இதுநாள் வரை உண்மையாக உழைத்து வந்ததன் பலனை இந்த ஆண்டில் அனுபவிக்க உள்ளீர்கள். நெடுநாள்களாக எதிர்பார்த்துக் காத்திருக்கும் வரவு வந்து சேரும். சொத்து சேர்க்கையில் ஈடுபடுவதற்கு சரியான சந்தர்ப்பமாக அமையும். பேச்சில் நிதானம் இருக்கும். அதிகம் பேசாமல் அளந்து பேசி நற்பெயர் காண்பீர்கள். அடுத்தவர்கள் அறிவுரையை அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்தி வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். கூட்டுக் குடும்பத்தில் வசித்து வருவோர் குடும்பத்தினரின் ஒத்துழைப்புடன் எடுத்த பணியை செவ்வனே செய்து முடிப்பார்கள். உடன்பிறந்தோர் உங்களுக்கு உதவி செய்வர்.

வெள்ளிக்கிழமைகளில் அருகில் உள்ள மாரியம்மன் கோயிலுக்குச் சென்று அம்மனை வழிபட்டு வாருங்கள்.

# சித்திரைப்புத்தாண்டு உங்களுக்கு எப்படி?




## துலாம்



வருடத்தின் முற்பாதியில் குரு பகவானின் சாதகமற்ற சஞ்சார நிலை இருப்பதால் எளிதில் முடிந்துவிடும் என்று நினைத்த காரியங்கள் இழுபறியான நிலையில் இருக்கும். ஆயினும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி முதல் குருபகவான் ஜென்ம ராசியில் இடம் பெயரும் காலத்தில் உங்கள் தேவைகள், விரும்பிய காரியங்கள் நடைபெறும். தொழில் போட்டிகள் அகலும். உங்கள் காரியங்களுக்குத் தடையாக இருந்த நபர்கள் தானாக விலகிச் செல்வார்கள்.

மனதை தத்துவ சிந்தனைகள் ஆக்கிரமிக்கும். குடும்பத்தில் அமைதியான சூழல் நிலவும். பொருளாதார நிலையில் சீரான முன்னேற்றம் உண்டு. பேச்சில் நகைச்சுவை வெளிப்படும். உடன்பிறந்தோருடன் இணைந்து பூர்வீக சொத்துப் பிரச்சினைகளில் முக்கியத்தீர்வு காண்பீர்கள். முக்கியமான பணிகளில் உங்களுடைய புதிய திட்டங்கள் வெற்றி பெறும். பிரச்சினைக்கு உரிய காலங்களில் நிதானமான அணுகு முறையால் நற்பெயரோடு வெற்றியையும் பெறுவீர்கள். நெடுநாள்களாக எண்ணியிருந்த முக்கிய காரியம் ஒன்று நடைபெறும்.

பிள்ளைகளின் ஆலோசனைகள் உங்கள் வெற்றிக்குத் துணை நிற்கும். அவர்களின் வாழ்வில் சுபநிகழ்வுகள் நடைபெறத் தொடங்கும். கடன் பிரச்சினைகளைக் கட்டுக்குள் கொண்டு வருவீர்கள். மறைமுக எதிரிகள் வலுவிழப்பார்கள். வாழ்க்கைத் துணையின் கருத்துகளுக்கு முக்கியத்துவம் அளித்து செயல்படுவது அவசியம்.

## விருச்சிகம்



நினைத்த காரியத்தில் வெற்றியைப் பெற்றுத் தரும் 11 ஆம் இடத்தில் குரு பகவான் அமர்ந்திருப்பது உங்களின் எண்ணங்களை நிறைவேற்றும். சனி பகவானின் ஜென்ம சஞ்சார நிலையும் உங்களுக்கு சாதகமான பலன்களைப் பெற்றுத் தரும். திட்டமிடுதலின் மூலம் வெற்றி கண்டு வருவீர்கள். கொண்ட இலட்சியத்தை அடையும்வரை விடாமுயற்சியுடன் செயற்படுவீர்கள். நெடுநாள்களாக மனதில் இருந்த கனவுகள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்தேறும். ஒவ்வொரு செயலையும் செய்து முடிக்க கூடுதல் அலைச்சலைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

ஒரு சிலருக்கு தொழில் முறையில் அந்நிய தேசத்துக்குச் சென்று வரும் வாய்ப்பு உண்டாகும். மனதில் தத்துவ சிந்தனைகள், இரக்க குணம், தியாகம் இடம்பிடிக்கும். தெளிவான சிந்தனை மற்றும் கருத்துகள் மூலம் நற்பெயர் காண்பீர்கள். உங்களது ஆலோசனையின்படி செயற்படுபவர்கள் சிறப்பான வெற்றி காண்பார்கள். பிரச்சினைக்குரிய விஷயங்களை விவேகத்துடன் கையாள்வீர்கள். விளையாட்டு விஷயங்களில் ஈடுபாடு கூடும். சூதாட்டங்கள் போன்ற விஷயங்களில் மனம் லயிக்கும். வீண் விரயத்தை சந்திக்க வேண்டியுள்ளதால் மனதை கட்டுப்படுத்துவது நல்லது.

பெண்கள் ஏழரை சனியின் தாக்கத்தால் அவ்வப்போது குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகளைச் சந்திக்க நேரலாம். ஆயினும் விவேகமான அணுகுமுறையால் எளிதில் சமாளித்து குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழலை உண்டாக்குவீர்கள். கணவரின் மனநிலையைப் புரிந்துகொண்டு செயற்படுவீர்கள். தெளிவான முடிவெடுக்க இயலாத சூழலில் அவரது ஆலோசனைகள் வெற்றி பெற்றுத் தரும். அதே நேரத்தில் கணவர் வழி உறவினர்களோடு கருத்து வேறுபாடு தோன்றும்.

## தனுசு



ஏழரை சனியின் தாக்கத்தோடு புத்தாண்டை எதிர்கொள்ள உள்ளீர்கள். 2017 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதம்வரை சற்று சிரமமான பலன்களை எதிர்கொள்ளும் நீங்கள் அதன் பின் குரு பகவானின் லாப ஸ்தான சஞ்சாரத்தால் சிரமங்கள் சற்று குறையக் காண்பீர்கள். வருடப்பிறப்பின்போது கிரகங்களின் தலைவன் சூரியன் ஜென்ம ராசியில் சஞ்சரிப்பது உங்களுக்கு பலம் சேர்க்கும். சோதனைக்குரிய காலத்திலும் மிகவும் தைரியத்துடனும், மன உறுதியுடனும் செயற்படுவீர்கள். பிடிவாதத்தை விடுத்து விவேகத்துடன் காரியமாற்றுவது நல்லது.

பேச்சில் கடுமையை தவிர்க்கவும். முடிந்தால் அமைதி காப்பது நல்லது. பொருளாதார நிலையில் ஏற்ற இறக்கம் இருக்கும். வரவுக்கும், செலவுக்கும் சரியாக இருக்கும். சிலருக்கு கையிருப்பு கரையும். குடும்பத்தில் அமைதி நிலவும். முன்பின் தெரியாதவர்களிடம் கூடுதல் கவனம் தேவை. உடன்பிறந்த சகோதரனால் தர்ம சங்கடங்களை சந்திக்க நேரிடும். சகோதரியின் மூலம் நன்மை உண்டு. முக்கியமாக பண விவகாரங்களில் நிதானம் தேவை. அடுத்தவர்களுக்காக கடன் வாங்குதல், அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிடுதல் போன்றவற்றில் ஈடுபடக்கூடாது.

வாழ்க்கைத்துணையின் உடல், மன நிலையில் அக்கறை தேவை. வேலைப்பளுவோடு குடும்பப் பொறுப்புகளும் அதிகரிக்கும். எல்லாவற்றையும் சமாளிக்க உங்களை பக்குவப்படுத்திக் கொள்வது அவசியம்.

பிரதி சனிக்கிழமை தோறும் விரதம் இருக்க வேண்டியது அவசியம்.

## மகரம்



2017 ஆம் ஆண்டின் ஆரம்பம் மகர ராசிக்காரர்களுக்கு சாதகமான பலன்களை தரும் வகையில் அமைந்துள்ளது. மனதில் ஸ்திரத்தன்மை உருவாகும். புத்தாண்டு பிறக்கும் நேரத்தில் நிலவும் கிரக சஞ்சார நிலை நீங்கள் நினைக்கும் காரியங்களை எளிதில் நடத்தி முடிக்கும் சாதகமான அம்சத்தில் உள்ளது. தைரியமும், தன்னம்பிக்கையும் உங்களுக்கு எதிலும் வெற்றி பெற்று தரும். குடியிருக்கும் வீட்டில் மாறுதல் செய்ய முற்படுவீர்கள்.

தன ஸ்தானத்தில் அமர்ந்திருக்கும் கேது சம்பாத்யத்தைக் குறைப்பது போல் தோன்றினாலும் மறைமுகப் பொருள் வரவு தொடரும். அதே நேரத்தில் வரவுக்கேற்ற செலவுகளும் வரிசையில் காத்து நிற்கும். சொகுசு வாழ்வுக்காக ஆடம்பர செலவுகளில் அதிக நாட்டம் செல் லும். குடும்பத்தில் சலசலப்பான நிலை தொடரும். விமர்சனங்களைப் பற்றிக் கவலை கொள்ளாது உறுதியாக இருப்பீர்கள். சில விஷயங்களில் தோல்வி உண்டாகும் என்று தெரிந்தே தைரியத்துடன் இறங்கி வெற்றி காண முயற்சிப்பீர்கள்.

தெளிவு மற்றும் அதிகாரமான பேச்சால் உங்கள் கௌரவம், மதிப்பு உயரும். உடன் பிறந்தோருடன் கருத்து வேறுபாடு தோன்றும் வாய்ப்பு உண்டு. வதந்திகளால் குடும்பத்தில் பிரச்சினைகள் தோன்றும். பிள்ளைகளின் வாழ்வில் உங்கள் தனி முயற்சியால் புதிய திருப்புமுனை உண்டாகும். வருடத்தின் முதல் பாதியில் குருபகவானின் பார்வையைப் பெற்றிருக்கும் நீங்கள் பிற்பாதியில் பத்தாமிடத்து குருவால் சிறிது சிரமத்துக்கு ஆளாவீர்கள். நீங்கள் செய்ய நினைக்கும் சுபகாரியங்களை தள்ளிப்போடாது வருடத்தின் முற்பாதியிலேயே செய்து முடித்துக் கொள்வது நல்லது.


## கும்பம்



2017 புத்தாண்டு உங்கள் திட்டங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கும். வருடம் பிறக்கும் கால நேரத்தைக் கணக்கிடும்போது உங்கள் ராசியில் அமர்ந்திருக்கும் செவ்வாயின் துணையால் எடு[illegible] காரியத்தில் தொய்வின்றிச் சுறுசுறுப்புடன் செயற்பட்டு வருவீர்கள். போட்டியாளர்கள் மத்தியில் உங்களின் செயல்வேகம் சிறப்பான வெற்றியை பெற்றுத் தரும். எதிரிகள் காணாமற் போவார்கள். பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்களுடைய சம்பாத்யம் அசையா சொத்துக்களாக உருமாற்றம் பெறும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். சென்ற வருடத்தில் உங்களோடு கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து சென்ற நண்பர்களும், உறவினர்களும் மீண்டும் வந்து சேர்வார்கள். நீங்கள் முன்னின்று செய்யும் காரியங்கள் சிறப்பான வெற்றி பெறும். பொதுக்காரியங்களில் உங்களின் செயற்பாடுகளால் கௌரவம் உயரும். விசுவாசமானவர்கள் துணையுடன் எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். உடன் பிறந்தோர் உதவியாய் இருப்பார்கள். அந்நிய தேசத்தில் வசிக்கும் பெண்களால் நன்மை உண்டாகும். கடன் பிரச்சினைகள் முற்றிலுமாகக் குறையும்.

நெடுநாள்களாக இழுபறியில் இருந்த தொகைகள் வசூலாகும். பிள்ளைகளின் வாழ்க்கை தரம் உயரும். இல்லத்தில் திருமணம், வம்ச விருத்தி போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். அதிகம் பேசாது அளவோடு பேசினாலும் அர்த்தத்தோடு பேசவேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்தி வருவீர்கள். உங்களின் வார்த்தைகள் அடுத்தவர்களுக்கு சிறந்த அறிவுரையாக அமையும். உங்கள் ஆலோசனைகள் வெற்றி பெறும். தியான, யோகா பயிற்சிகள் நிம்மதி தரும்.

## மீனம்



2017 ஆம் ஆண்டு உங்களுக்கு நற்பலன்களை தரும். இல்லத்தில் நெடுநாள்களாகத் தடைபட்டு வரும் சுபகாரியங்கள் இனிதே நடைபெறும். திருமணத்துக்காகவும் புத்திர பாக்கியத்துக்காகவும் காத்திருப் போருக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும். விருப்பங்கள் நிறைவேறும். எதிர்பார்க்கும் காரியங்கள் தடையேதுமில்லாமல் இனிதே நடைபெறும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும். அலைச்சல் அதிகரித்தாலும் எடுத்த செயல்கள் வெற்றி பெறும். பெப்ரவரி மாதம் முதல் பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

அசையாச் சொத்துகளில் முதலீடு செய்யும் வாய்ப்பு உருவாகும். வீடு, மனை, நிலம், ஆகியவை சேரும் நேரம் இது. குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். வருடத்தின் மத்தியில் குடும்பத்தினருடன் தொலை தூர சுற்றுலா செல்வதற்கான வாய்ப்பு உண்டு. உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். முன்னோர்களின் சொத்துகளில் பாகப் பிரிவினைக்கான வாய்ப்புகள் உண்டு. சொத்துகள் விடயத்தில் உடன்பிறந்தோர் உங்களோடு ஒத்துப்போவார்கள். வருடத்தின் பிற்பாதியில் தாயார் வழி உறவினர்களால் சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். தாயார் உடல் நிலையில் கவனம் அவசியம். வருடத்தின் பிற்பாதியில் தனித்து பயணிப்பதைத் தவிர்ப்பது நல்லது.

பிள்ளைகளின் செயல்களால் உங்கள் கௌரவம் உயரும். நெடுநாள்களாக நிலுவையில் இருந்த வழக்குப் பிரச்சினைகள் விரைவில் முடிவுக்கு வரும். கடன் சுமைகள் குறைய ஆரம்பிக்கும்.

# ஏன் சித்திரை 1 தமிழ் புத்தாண்டு?

நாம் ஏன் சித்திரை 1 ஐ தமிழ் புத்தாண்டாய் கொண்டாடுகிறோம். மீண்டும் நம் முன்னோர்கள் மெய்ஞ் ஞானிகள் என்பது நிரூபணமாகிறது.

சித்திரையில் தொடங்கி பங்குனி வரையிலான தமிழ் மாதத்தில், அந்த மாதத்தின் பௌர்ணமி அன்று வரும் நட்சத்திரத்தின் பெயரையே மாதத்தின் பெயராக வைத்துள்ளனர்.

*சித்திரை = சித்திரா பௌர்ணமி*

*விசாகம் = வைசாகம் = வைகாசி விசாகம்*

*அனுசம் = ஆனி*

*பூராடம் = பூராடி = ஆடி*

*சிரவணம் = ச்ராவணி = ஆவணி*

திருவோணம் வடமொழியில் ஸ்ராவண நட்சத்திரம்

*பூரட்டாதி = புரட்டாசி பௌர்ணமி* பூரட்டாதி நட்சத்திரத்தில் வரும்

*அஸ்வினி = ஐப்பசி வடமொழியில்* ஆஸ்வீஜம்

*கார்த்திகை = கார்த்திகை பௌர்ணமி*

*மிருகசீரிடம் = மார்கஷீர்சம் = மார்கழி*

பூசம் வடமொழியில் புஷ்யம் என்பது. இதற்கு தைஷ்யம் என்று மற்றொரு பெயருண்டு. இது தை ஆனது. தை பூசம்

*மகம் = வடமொழியில் மாக = மாசி மகம்*

*உத்தரம் = வடமொழியில் உத்தரப் பங்குனி = பங்குனி உத்தரம்.*

எனவே, தமிழ் மாதப் பெயர்கள் வானசாஸ்திரத்தை அடிப்படை யாகக் கொண்டவை.

ஓர் ஆண்டு என்பது பூமி சூரியனை ஒருமுறை சுற்றிவர ஆகும் காலம். ஒரு வட்டத்தின் முதல் புள்ளியை எப்படிக் கணிப்பது? சுற்றும்போது பூமியின் சாய்வால் சூரியன் வடக்கு - தெற்காக நகர்கிறது. சூரியன் பூமத்திய ரேகையில் நேராகப் பிரகாசிக்கும் மாதத்தை முதல் புள்ளியாய் ஆண்டின் தொடக்கமாகக் கொண்டுள்ளனர் நமது பெரியோர்.

பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள நமது நாட்டுக்கும் இதுதான் சரி (சித்திரை கத்திரி வெயில்). பன்னிரண்டு ராசியால் பன்னிரண்டாகப் பகுக்கப்பட்ட ஆண்டில் நம்மீது நேராக பிராகாசிக்கும் போது சூரியன் மேஷ ராசியில் இருப்பான்.

எனவே தான் மேஷம் முதல் ராசியானது. இப்படி நேராக பிரகாசிக்கும் மாதம் சித்திரை. எனவே தான் சித்திரையில் சித்திரைப் புத்தாண்டு கொண்டாடுகிறோம்.


ஏவிளம்பி வருட இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் அனைவருக்கும் உரித்தாகுக.

NEW SCIENCE WORLD

கணித, உயிரியல் பிரிவுகளுக்கான தமிழ் மொழிமூல, English Medium வகுப்புக்கள்

பௌதிகவியல்
R. குமரன்
R. துகன்

இரசாயனவியல்
டயஸ்
K.T. சிவகுமார்

உயிரியல்
S. எபான் திவாகரன்
V. உமாசங்கா

இணை. கணிதம்
S.S. செந்தில்ராஜ்

விஞ்ஞானப் பிரிவிற்கான தனித்துவமான நிறுவனம்

(C/338)

Navalar Road - B[illegible] Road Junction, Jaffna.
Web : www.physicsocean.com
E-mail : info@physicsocean.com

NEW SCIENCE WORLD



அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்



KIRUBA LEARNERS

No. 1 Driving Training School IN NORTH

கிருபா

Govt. Approved A Grade Driving Training School

சாரதிப் பயிற்சிப் பாடசாலை

அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை
திறமையான சாரதிகள் ஆக வேண்டுமா?
கிருபா லேணர்ஸ் உடன் இணையுங்கள்.

★ தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.

★ வாகன தொழில்நுட்ப வகுப்புகளும் உண்டு.

★ பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், மாதிரி வினாத்தாள் இலவசமாக வழங்கப்படும்.

★ விரைவில் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.

★ எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு விசேட வீதிஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

★ விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்து LEARNER PERMIT பெற்றுத் தரப்படும்.

★ சாரதி தெரிந்துகொள்ள வேண்டிய வாகனம் சம்பந்தமான அடிப்படைக் கல்வி மற்றும் சாரதிக்கான சிறந்த பயிற்சி வழங்கப்படும்.

★ License விண்ணப்பிக்கும் ஒழுங்குகளும் எங்கள் காரியாலயத்திலே செய்து தரப்படும்.

★ உடைந்த, தொலைந்த தெளிவில்லாத License புதுப்பிக்க ஒழுங்கு செய்து தரப்படும்.

★ சர்வதேச லைசன்ஸ் International License பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி உண்டு.

★ இலவச எழுத்துப் பரீட்சை வகுப்புகள்.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்

+ அடையாள அட்டை
+ பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதி)
+ திருமண அத்தாட்சிப் பத்திரம் (பெண்கள் மட்டும்)
+ சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)
+ தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் வழங்கும் மருத்துவச் சான்றிதழ்

தலைமைக் காரியாலயம்
இல.226,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
021 222 4353
021 492 3200



0777225292

எமது கிளைகள்

யாழ். கச்சேரியடி, இல.36
கச்சேரி நல்லூர் வீதி , யாழ்ப்பாணம்.
021 222 6699 , 076 7225 292

இல.227/ 6 கே.கே.எஸ். வீதி
சுன்னாகம். (மதவடி அருகில்)
021 224 2022 , 0714546956.

ஓம் பிளாசா , பருத்தித்துறை வீதி ,
ஆவரங்கால்.
021 222 6688 , 071 242 2622.

பிரதான வீதி, நெல்லியடி.
(பொலிஸ் நிலையம் முன்பாக)
021 300 6550, 0714546958

முதலாம் கடைச் சந்தி, பருத்தித்துறை.
021 4923 201, 0714546961

கண்டி வீதி, சாவகச்சேரி.
(நீதிமன்றம் அருகில்)
021 4923 202, 0712270700.

ஏ9 வீதி, கிளிநொச்சி.
021 228 5505, 0714546955.

வாடியடிச் சந்தி, பூநகரி.
021 320 1818, 071 4546955.

புளியடிச் சந்தி, முல்லை வீதி,
விசுவமடு.
0213201515, 0714546955.

நாச்சிக்குடாச் சந்தி, மன்னார் வீதி,
முழங்காவில்.
021 3006544, 071 4546955
இல.94, பிரதான வீதி, மன்னார்
023 225 1656, 0778472732

216, ஏ9 வீதி , வவுனியா.
(வசந்தி திரையரங்கு முன்)
0242227777, 0777100444

(C-325)

# சித்திரை வருட பிறப்பின் தொன்மையும் வழக்காறும்

கை.பேரின்பநாயகம்

இன்றைய நாளில் விசு புண்ணிய காலத்தில் சூரிய தேவன் - சூரியக் கடவுள் - தட்சணாயத்தில் இருந்து பூமத்திய கோட்டைக் கடந்து உத்தராயணத்தில் மேட ராசியில் கால் வைக்கும் நேரம் சூரிய சங்கிராந்தி என அழைக்கப்படும். இந்து காலக்கணிதமான பஞ்சாங்கம் பன்னிரண்டு பகுதிகளாகம் பிரிக்கப்பட்டுள் ளது. (தற்பொழுது) பன்னிரண்டும் பன்னிரு பெயர் கொண்டழைக்கப்படும். இதில் முதலா வதாகக் கொள் ளப்படுவது மேசமாகும். கடைசி மீனம். மாதம் ஒன்றில் ஒவ்வோர் இராசியையும் கடக்கும் நேரம் சுபநேரமாக கொள்ளப்படும். மாதப் பிறப்பென்று மகத்துவமாகக் கொண்டாடப் படும்.

சித்திரை மாதம் சிறப்பான மேஷராசிக் காலம். வருட ஆரம்பமாக இந்துக்களால் கொள் ளப்படுகிறது. ஒரு விவ சாய வாழ்வு முறையை கலாசாரத்தைக் கொண் டதும்,நினைவுக்கெட்டாத காலத்தில் இருந்து ஞானி களாலும் ரிஷிகளாலும் கணித்த விஞ்ஞான பூர் வமான காலக்கணிதமே பஞ்சாங்கமாகிறது.



### சிந்துகங்கை வெளி

பயிரிடுதல், நீர்பாய்ச் சுதல், அறுவடை செய்த லுக்குரிய மழை, சூரிய ஒளி, ஆறுகள் அருவி களின் நீரோட்டமான சகலதும் அமையும் சிந்து கங்கைச் சமவெளி இந் துக்களின் இருதயமாக அமைய இதுவே காரண மாக இருந்தது.

பஞ்சாப் எனப்படும் ஐந்து நதிகள் சங்கமிக் கும் ''பஞ்சாப்'' பிரதானமானது. இங்கு ரவி, ஜெலம், ஜெனாப், சட் லெச், பயஸ் எனப்படும் ஐந்து நதிகள் பாய்ந்து இந்து தர்மத்தின் பஞ்ச சீலக் கொள்கைகளின் தோற்றத்துக்குக் காரண மாயின.

இந்து நதி தேசத்து மக்கள் சூரிய கடவுளுக்கு நன்றி செலுத்தும் முகமாகப் புதுவருடப் பிறப்பை ஆரம்ப காலத்தில் கொண்டாடினர். நகரவாக்கம் பெருக புதுவருடப்பிறப்பின் தாற் பரியங்களும் வழக்காறுகளும் மாற்றமடைந்தமை வியப்பானதல்ல.

ஒவ்வொரு மாதப் பிறப்பும் புனிதமான கொண்டாடல் களுக்கு உரியதானதுடன், ஆன் மீக ரீதியான பிதிர் வழிபாடுகளும் அதற்கமைவாக வளர்ந்தன. இந்து நதிகளுக்கு (சிந்து நதி) கிழக்காக கங்கையெனும் புனித நீர்கங்கையும் இறை கொடையாகிறது.

இந்த நதியின் நீர் இதில் கலக்கும் மாசு - மாசை அகற்றி சுத்தப்படுத்தும் இயல்பைக் கொண்டு இருப்பதாக அண் மைக்கால ஆய்வுகள் தெரிவிக் கின்றன. அதிலும் ஆற்றின் திருப்பங்கள் வடக்கு நோக்கித் திரும்பிப் பாயும் நதிப் பாகங்க ளில் தெய்வீகத்தன்மை அதிக மாகப் பெருகுவதாகப் பெரியவர்கள், ஞானிகள், விஞ்ஞானிகள் தெரி விக்கின்றனர்.

அங்கு ஆரம்பத்தில் ஐயாயி ரம் ஆண்டுகளுக்கு முன் திராவிடர்கள் வாழ்ந்திருந்தனர். இவர்கள் பேசிய மொழி தமிழ் மொழியை ஒத்திருந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதன்பின் அங்கு வந்து சேர்ந்த ஆரியரும் இந்து வருடப் பிறப்பை ஆன்மீக ரீதியாகக் கொண்டாடினர்.


தமிழ் வருடப்பிறப் பெனவும் தமிழ் சிங் கள வருடப்பிறப்பெனவும் இலங்கையில் குறிப்பிடப்படும் இந்த வருடப்பிறப்பு தென் இந்தியாவில் சிறப்பாகக் கேரளா, தமிழ்நாடு, பாண்டிச்சேரி, காரைக்கால் போன்றவற்றிலும் வடஇந்தியாவிலும், பஞ்சாப், ஹரியானா கிமாசல பிரதேசம் வங்காளம், இந்துக்கள் அதிகம்வாழும்நேபாளம்அசாம் வங்காள தேசம் போன்ற கங்கை மற்றும் இந்துநதிபாயும் இடங்களிலும் இன்றும் பெருவழக்கில் கொண்டாடப்படுகிறது.

### புத்தாண்டு எதிர்பார்ப்பு

நாடு செழித்து இனங்களுக்கிடையே நல் லுறவு பேணப்பட வேண்டும் என்பதே காலங்காலமாக எதிர்பார்க்கப்படும் ஒரு நல்ல விடயம். இணக்கமான போக்கு மதரீதியாக எதிர்பார்க்கப்படும். இறைவனின் கோவில் களுக்குச் செல்வதும், பரிசில்கள் வழங்குவதும் உறவுகளை வீட்டுக்கு அழைப்பது என்பதும் மரபு ரீதியான உறவாடலாகும். அது உறவைப் புதுப்பித்தல் என்பதே சரியானது.

இந்த உலகம் அற்புதமானது. இங்கு உறவு களோடு வாழ்வதற்குக் கொடுத்து வைக்க வேண்டும். அந்த நன்றிக் கடனை செலுத்தவே கோவில்களுக்கும் அங்கிருந்து நெருங்கிய நண்பர்கள், உறவினர் வீடுகளுக்குச் செல்ல வேண்டும்.

புதிய புதிய பட்சணங்களை ஆக்கி, படையல்இட்டு,புசிக்கவேண்டும். ஏழுபரித்தேர் ஏறி வரும் சூரியக்கடவுள் சகல பாக்கியங்களை தருவார் என்பது இந்துக்களின் நம்பிக்கை.





# தமிழர் தலைநிமிர்ந்து வாழ நல்லாட்சி வழிவகுக்கும் என நம்பிக்கை கொள்வோம்

**புத்தாண்டு செய்தியில் அமைச்சர் டெனிஸ்வரன்**



தமிழர்களாகிய நாம் இனியாகிலும் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு, நல்லாட்சி அரசு வழி வகுக்கும் என்று நம்பிக்கை கொண்டு, புத்தாண்டை கொண்டாடத் தயாராவோம்.

- இவ்வாறு வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் சித்திரைப் புத்ததாண்டு வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் -

இன்றைய தமிழ் சிங்களப் புத்தாண்டை, மருத்து நீர் தேய்த்து, பழையன களைந்து, புத்தாடை அணிந்து, புத்துணர்வோடு தெய்வ தரிசனம் பெற்று, சகலமும் சிறக்க பிரார்த்தனை செய்து, களிப்போடு புத்தாண்டை வரவேற்றுக் கொண்டாடும் எனது அன் பிற்கும், பாசத்திற்கும், மரியாதைக்கும் உரித்தான தமிழ் சிங்கள மக்கள் அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

ஒருவருக்கொருவர் சமாதானமாயும், இன மத பேதங் களை கடந்து, நல்ல எண்ணங் களுடன் நம்முடைய எதிர்கால சந்ததிக்கு நாம் நல்லதை கற்றுக்கொடுக்கிறவர்களாக காலத்தின் ஓட்டத்தில் நாமும் பயணிப்பவர்களாய், இன்றைய இந்த சித்திரைப்புத்தாண்டு நமக்கெல்லாம் நிறைந்த சாந்தியும் சமாதானமும் தரவேண்டும் என்றும், இன்றைய நாளில் மனதிலே துயருற்று நமக் கெப்போ விடிவென்று ஏங்குகின்ற ஒவ்வொரு மனிதர்களுக் கும் பிறந்துள்ள இந்தப் புத்தாண்டு சகல நன்மைகளையும் வழங்கி சௌபாக்கியமுள்ளவர்களாய் மாற்ற எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்தித்து, தமிழர்கள் நாம் தலைநிமிர்ந்து வாழ தற்போதைய நல்லாட்சி அரசு வழிவகுக்கும் என்ற நம்பிக்கையோடு மீண்டும் சகலருக்கும் எனது சித்திரைப் புத்தாண்டு சந்தோஷமான வாழ்த்துகளையும் அன்பையும் தெரிவித்து நிற்கின்றேன் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## வருவாய் பெருக... வருவாய் புத்தாண்டே!

புத்தாண்டு பிறந்து இப்போ
தத்தித் தவழுது ! தவறி விழுகுது !
நடந்து நிற்கப் பார்க்குது !
கடந்த ஆண்டு மறைந்தாலும்,
தடம் இன்னும் தெரியுது !
வித்தைகள் தொடருணும் !
விஞ்ஞானம் சீராய்த் தழைக்கணும் !
சித்தர்கள் தலை தூக்கணும் !
பித்தர்கள் தெளிவாகணும் !
புத்திகள் கூர்மை ஆகணும் !
யுக்திகள் புதிதாய்த் தோன்றணும் !
சண்டைகள் குறையணும் !
சமய இனத்தவர் ஒன்றாய் வசிக்கணும் !
பெண்களைக் கண்கள் போல் காக்கணும்.
திறமைகள் ஒன்றாகி வலுக்கணும்
வறுமை குன்றி வருவாய் பெருக்கணும்!

சி. ஜெயபாரதன்.

## மக்கள் துயர் களையும் புத்தாண்டாய் மலர்க!


ஏ விளம்பி புத்தாண்டே வருக!
எம் இதயம் மகிழும் செய்திகள் தருக
ஏக்கமுடன் தூக்கமின்றி அலையும்
ஏதிலிகளா நாம் என ஏங்கிடும்
எண்ணற்ற எம் உறவுகள் உன் வரவால்
ஏற்றம் பெற ஏ விளம்பி ஆண்டே
ஏற்றத்துக்கு விடிவான புத்தாண்டாய் மலர்க!

மதங்கள் கடந்து மனிதம் மலர
மாதங்கள் பன்னிரண்டு ஆளவந்த ஆண்டே
மனங்கள் இணைந்து மனித மாண்பு மலர
மாண்புறும் மனிதத்தின் புனிதத்தை காக்க
மனந்திறந்து நல் உறவாடும் மனைகளும்
மக்கள் மன நிறைவுடன் வாழ்த்துக் கூறும்
மகிழ்ச்சி பொங்கும் ஏ விளம்பியை ஏற்று மகிழ
மக்கள் துயர் களையும் புத்தாண்டாய் மலர்க!

மதங்கள் கூறும் அன்பு,கருணை, ஆதரவு
மனங்களில் மறை உறவால் நிறைந்து வாழ
மனிதம் போற்றும் மறை உறவை வளர்த்து
மதம் கடந்து மனித உறவுகள் மகிழ்வுற
மகிழ்ச்சிதரும் ஏ விளம்பி ஆண்டை
வரவேற்போம்!!

செ.யோசப்பாலா
(உசைமுக சீராளன்)


அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



**ரமணன் டிசைனிங்**

**ரமணன் பியூட்டி பார்லர்**

1.மணப்பெண் அலங்காரம்
★ மருதாணி இடுதல்
★ நக அலங்கரிப்பு
★ சாறி பிலீட்
02. பேசியல்/முக ஒப்பனை
03. ஐபுறோ திரெட்டிங்
04. கெயார் கட்டிங்
★ ஸ்ரெயிட்டினிங்
★ பேமிங்
★ மெனிக்கியூர்
★ பெடிக்கியூர்
போன்ற அனைத்து விதமான அலங்கரிப்பு வேலைகள் சிறந்த முறையில் செய்து கொள்ளலாம்.



**ரமணன் பான்சி**

01. பாடசாலை உபகரணங்கள்
02. கிறீம் வகைகள்
03. நறுமண வகைகள் [சென்ட்]
04. பெணகளுக்கான கைப்பைகள் [Hand bag]
05. சூ/பாட்டா வகைகள்
06. அன்பளிப்புப் பொருள்கள்
07. அழகு சாதனப் பொருள்கள்



போன்ற அனைத்து விதமான பொருள்களும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**ரமணன் பந்தல் சேவை**

01. பந்தல்
02. கதிரை
03. நவீன மணவறை
04. பூமாலை
05. பலூன் டிசைனிங்
06. நிழற்குடை, மேசை, கதிரை
07. கம்பளங்கள், நில விரிப்புகள்
08. செல்வ் சேவிஸ் பாத்திரங்கள்
09. சமையல் பாத்திரங்கள்
10. கேக், ஐசிங், றெஜிபோம் கேக் ஐசிங்
11. குளிர் ஊட்டப்பட்ட வான்
12. குளிர் ஊட்டப்பட்ட கார்



திருமணத்துக்குரிய சகல விதமான பொருள்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளலாம்.

கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி மத்தி, அளவெட்டி.

T.P: 077 491 1974, 021 221 5666, 070 277 2990 Mail: uramanandesign@gmail.com


(C/329)

# தமிழருக்கும் வாழ்வென்று முரசு கொட்டுமா?



போரிலே பறிபோன காணிநிலம்
புரிந்துணர்வின் பின்னரும் விடுபடுமா?
தேரிலே பவனிவந் தாண்டவர்கள்
தேர்தலில் மண் தோர்த்தனர் செய்தவறால்?
மாரியே காலம்மாறிப் பெய்கிறது
நல்லாட்சி நாட்டிலே நிலைத்திடுமா?
'பாரிபோல்' உரிமைக் கொடிபடர
அரசுரிமை பெற்றிடவா புத்தாண்டே!

இரண்டாயிரத்து பதினேழு பிறக்கின்றது
இலங்கையில் புதுயுகம் மலர்ந்திடுமா?
இரண்டு சக்திகளும் இணைந்துள்ளன
இருயினமும் சமாதானம் கொள்ளுமா?
முரண்பட்டே முடிந்திடும் பேச்சுகளிங்கு
முடிவொன்று கிடைத்திட எட்டிடுமா?
தரங்கெட்ட பேச்சுக்கள் மறைந்திங்கு
தமிழர்க்கும் வாழ்வென்று முரசு கொட்டுமா?



- அபிர்ராஜன் -
(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்)


# Northern Central Hospital Eye Care

## நவீன தொழில்நுட்பத்துடனான அனைத்து கண் சத்திர சிகிச்சைகளுக்கும்....



நொதேண் சென்றல் வைத்தியசாலை லேசர் தொழில்நுட்பத்துடன் கூடிய நவீன முறையில் மிகத் துல்லியமாகவும் விரைவாகவும் செய்யக்கூடிய cataract சத்திரசிகிச்சைகளை ஹேமாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆரம்பித்துள்ளது.

வடக்கின் முன்னணி கண் சத்திரசிகிச்சை வல்லுநர்களின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதுடன் சத்திரசிகிச்சைகளை உங்களுக்கு விரும்பிய நேரத்தில் செய்து கொள்ளலாம்.

Cataract சத்திரசிகிச்சைக்கு வேண்டிய உயர்தர லென்ஸ் மற்றும் அனைத்து பொருள்களையும் மலிந்த விலையில் நொதேண் சென்றல் வைத்தியசாலையிலேயே பெற்றுக்கொள்ளலாம்.

# யாழ். நொதேண் சென்றல் வைத்தியசாலை

**நவீன தொழில்நுட்பத்துடனான அனைத்து கண் சத்திர சிகிச்சைகளுக்கும்**

நொதேண் சென்றல் கண் சிகிச்சை மையம்

Northern Central Hospital EYE CARE







» வடக்கின் முன்னணி கண் சத்திர சிகிச்சைவல்லுநர்களின் ஆலோசனைகள்.

» இலவச கண் பரிசோதனைகள். (Vision testing)

» பார்வைச்சக்திக்குரிய சோதனை (Optical biometry).

» காலதாமதமின்றிய சத்திரசிகிச்சை முற்பதிவுகள்.


» Cataract சத்திரசிகிச்சைக்கு வேண்டிய உயர்தர லென்ஸ் மற்றும் அனைத்து பொருள்களும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே இடம்.

» நவீன லேசர் முறையில் மிகக் குறுகிய நேர சத்திரசிகிச்சை.

» சத்திரசிகிச்சையின் பின் வைத்தியரின் ஆலோசனை தவிர விடுதியில் தங்கியிருக்கத் தேவையில்லை.

அனைவருக்கும் ஏவிளம்பி சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**வடக்கில் CT Scan மற்றும் MRI சேவைகளைக் கொண்ட ஒரேயொரு தனியார் வைத்தியசாலை**





**CT என்றால் என்ன?**

Computed Tomography (CT)என்பது உடல் பாகங்கள் மற்றும் இழையங்களின் நுண்ணிய அமைப்புக்களை பல்வேறு கோணங்களில் கதிர்வீச்சை (X-ray) அனுப்பி அவற்றின் படங்களைக் கணினி மூலம் அவதானிக்கும் ஒரு தொழில்நுட்பமாகும்.

**MRI ஸ்கேன் என்றால் என்ன?**

MRI ஸ்கேன் என்பது வலியில்லாமல் கதிரியக்க அலைகளையும் சக்தி வாய்ந்த காந்தங்களையும் கணினியுடன் தொடர்புபடுத்தி கதிர் வீச்சு பயன்பாடு இல்லாமல் உள்ளுறுப்புகள் மற்றும் திசுக்களை தெளிவாகவும் துல்லியமாகவும் படமெடுக்க பயன்படும் ஒரு நவீன தொழில்நுட்பமாகும்.

Northern Central Hospital
342, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263 Fax: 021 221 6677
E-mail:nchjaffna@gmail.com Website: www.nchjaffna.com

# ஏவிளம்பிப் புத்தாண்டே ஏற்றம் பல தர வருக! வருக!

இன்று புத்தாண்டு தினமாகும். இன்று பிறந்திருக்கும் சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டான ''ஏவிளம்பி ஆண்டு'' எமது நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் ஆனந்தம் நிறைந்த அமைதியான, நிம்மதி யான நல்வாழ்வுக்கு வழிசமைத் துத் தர வேண்டும்.

இதுகாறும் பட்ட இன்னல்கள் யாவும் நீங்கப் பெற்று மனநிம்மதியும் மன மகிழ்ச்சியும் ஆறுதலும் கிடைக்க வேண்டும். ஈழ நாட்டு மக்கள் எல் லோரும் உற்றார், உறவினர்களுடன் சொந்தங் கொண்டாடி மன மகிழ்ச்சி யுடன் வாழ வேண்டும்.

கொலை, களவு, காமம், பொய், ஏமாற்று யாவும் அறவே நீங்க வேண்டும். வாலிப வயதினர் வாள் வெட்டு, கத்தி வெட்டு என்றில்லாமல் பெற்றோரைக் கனம் பண்ணி மூத் தோர் சொற் கேட்டு, நல்ல வழியில் சென்று நாட்டின் அபிவிருத்திக்கு அடி கோல வேண்டும். ஒருவருக் கொருவர் உதவிகள் புரிந்து, நல் லெண்ணங்களைப் பரிமாறி எல்லோ ரும் இன்புற்றிருக்க ஆவன செய்ய வேண்டும்.

''இன்பமே எந்நாளும் துன்ப மில்லை'' என்றபடி அனைத்து மக்களும் ஆனந்தமான மகிழ்ச்சி நிறைந்த மங்கல வாழ்வில் திளைக்க வேண்டும். இந்த மண்ணில் இனி அமைதி, சமாதானம் நிலைத்திருக்க வேண்டும். ஒருவர் மனதை ஒருவர் புரிந்து கொண்டு சொந்த பந்தங்களு டன் உறவு கொண்டாடி மகிழ்ச்சியில் திளைத்திருக்க வேண்டும்.

இன்று பிறந்திருக்கும் ''ஏவிளம் பிப் புத்தாண்டே! எமக்கு ஏற்றங்கள் பல தர வருக வருக'' என்று உளமார மகிழ்ந்து வரவேற்று இதய சுத்தி யுடன் முகம் மலர்ந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

ஏவிளம்பியே! நீ ஏற்றமுடன் திகழ்ந்து எல்லோருக்கும் மன மகிழ்ச்சி நிறைந்த மங்கள வாழ்வருள வேண்டுமென்று வரவேற்று நிற்கி றோம்.

''வாழ்க வாழ்க வாழ்க ஏற்றந்தா
வருக வருக வருக''



கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்


அனைவருக்கும் ஏவிளம்பி புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

SAARANGA
JEWELLERY
MONEY
EXCHANGER



157. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6972
021 222 8869.

வெங்கடேஸ்வரா எக்ஸ்பிரஸ்

Booking: COLOMBO JAFFNA COLOMBO
Colombo : 0773988776
Jaffna : 077 3929359

Super Luxury A/C Coach
Colombo
No.217, Central Road,
Colombo-12
Tel : 0115234588
Jaffna
No.157/1, Kasthuriyar Road,
Jaffna.



அனைவருக்கும் இனிய சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்

Since 1982
Rube Jewellery
நம்பிக்கை, கைராசி மற்றும் தரம்குன்றா



தங்க நகை உலகில் 34 வருடங்கள் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ரூபி ஜுவல்லறி

(C-326)

எதிர்வரும் 28.29 ஆம் திகதி அட்சய திருதியை தினத் தன்று எமது ரூபி ஜுவல்லறியில் தங்கத்தினை கொள் வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்புக் கள் காத்திருக்கின்றன. குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்து பெறுமதி மிக்க பரிசில்களை அள்ளிச் செல்ல அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
வாடிக்கையாளர்கள் முற்கூட்டியே தங்களுக்கு விரும் பிய நகைகளை ஓடர் செய்து சிரமத்தை தவிர்த்துக் கொள் ளுங்கள்.



இல: 227— 229, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:021 2216919, 0777 344074

அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வட இந்திய பத்திரிநாத், கேதாரநாத் கங்கோத்திரி, ஜமுனோத்திரி காசி யாத்திரை

நாள்கள்: 20 ஆரம்பம்: 10.06.2017

செல்லுமிடங்கள் சுருக்கமான விவரம்

டில்லி, சுற்றிப் பார்த்தல் (அட்ஷயதாம் உட்பட), ரிஷிகேஸ், ஸ்ரீநகர், கௌரி குண்டம், கேதார் நாத், (சிவன் அர்த்தநாரீஸ்வரர் ஆன இடம்), கங்கோத்திரி கங்கை உற்பத்தி ஆகுமிடம், கங்காமாதா கோவில் ஜமு னோத்திரி ஆலயம் இன்னும் பல ஆலயம், இடங்களும் காணலாம்.

கேதாரநாதர், தரிசனம், மானா, சரஸ்வதி நதி உற்பத்தியாகுமிடம், டிம்பிற் கோட், ஹரித்துவார், சுற்றிப்பார்த்தல், 10 இடங்கள், பத்திரிநாத் 108, வைஸ்ணவ தலங்களில் முதன்மையானது, விஷ்ணு ஆலயம், மதுரா, கிருஷ்ண ஜென்ம பூமி, ஆக்ரா, (தாஜ் மகால்) பார்க்கலாம், அல காபாத், (கங்கா, ஜமுனா, சரஸ்வதி) திருவேணி சங்கமம், கயா, கால மானவர்களுக்கு பிதிர்க் கருமம் செய்யுமிடம், புத்தகயா, புத்தாலயங் கள், காசி (வாரணாசி), விஸ்வநாதர் சிவன், உட்பட 15 இடங்கள் தரிசிக் கலாம். காசியில் 3 நாள்கள் தங்கல், இராமேஸ்வரம், திருப்புல்லாணி, உத் திரகோச மங்கை, நவபாஷாணம், மதுரை, மீனாட்சி சுந்தரேஸ்வரர், சென்னை வருகை, ஒருநாள் சொப்பிங், மறுநாள் நாடு திரும்பல்.

தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை

5 விமானப் பயணம், (விமான ரிக்கெட்) சுற்றிப் பார்க்க, இந்தியா வில் AC வாகன வசதி, மடப்பள்ளி சமையல் ஆள்கள், உடனுக்குடன் சமைத்த மூன்றுவேளை உணவு, காப்பி, ரீ, மினரல் வாட்டர், குடிநீர், 2 பேருக்கு 2 கட்டில் மெத்தை, குளியலறை, (வெஸ்ரன் கொமட்) இணைந்த (NON/ AC) அறைகள், படகுக் கட்டணங்கள் உட்பட (தொங்கு ஊஞ்சல் கட்டணம், மானுசாதேவி சண்டிதேவி மந்திர், இராமேஸ் வரம் 21 தீர்த்தம் ஆடல், கட்டணம் 300 ரூபா வரை ஆகும். இது தங்கள் பொறுப்பு பாஸ்போட் போட்டோக் கொப்பி, படமுள்ள பக்கம் 1-1 சி றிய கலர் பாஸ்போட் சைஸ் படமும் அனுப்பி பதிவு செய்யவும் மேலும் விவரம் தேவை எனில் கேட்டு அறியவும்.

கலாநிதி T. ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
No.59,3/6, Sea Street, Colombo - 11
Tel: 0777 68 0102, 0777 36 2154
E-mail: sriranganathan2601@gmail.com
Facebook - sridevisriranganathanthuraiappa

(C-322)